# பகுதி II


| | பக்கம் |
|---|---|
| மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும் | I - LXIV |
| ஆளணி | LXIV - LXVII |

# மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்


| | பக்கம் |
|---|---|
| கணக்குகளும் வங்கித்தொழில் தொழிற்பாடுகளும் | I |
| நாணய வெளியீடு | XII |
| வங்கித்தொழில் அபிவிருத்தி | XIII |
| வங்கி மேற்பார்வை | XVI |
| வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் | XVIII |
| அபிவிருத்தி நிதி | XXIII |
| கிராமியக் கொடுகடன் | XXXV |
| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் | XL |
| கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி | XLIV |
| ஊழியர் சேமநிதியம் | XLV |
| செலாவணிக் கட்டுப்பாடு | XLVII |
| பொதுப் படுகடன் | LI |
| பிரதேச அலுவலகங்கள் - மாத்தறை, அநுராதபுரம், மாத்தளை | LIV |
| செயலகம் | LV |
| தகவலும் வெளியீடுகளும் | LVI |
| ஆராய்ச்சி நடவடிக்கைகள் | LVIII |
| அளவீடுகளும் தரவுச் சேகரிப்புகளும் | LVIII |
| தரவு செய்முறைப்படுத்தல் | LX |
| பயிற்சி | LXI |
| முகாமைத்துவ கணக்காய்வு | LXI |
| பணிமனை | LXII |
| நலன்புரி | LXIII |
| பாதுகாப்புப் பணிகள் | LXIV |
| ஆளணி | LXIV |

# மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்

## கணக்குகளும் வங்கித் தொழில் தொழிற்பாடுகளும்

1993 இறுதியில் மத்திய வங்கியின் மொத்தச் சொத்துக்கள்/பொறுப்புக்கள் ரூ. 1,336,340 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 32 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தன. 1991 இனை விட 1992 இல் வங்கியின் சொத்துக்கள்/பொறுப்புக்களின் அதிகரிப்பு ஏறத்தாழ 5.7 சதவீதமாக இருந்தது. மத்தியவங்கியின் 1993 திசெம்பர் 31 ஆம் நாளன்று உள்ளவாறான ஐந்தொகையும் 1993 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வங்கியின் இலாப நட்டக் கணக்குகளும் அட்டவணை 2.1 இல் தரப்பட்டுள்ளன.

சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு அனைத்துவகைளிலும் ஒரே சீராகப் பிரதிபலிக்கப்படவில்லை. வங்கியின் பன்னாட்டு ஒதுக்கு ரூ. 396,630 இலட்சத்திலிருந்து ரூ. 758,960 இலட்சத்திற்கு 91.4 சதவீதத்தினால் உயர்வடைந்தது. பன்னாட்டு ஒதுக்கு இப்பொழுது மிகப்பெரும் சொத்துவகையாக மாறியுள்ளதுடன் மொத்தச் சொத்துக்களில் இது 1992 இறுதியின் 39.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 56.8 சதவீதத்திற்கு வகைகூறியது. ஏனைய சொத்துக்கள் ரூ. 146,870 இலட்சத்திலிருந்து ரூ. 274,640 இலட்சத்திற்கு 87 சதவீதத்தினால் அதிகரித்தன. எனினும் வங்கியின் உள்நாட்டுச் சொத்துக்கள் ரூ. 469,040 இலட்சத்திலிருந்து ரூ. 302,730 இலட்சத்திற்கு குறைவடைந்து 35.4 சதவீதங்கொண்ட வீழ்ச்சியைப் பதிவு செய்தன.

உள்நாட்டுச் சொத்துக்களின் வகையுள், 81.9 சதவீதங் கொண்ட மிகப் பெரும் வீழ்ச்சி அரச மற்றும் அரச உத்தரவாதப் பிணைகளின் துணைவகையில் காணப்பட்ட வேளையில் வர்த்தக வங்கிகள் மற்றும் ஏனைய கொடுகடன் நிறுவனங்களுக்கான நடுத்தர நீண்டகால் கொடுகடன் வசதிகளும் வர்த்தக வங்கிகள் மற்றும் பிரேதச கிராமிய அபிவிருத்தி வங்கிகளுக்குமான குறுங்கால முற்பணங்களும் முறையே 14.2 சதவீதத்தினாலும் 18.5 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை அரசிற்கான கடன்களும் மற்றும் முற்பணங்களும் நிதியியல் நிறுவனங்களுக்கான பகிர்ந்தளிப்புக்களும் முறையே 10.9 சதவீத, 4.1 சதவீத அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன.

பொறுப்புக்கள் பக்கத்தில், சுற்றோட்டத்திலுள்ள நாணயம் ரூ. 304,960 இலட்சத்திலிருந்து ரூ. 359,490 இலட்சத்திற்கு 17.8 சதவீதத்தினால் அதிகரித்தது. மத்திய வங்கியுடனான மொத்த வைப்புக்கள் ரூ. 357,650 இலட்சத்திலிருந்து மீளாய்விற்குரிய ஆண்டில் ரூ. 514,620 இலட்சத்திற்கு 43.9 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. பொறுப்புக்களில் வைப்புக்கள் தனியொரு பெரும் வகையாக இருப்பதுடன் மொத்த பொறுப்புக்களில் 38.5 சதவீதத்திற்கும் வகைகூறின. வைப்புக்கள் வகையில் பன்னாட்டு அமைப்புக்கள், வெளிநாட்டு அரசுகள், வெளிநாட்டு வங்கித்தொழில் நிறுவனங்கள் என்பனவற்றின் வைப்புக்கள் 58.7 சதவீதத்தினால் அதிகரித்தன. வர்த்தக வங்கிகள் மற்றும் அரச முகவர்களினதும் நிறுவனங்களினதும் வைப்புக்கள் முறையே 42.9 சதவீதத்தினாலும் 46.2 சதவீதத்தினாலும் உயர்வடைந்தன. அதேவேளை அரசின் வைப்புக்கள் 32.2

# இலங்கை மத்திய வங்கியின்

## 1992 திசெம்பர் 31 இலும்

| 1992 திசெம்பர் 31 | | பொறுப்புக்கள் | 1993 திசெம்பர் 31 | |
|---|---|---|---|---|
| ரூபா | ரூபா | | ரூபா | ரூபா |
| | | **மூலதனக் கணக்குகள்** | | |
| 15,000,000 | | முதல் | 15,000.000 | - |
| 985,000,000 | 1,000,000,000 | மிகை | 985,000,000 | 1,000,000,000 |
| | | **சுற்றோட்டத்திலுள்ள நாணயம்** | | |
| 29,270,372,778 | | தாள்கள் | 34,579,420,385 | |
| 1,225,882,746 | 30,496,255,524 | குத்திகள் | 1,369,856,920 | 35,949,277,305 |
| | | **வைப்புக்கள்** | | |
| 2,654,614,089 | | அரசு | 1,800,560,301 | |
| 35,910,658 | | அரச முகவர் நிலையங்களும் நிறுவனங்களும் | 52,469,885 | |
| 14,325,662,158 | | வர்த்தக வங்கிகள் | 20,466,190,194 | |
| 17,827,214,959 | | பன்னாட்டு அமைப்புக்கள், வெளிநாட்டு அரசு, வெளிநாட்டு வங்கித் தொழில் நிறுவனங்கள் | 28,291,350,601 | |
| 538,427 | | திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்ட ரூ. 27,201,000/- நீங்கலாக கட்டாயச் சேமிப்பு நிதியம் | 182,897 | |
| 921,195,999 | 35,765,136,290 | ஏனையவை | 850,730,033 | 51,461,483,911 |
| | 4,925,000,000 | நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியம் | | 4,925,000,000 |
| | 537,750,000 | மூலதன உதவுதொகைக் கணக்கு | | 560,250,000 |
| | - | மத்திய வங்கிப் பிணைகள் | | 2,155,000,000 |
| | 28,529,936,566 | ஏனைய பொறுப்புக்களும் கணக்குகளும் | | 37,583,269,681 |
| | 101,254,078,380 | | | 133,634,280,897 |

## 1993 திசெம்பர் 31 ஆம் நாள் முடிவுற்ற

| 1992 திசெம்பர் 31 | | 1993 திசெம்பர் 31 |
|---|---|---|
| ரூபா | | ரூபா |
| 11,070,337,959 | பொதுச் செலவுகளுக்கும் (சம்பளங்களையும், நாணயத் தாள்கள், குத்திகள் மீதான செலவையும், காணியும் கட்டடங்களினதும், அலுவலகத் தளபாடங்களினதும் மீதான பெறுமானத் தேய்வையும், உள்ளடக்கும்) நாணயவிதிச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் நியதிகளின்படி செய்யப்பட்ட ஒதுக்குகளுக்கும். | 11,097,761,934 |
| | **ஆண்டுக்கான தேறிய இலாபம்** | |
| 1,000,000,000 | நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 39 (இ) இன் நியதிகளின்படி அரசிடமிருந்து மத்திய வங்கிக்கு வர வேண்டிய பொறுப்புக்களின் ஒரு பகுதியை தீர்ப்பதற்கு. | 1,000,000,000 |
| 12,070,337,959 | | 12,097,761,934 |

## கணக்காய்வாளர் நாயகத்தின் குறிப்பு :

1993 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் நாள் முடிவுற்ற மத்திய வங்கியின் கணக்குகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்பின் உறுப்புரை 154 (1) இற்கு அமையவும் 1971 இன் எண் 38 கொண்ட நிதிச் சட்டத்தின் பிரிவு 13 (1) இற்கு ஏற்பவும் 1949 இன் எண் 58 கொண்ட நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 42 (1) இற்கு ஏற்பவும் எனது பணிப்புரையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 42 (2) இன் நியதிகளுக்கேற்ப நிதியமைச்சருக்கு ஒப்படைக்க வேண்டிய எனது அறிக்கை உரிய காலத்தில் ஒப்படைக்கப்படும்.

கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களம்,
கொழும்பு - 7.
1994, ஏப்பிறல் 19

**எஸ். எம். சப்றி**
கணக்காய்வாளர் நாயகம்

# பொதுவான ஐந்தொகையின் ஒப்பீடு

1993 திசெம்பர் 31 இலும் உள்ளவாறு

| 1992 திசெம்பர் 31 | | சொத்துக்கள் | 1993 திசெம்பர் 31 | |
|---|---|---|---|---|
| ரூபா | ரூபா | | ரூபா | ரூபா |
| | | **பன்னாட்டு ஒதுக்குகள்** | | |
| 10,229,341,245 | | வெளிநாட்டில் உள்ள பணங்களும், நிலுவைகளும் | 17,603,300,568 | |
| 29,430,157,174 | | வெளிநாட்டுப் பிணைகளும் திறைசேரி உண்டியல்களும் | 58,273,522,029 * | |
| 3,222,160 | 39,662,720,579 | சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் உடைமைகள் | 18,890,383 | 75,895,712,980 |
| | | **உள்நாட்டுச் சொத்துக்கள்** | | |
| 18,801,831,081 | | கடன்களும் முற்பணங்களும் அரசிற்கு | 20,855,499,947 | |
| 4,839,548,302 | | ஏனையவற்றிற்கு - நடுத்தர, நீண்டகால | 4,150,604,897 ** | |
| 923,265,218 | | குறுங்கால | 752,605,641 | |
| 21,802,050,273 | | அரச, அரச உத்தரவாதப் பிணைகள் | 3,954,212,029 | |
| 537,750,000 | 46,904,444,874 | நிதி, ஏனைய நிறுவனங்களுக்கான உதவு தொகைகள் | 560,250,000 | 30,273,172,514 |
| | 14,686,912,927 | ஏனைய சொத்துக்களும் கணக்குகளும் | | 27,465,395,403 |
| | 101,254,078,380 | | | 133,634,280,897 |

* அரச நிறுவனங்களிலிருந்து 1964 பெப்புருவரி 1 இல் ரூ. 5,527,675/- முகப்புப் பெறுமானத்திலும், 1965 மே 24 இல் ரூ. 57,450/- முகப்புப் பெறுமானத்திலும் பெற்ற பிணைகளை உள்ளடக்கும். (இப்பிணைகளின் மதிப்பிடப்பட்ட சந்தைப் பெறுமானங்கள், மேற்குறித்த நாட்களில் முறையே, ரூ. 2,933,697/- ஆகவும், ரூ. 34,340/- ஆகவும் இருந்தன.)

** ரூ. 1,000 இலட்சம் கொண்ட சிறப்புக் கடனை உள்ளடக்கும். வெளிநின்ற தொகை ரூ. 291,168,392/- கடன் இழப்புகளுக்கான ஒதுக்கங்கள் நீங்கலானதாகும்.

## ஆண்டுக்கான இலாப நட்டக் கணக்கு

| 1992 திசெம்பர் 31 | | 1993 திசெம்பர் 31 |
|---|---|---|
| ரூபா | | ரூபா |
| 12,070,337,959 | பெறப்பட்ட வட்டி, ஏனையவை | 12,097,761,934 |
| 12,070,337,959 | | 12,097,761,934 |

எச். பீ. திசநாயக்க
ஆளுநர்

எம். பீ. திசாநாயக்க
முதன்மைக் கணக்காளர்

அட்டவணை 2.2

## மத்திய வங்கியின் சொத்துக்கள் பொறுப்புக்களின் முக்கிய கூறுகளின் ஒப்பீடு
### 1992, 1993 ஆம் ஆண்டுகளின் இறுதியில் உள்ளவாறு

| பொறுப்புக்கள் | | | | | சொத்துக்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| விடயம் | 1992 | | 1993 | | விடயம் | 1992 | | 1993 | |
| | ரூ. ப. இ. | % | ரூ. ப. இ. | % | | ரூ. ப. இ. | % | ரூ. ப. இ. | % |
| மூலதனக் கணக்கு ... | 1,000.0 | 1.0 | 1,000.0 | 0.8 | பன்னாட்டு ஒதுக்கு .. | 39,662.7 | 39.2 | 75,895.7 | 56.8 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் ... | 30,496.3 | 30.1 | 35,949.3 | 26.9 | | | | | |
| வைப்புக்கள் ... | 35,765.1 | 35.3 | 51,461.5 | 38.5 | உள்நாட்டுச் சொத்துக்கள் .. | 46,904.5 | 46.3 | 30,273.2 | 22.6 |
| நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் ... | 4,925.0 | 4.9 | 4,925.0 | 3.7 | | | | | |
| மூலதன உதவு தொகை க/கு ... | 537.8 | 0.5 | 560.3 | 0.4 | ஏனைய சொத்துக்கள் .. | 14,686.9 | 14.5 | 27,465.4 | 20.6 |
| மத்திய வங்கிப் பிணைகள் ... | - | - | 2,155.0 | 1.6 | | | | | |
| ஏனைய பொறுப்புக்கள் ... | 28,529.9 | 28.2 | 37,583.2 | 28.1 | | | | | |
| மொத்தம் ... | 101,254.1 | 100.0 | 133,634.3 | 100.0 | மொத்தம் .. | 101,254.1 | 100.0 | 133,634.3 | 100.0 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. வங்கியின் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் முக்கிய கூறுகளின் ஒப்பீடு அட்டவணை 2.2 இல் காட்டப்பட்டுள்ளது.

1993 ஆம் ஆண்டிற்கான வங்கியின் வருவாய் ரூ. 120,980 இலட்சமாக அமைந்து, முன்னைய ஆண்டினைவிட 0.2 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. வங்கியின் மொத்தச் சொத்துக்களில் ஏற்பட்ட மிக உயர்ந்த வளர்ச்சிக்கு (32 சதவீதம்) எதிராக, வருவாயில் இக்குறைந்த மட்ட வளர்ச்சி ஏற்பட்டமைக்கு சொத்துப்பட்டியல் உயர்ந்த வட்டி உழைக்கும் உள்நாட்டுச் சொத்துக்களிலிருந்து குறைந்த வட்டி உழைக்கும் வெளிநாட்டுச் சொத்துக்களுக்கும், அரசின் சார்பில் வங்கியினால் வழங்கப்பட்ட உத்தரவாதங்களுக்கெதிராக அரசினால் வழங்கப்பட்ட இணை உத்தரவாதங்கள் போன்ற வட்டியற்ற சொத்துக்களுக்கும் பெயர்ந்தமையும் நாணய விதிச்சட்டத்தின் 89 ஆம் பிரிவின் நியதிகளின்படி அரசிற்கு தற்காலிக முற்பணங்களை வழங்கியமையும் முக்கிய காரணங்களாகும்.

செலவு, மற்றும் ஒதுக்குக் கணக்குகளுக்கான ஒதுக்கங்கள், பெறுமானத் தேய்விற்கான ஒதுக்குகள் ஏனைய கட்டணங்கள் என்பனவற்றிற்கு இடமளித்த பின்னர் மீதியாக இருந்த வங்கியின் தேறிய இலாபமான ரூ. 10,000 இலட்சம் நாணய விதிச்சட்டத்தின் பிரிவு 39 (இ) இன் நியதிகளின்படி அரசின் திரட்டிய நிதியத்திற்கு செலுத்தப்படவேண்டுமெனக் குறித்தொதுக்கப்பட்டது.

## கணக்கிடல் கொள்கைகள்

### 1. பொது

இணைக்கப்பட்டுள்ள ஐந்தொகையும் இலாப, நட்டக் கணக்கும் வரலாற்று ரீதியான செலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் வழமையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கிடல் தத்துவங்களுடனும் இணங்கிச் செல்லும் விதத்திலும் அமைந்துள்ளது.

### 2. வெளிநாட்டு நாணய மாற்றல்

வெளிநாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட சொத்துக்களும் பொறுப்புக்களும் ஐந்தொகைத் தேதியில் நிலவிய செலாவணியின் நடுவீதத்தில் மாற்றப்பட்டுள்ளன.

### 3. முதலீடுகள்

அனைத்து முதலீடுகளும் கிரயத்தில் மதிப்பிடப்பட்டுள்ளன.

### 4. முற்பணங்கள்

ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ள முற்பணங்கள் நிதிக்கூட்டு நிலையங்களிலிருந்து வரவேண்டிய செயலாற்றமில்லாக் கடன்களுக்கான ஒதுக்கங்களைக் கழித்துப் பெறப்பட்டன.

## 5. நிலையான சொத்துக்கள்

நிலையான சொத்துக்கள் தேய்மானத்தைக் கழித்த செலவினத்தில் காட்டப்பட்டுள்ளது.

தேய்மானம் குறைந்துசெல்லும் மீதி முறையில் பின்வரும் வீதங்களில் விதிக்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| கட்டடங்கள் | — | 2 சதவீதம் |
| இணைப்புக்களும் பொருத்துக்களும் | — | 10 சதவீதம் |
| அலுவலக தளபாடங்களும் கருவிகளும் | — | 10 சதவீதம் |
| கணனிக் கருவிகள் | — | 25 சதவீதம் |
| உந்து ஊர்திகள் | — | 10 சதவீதம் |

நிலையான சொத்துக்களுக்கு வழங்கப்பட்ட தேய்மானம் அத்தகைய சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட முழு ஆண்டிற்குமானதாக இருந்ததுடன் நிலையான சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்ட அல்லது அகற்றப்பட்ட ஆண்டிற்கு தேய்மானம் வழங்கப்படவில்லை.

## 6. இருப்புக்கள்

எழுதுகருவிவகை மற்றும் பொறியியற் களஞ்சியங்கள் மீது ஆண்டில் ஏற்பட்ட மொத்தச்செலவு இலாப நட்டக்கணக்கில் கழிக்கப்பட்டதுடன் முடிவு இருப்புக்களைப் பொறுத்தவரையில் எவ்வித சீராக்கங்களும் மேற்கொள்ளப்படவில்லை.

## 7. வருமானக் கணிப்பு

காசு அடிப்படையில் கணிக்கப்படும் செயற்படாத கடன்கள் மீதான வட்டி தவிர ஏனைய வட்டியும் வருமானங்களும் ஏடுகளில் ஒன்று சேர்ந்த அடிப்படையில் கணிக்கப்படுகின்றன.

## 8. தேறிய இலாபம்

அனைத்துச் செலவுகளையும் பின்வரும் ஒதுக்கங்களையும் செய்த பின்னரே இலாப நட்டக்கணக்கில் தேறிய இலாபம் எடுத்துக்காட்டப்படுகின்றது.

(i) செயலாற்றமில்லாக் கடன்களுக்கான ஒதுக்கம்

(ii) நிலையான சொத்துக்கள் மீதான தேய்மானத்திற்கான ஒதுக்கு

(iii) நாணய விதிச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் நியதிகளின்படி ஒதுக்குகளுக்கான மற்றைய அவசியமான ஒதுக்கங்களும் பகிர்வுகளும்.

## வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள்

மத்திய வங்கி இலங்கை ரூபாவிற்கெதிராக ஐக்கிய அமெரிக்க டொலரின் உடன் வாங்கும் விற்கும் வீதங்களைத் தீர்மானிப்பதன்வாயிலாக தொடர்ந்தும் வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகளில் ஈடுபட்டது. கடந்த காலங்களைப் போன்றே மத்திய வங்கி தொடர்ந்தும் அதன் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளை பன்னாட்டுப் பண மற்றும் மூலதனச் சந்தைகளில் முதலீடு செய்தது.

மத்திய வங்கியினால் இலங்கையிலுள்ள வர்த்தக வங்கிகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட வெளிநாட்டு நாணயத்தின் மொத்தப் பெறுமதி ரூ. 313,324 இலட்சமாக விளங்கியவேளையில் 1993 இல் வர்த்தக வங்கிகளுக்கான வெளிநாட்டு நாணய விற்பனை ரூ. 9,146 இலட்சமாகக் காணப்பட்டது. ஒப்பிடுகையில் 1992 இல் இவ்விருதொகைகளும் முறையே ரூ. 203,269 இலட்சமாகவும் ரூ. 34,251 இலட்சமாகவும் காணப்பட்டன.

## தங்க விற்பனை

மத்திய வங்கி அதன் தலைமை அலுவலகத்தில் தங்க விற்பனையை தொடர்ந்தும் மேற்கொண்டது. 1993 இல் தலைமை அலுவலக விற்பனைப்பீடத்தில் விற்பனைசெய்யப்பட்ட தங்கத்தின் மொத்தப் பெறுமதி 1992 இன் ரூ. 119 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 95 இலட்சமாகக் காணப்பட்டது.

## ஆசியத்தீர்ப்பனவு ஒன்றியம்

1993 இல் ஆசியத்தீர்ப்பனவு ஒன்றியத்தினூடாக இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப்பெறுமதி முன்னைய ஆண்டின் ரூ. 218,060 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 227,350 இலட்சமாக விளங்கியது. 1993 இல் வெளிநாட்டு நாணயத்தில் செய்யப்பட்ட தேறிய தீர்ப்பனவுகளின் ரூபாப்பெறுமதி 1992 இன் ரூ. 74,030 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1993 இல் ரூ. 74,240 இலட்சமாக விளங்கியது. இந்தியாவினால் 1992 இல் அறிமுகம் செய்யப்பட்ட இரட்டைச் செலாவணி வீத முறைக்குப் பதிலாக ஒரே சீராக்கப்பட்ட செலாவணி வீத முறை அறிமுகப்படுத்தப்பட்டதன் விளைவாக இந்தியாவிலிருந்தான இறக்குமதிகள் தொடர்பாக ஆ. தீ. ஒன்றிய பொறிமுறைக்கு வெளியே கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு இறக்குமதியாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த வசதி 1993 மாச்சில் புறக்கீடு செய்யப்பட்டது. ஆய்விற்குரிய காலத்தில் ஆசியத்தீர்ப்பனவு ஒன்றிய ஒழுங்குகளின்கீழ் வழங்கப்பட்ட பண்டமாற்று வசதிக்கான இலங்கையின் பங்களிப்பு ரூ. 1,330 இலட்சமாக விளங்கியது.

## வங்கிவீதம்

நாணய விதிச்சட்டத்தின் பிரிவு 87 இன் கீழ் வர்த்தக வங்கிகளுக்கான குறுங்கால முற்பணங்கள் மீதான மத்திய வங்கியின் வட்டிவீதம் (வங்கிவீதம்) ஆண்டொன்றிற்கு 17 சதவீதமாக மாற்றமின்றியிருந்தது.

## குறுங்காலக் கொடுகடன்

ஏற்றுமதிக் கொடுகடன் மீள்நிதியிடல் திட்டத்தின் வகை II இன் கீழ் புதிய விடயங்களைக்கொண்ட நிரல் ஒன்று உள்ளடக்கப்பட்டமையைத் தவிர குறுங்கால மீள்நிதியிடல் திட்டத்திற்கு 1993 இல் எவ்வித மாற்றங்களும் அறிமுகம் செய்யப்படவில்லை. பல்வேறுபட்ட குறுங்கால மீள்நிதியிடல் திட்டங்களின்கீழ் வழங்கப்பட்ட மீள்நிதியிடலின் வெளிநின்ற தொகைகள் 1992 இறுதியிலும் 1993 இறுதியிலும் உள்ளவாறு கீழே தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.3

**மீள் நிதியிடல் கடன்களின் வெளிநின்ற தொகைகள்**

ப. இ. ரூபாய்களில்

| திட்டம் | 1992 | 1993 |
|---|---|---|
| புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம் ... | 431.5 | 582.9 |
| ஏற்றுமதிக் கொடுகடன் மீள் நிதியிடல் திட்டம் | | |
| வகை I ... | 99.8 | 33.2 |
| வகை II ... | 131.1 | 107.2 |
| நெல் மற்றும் ஏனைய பயிர்களைக் களஞ்சியப்படுத்துவதற்கான திட்டம் ... | 2.9 | 26.2 |
| தேயிலைத் தொழிற்சாலைச் சொந்தக்காரருக்கான சிறப்பு மீள்நிதியிடல் வசதி ... | 258.0 | 3.1 |
| மொத்தம் | 923.3 | 752.6 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

## நடுத்தர நீண்டகாலக் கொடுகடன்

நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியம் 1993 இல் ரூ. 49,250 இலட்சமாக அமைந்து மாற்றமின்றிக் காணப்பட்டது. இவ்வாண்டின் பகிர்ந்தளிப்பு நீங்கலாக மீளச் செலுத்தப்பட்ட தொகை ரூ. 3,980 இலட்சமாகக் காணப்பட்டது.

## நிதிக்கூட்டு நிலையங்களுக்கான கடன்வழங்கல்

1988 இன் 78 ஆம் இலக்க நிதிக்கூட்டு நிலையங்கள் சட்டத்தின் பிரிவுகள் 20 (4) (அ) மற்றும் 21 (1) இன் நியதிகளின்படி மத்திய வங்கி இடர்ப்பாட்டிலுள்ள நிதிக்கூட்டு நிலையங்களுக்கு தொடர்ந்தும் நிதியியல் கடன்களை வழங்கியது. 1993 இல் இவ்வசதியின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தத்தொகை ரூ. 2,380 இலட்சமாக விளங்கியதுடன் வெளிநின்ற மொத்தத்தொகை 1993 இறுதியில் ரூ. 20,450 இலட்சமாக அமைந்தது.

## ஒதுக்குத் தேவைகள்

வர்த்தக வங்கிகளின் வைப்புப் பொறுப்புக்களுக்கெதிரான நியதி ஒதுக்குத் தேவைகள் நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகளுடன் இணைந்து செல்லும் விதத்தில் இவ்வாண்டில் பல தடவைகள் திருத்தப்பட்டன.

1993 சனவரி 29 இல் ரூபா வைப்புக்கள் மீதான நியதி ஒதுக்குத்தேவை 13 சதவீதத்திலிருந்து 13.5 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டவேளையில் காசோலைகள், வரைவுகள் அல்லது கட்டளை மூலம் கேட்கப்படுமிடத்து செலுத்தப்பட வேண்டியதான வெளிநாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட வைப்புப் பொறுப்புக்களின் மீதான ஒதுக்குகள் 13 சதவீத்திலிருந்து 10 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டன. மற்றைய அனைத்து வெளிநாட்டு நாணய வைப்புப் பொறுப்புக்கள் மீதான நியதி ஒதுக்குத்தேவை 13 சதவீதத்திலிருந்து 6 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. வெளிநாட்டு நாணய வைப்புக்களின் மீதான ஒதுக்கினை வெளிநாட்டு நாணயங்களின் வடிவில் பேணுவதற்கு வர்த்தக வங்கிகளுக்கு சலுகையளிக்கப்பட்டது.

அட்டவணை 2.4

**வைப்புப் பொறுப்புக்கள் மீதான வர்த்தக வங்கி ஒதுக்குத் தேவைப்பாடுகள்**

(சதவீதம்)

| பயனுறும் நாள் | எல்லா ரூபா வைப்புக்களும் | வெளிநாட்டு நாணய வைப்புக்கள் | |
|---|---|---|---|
| | | கேட்ட மாத்திரத்தில் செலுத்தப்பட வேண்டிய வைப்புக்கள் | ஏனைய வைப்புக்கள் |
| 29.01.1993 | 13.5 | 10 | 6 |
| 16.04.1993 | 14.0 | 10 | 8 |
| 21.05.1993 | 15.0 | 11 | 9 |
| 25.06.1993 | 15.0 | 12 | 12 |
| 27.08.1993 | 15.0 | 15 | 15 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

1993 ஏப்பிறல் 16 இல் ரூபா வைப்புப் பொறுப்புக்கள் மீதான ஒதுக்கு 13.5 சதவீதத்திலிருந்து 14 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. கேட்கப்படுமிடத்து செலுத்தப்படத்தேவையற்ற வெளிநாட்டு நாணய பொறுப்புக்களின் மீதான நியதி ஒதுக்குத் தேவை 6 சதவீதத்திலிருந்து 8 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது.

1993 மே 21 இல் ரூபா வைப்புப் பொறுப்புக்கள் மீதான நியதி ஒதுக்குத்தேவை 14 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கு மேலும் அதிகரிக்கப்பட்டது. கேட்கப்படுமிடத்து மீளச்செலுத்தப்பட வேண்டிய வெளிநாட்டு நாணய வைப்புக்களின் மீதான நியதி ஒதுக்குத்தேவை 10 சதவீதத்திலிருந்து 11 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டவேளையில் ஏனைய வெளிநாட்டு நாணய வைப்புக்களின் மீதான நியதி ஒதுக்குத்தேவை 8 சதவீதத்திலிருந்து 9 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது.

1993 யூன் 25 இல் அனைத்து வெளிநாட்டு நாணய வைப்புக்களின் மீதான நியதி ஒதுக்குத்தேவை 12 சதவீதமான ஒரே சீரான வீதத்திற்கு அதிகரிக்கப்பட்டவேளையில் ரூபா வைப்புப் பொறுப்புக்கள் மீதான நியதி ஒதுக்குத்தேவை 15 சதவீதத்தில் மாற்றமின்றிக் காணப்பட்டது.

1993 ஒகத்து 27 இல் அனைத்து வெளிநாட்டு நாணய வைப்புப் பொறுப்புக்கள் மீதான நியதி ஒதுக்குத்தேவை 12 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டு ரூபா வைப்புப் பொறுப்புக்கள் மீதான நியதி ஒதுக்குத்தேவைக்கு இணையாகக் கொண்டுவரப்பட்டது. ஆய்விற்குரிய ஆண்டில் இடம்பெற்ற மாற்றங்களின் தொகுப்பினை கீழேயுள்ள அட்டவணை தருகின்றது.

## திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்

### (அ) திறைசேரி உண்டில்களுக்கான மீள் கொள்வனவுச் சந்தை

மத்திய வங்கி திறைசேரி உண்டியல்களில் மீள் கொள்வனவுத் திட்டமொன்றினை 1993 ஒற்றோபர் 4 ஆம் நாளிலிருந்து அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் குறிக்கோளாக, குறுங்கால மிகைத் திரவத்தன்மையைக் கொண்டுள்ள நிதியியல் நிறுவனங்களுக்கு முதலீட்டு வழிவகைகளை வழங்குகின்றதன்மூலம் திறைசேரி உண்டியல்களுக்கான இரண்டாந்தரச் சந்தையை மேலும் அபிவிருத்தி செய்வதும், வங்கிகளுக்கிடையிலான அழைப்புப்பண வீதங்களில் காணப்பட்ட ஒழுங்கற்ற தளம்பல்களை ஒழித்துவிடுகின்றமையும் அமைந்தது. இத்திட்டத்தின்கீழ், மத்திய வங்கி அதன் உடைமைகளிலிருந்து விற்பனை செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களை உடன்பாடு காணப்பட்ட திகதியில் மீண்டும் வாங்கிக்கொள்ள கடப்பாடுடையதாகும். வங்கியின் இரண்டாந்தர திறைசேரி உண்டியல் சந்தையில் நுழைவுரிமையைக் கொண்டுள்ள வர்த்தக வங்கிகளும் ஏனைய நிறுவனங்களும் இத்திட்டத்தில் பங்கேற்பதற்கு உரித்துடையனவாகும். மீள் கொள்வனவு ஒப்பந்தங்களின் முதிர்ச்சிக் காலம் ஒரு நாளிலிருந்து (இரவுமுடிய) ஆகக்கூடியது 3 மாதங்கள்வரை வேறுபடும்.

1993 இல் தொழிற்பாட்டிலிருந்த மூன்று மாதங்களிலும் மீள்கொள்வனவு ஒப்பந்தத்தின் கீழான மொத்த விற்பனைச் சுழல்வு ரூ. 388,830 இலட்சமாக இருந்தது. வர்த்தக வங்கித்துறைக்கான விற்பனைச் சுழல்வு ரூ. 354,820 இலட்சமாகவும் வங்கியல்லாத்துறையில் சுழல்வு ரூ. 34,010 இலட்சமாகவும் இருந்தன. மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் மீள்கொள்வனவு உடன்படிக்கையின்கீழ் ஒரு நாள் முதலீடுகளுக்குப் பொருந்தத்தக்க விளைவு வீதம் ஆண்டிற்கு 16.50 சதவீதத்திலிருந்து 19.83 சதவீதம்வரை வேறுபட்டது.

### (ஆ) இரண்டாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தை

இரண்டாந்தரச் சந்தையில் திறைசேரி உண்டியல்களின் விற்பனைப் புரழ்வு 1992 இன் ரூ. 1,207,980 இலட்சத்திலிருந்து 1993 இல் ரூ. 953,770 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதே காலப்பகுதியில் கொள்வனவுச் சுழல்வும் ரூ. 509,070 இலட்சத்திலிருந்து ரூ. 473,820 இலட்சத்திற்கு வீழ்ச்சிடைந்தது. விற்பனைச் சுழல்வில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு, வர்த்தக வங்கிகள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் முதலீடுகள் திறைசேரி உண்டியல் சந்தையிலிருந்து ஓர் இரவு மீள்

கொள்வனவு ஒப்பந்தங்களுக்கு பெயர்ந்தமையே முக்கிய காரணமாகும். வங்கியல்லாத்துறைக்கான தேறிய விற்பனைச் சுழல்வு 1992 இன் ரூ. 207,180 இலட்சத்திலிருந்து 1993 இல் ரூ. 229,340 இலட்சத்திற்கு அதிகரித்தது.

இவ்வாண்டில் இரண்டாந்தரச் சந்தையில் 3 மாத திறைசேரி உண்டியல்கள் மீதான முதலீடுகளுக்குப் பொருந்தத்தக்க விளைவு வீதங்கள் ஆண்டிற்கு 17.71 சதவீதத்திற்கும் 20.66 சதவீதத்திற்குமிடையில் வேறுபட்டவேளையில் ஆறுமாத, ஓராண்டு திறைசேரி உண்டியல்களின் மீதான விளைவு வீதங்கள் ஆண்டிற்கு முறையே 18.22 சதவீதத்திலிருந்து 20.70 சதவீதத்திற்கும் 19.13 சதவீதத்திலிருந்து 21.71 சதவீதத்திற்கும் இடையில் வேறுபட்டன.

## இந்தியாவிற்குக் குடிபெயர்ந்து செல்வோருக்கான உதவுதொகையும் வெகுமதிக் கொடுப்பனவும்

1964 இன் இந்திய இலங்கை உடன்படிக்கையின்கீழ் அடங்கும் இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளர்களை மீள அனுப்புதல் தொடர்பான திட்டங்களை அரசின் சார்பில் வங்கி தொடர்ந்தும் தொழிற்படுத்தியது. இத்திட்டத்தின் கீழான மொத்த உதவுதொகைக் கொடுப்பனவுகள் 1992 இன் ரூ. 182,598.24 உடன் ஒப்பிடுகையில் 1993 இல் ரூ. 276,609.24 ஆகக் காணப்பட்டது. வெகுமதிக் கொடுப்பனவு 1992 இன் ரூ. 33,300 உடன் ஒப்பிடுகையில் 1993 இல் ரூ. 38,775 ஆகக் காணப்பட்டது.

## ஏற்றுமதியாளர்களுக்கான இறக்குமதித்தீர்வை தள்ளுபடி

ஏற்றுமதியாளர்களுக்குச் செலுத்தப்பட்ட இறக்குமதித் தீர்வைத் தள்ளுபடிகள் தொடர்பாக வர்த்தக வங்கிகளினால் செய்யப்பட்ட கோரல்களை மீளளிப்பதனை அரசின் சார்பில் வங்கி தொடர்ந்தும் மேற்கொண்டது. 1992 இன் ரூ. 6,384 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1993 இல் ரூ. 7,846 இலட்சங்கொண்ட மொத்தத்தொகை மீளளிப்புச் செய்யப்பட்டது.

## கட்டாயச் சேமிப்புக்கள் நிதியம்

மத்திய வங்கி 1971 இன் எண் 6 கொண்ட கட்டாயச் சேமிப்புக்கள் சட்டத்தினதும் 1972 இன் எண் 15 கொண்ட வருமான உச்சவரம்பு, கட்டாயச் சேமிப்புக்கள் சட்டத்தினதும் நியதிகளின்படி சேகரிக்கப்பட்ட பணத்தின் பாதுகாவலனாகத் தொடர்ந்தும் விளங்கியதுடன், அரசின் சார்பில் கட்டாயச் சேமிப்புக்கள் நிதியத்தினையும் நிருவகித்தது. இவ்வாண்டில் 23 உதவுநர்களினால் செய்யப்பட்ட விண்ணப்பங்களின்மீது வங்கி ரூ. 54,529 (வட்டி உட்பட) இனைச் செலுத்தியது.

## அரச கணக்குகள்

அரசின் வங்கியாளர் என்றவகையில் மத்தியவங்கி அரச திணைக்களங்கள், அரசமுகவர் நிலையங்கள், நிறுவனங்கள் மற்றும் குறிப்பிடப்பட்ட சில நியதிச் சபைகள் என்பனவற்றின் கணக்குகளைத் தொடர்ந்தும் பேணியது. 1993 திசெம்பர் இறுதியில் தொழிற்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை 1992 இன் 182 உடன் ஒப்பிடுகையில் 184 ஆக விளங்கியது.

## வெளிநாட்டு நிதி

ஆய்விற்குரிய ஆண்டில் மத்தியவங்கி பல்வேறுபட்ட வெளிநாட்டுக் கடன்கள் கொடைகள் என்பனவற்றின்கீழ் கிடைக்கத்தக்கதாக இருந்த பகிர்ந்தளிப்புக்களைத் தொடர்ந்தும் பெற்றவேளையில் அரசின்சார்பில் வெளிநாட்டுக் கடன்களின் மீள் கொடுப்பனவுகளையும் மேற்கொண்டது.

## நாணய வெளியீடு

நாணய வழங்கலின் ஏக அதிகாரத்தைக்கொண்ட வங்கி என்றவகையில் 1993 இல் உள்நாட்டுக் கொடுக்கல் வாங்கல்களின் பயன்பாட்டிற்காக இலங்கையின் சட்டரீதியான கொடுப்பனவுக்கான நாணய வழங்கல் பணியினைத் தொடர்ந்தும் வங்கி மேற்கொண்டது. 1993 இறுதியில் சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் அளவு ரூ. 359,493 இலட்சமாக விளங்கியது. சுற்றோட்டதிலுள்ள மொத்த நாணயத்தில் நாணயத்தாள்களின் சுற்றோட்டம் 96 சதவீதத்தினைக் கொண்டிருந்தது.

1993 யூன் 4 இல் அனுபுதுமிகிந்து ஜயந்தியினைக் குறிக்கும் – அரகத் மிகுந்து இலங்கைக்கு வருகைதந்த 2300 ஆம் ஆண்டு நிறைவினைக் குறிக்குமுகமாக ரூ. 500 இன ஞாபகார்த்த வெள்ளி நாணயக் குத்தியொன்று வெளியிடப்பட்டது. மத நிகழ்வினைக் குறிக்குமுகமாக ஞாபகார்த்த நாணயக் குத்தியை வங்கி வெளியிட்ட இரண்டாவது சம்பவம் இதுவாகும். 2500 ஆவது புத்த ஜயந்தி ஞாபகார்த்த நாணயக்குத்தியை வங்கி 1957 இல் முதலில் வெளியிட்டது. மேன்மை தங்கிய சனாதிபதிக்கு அனுபுது மிகிந்து ஜயந்தி நாணயக்குத்தியை வைபவரீதியாகக் கையளித்தல் மிகிந்தலையில் நடத்தப்பட்ட சிறப்பு வைபவமொன்றில் இடம்பெற்றது. மிகிந்தலையில் சிறப்புபீடமொன்று திறக்கப்பட்டு பொதுமக்களுக்கு இக்குத்தியை வழங்கும்பொருட்டு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

1992 இல் ஆரம்பிக்கப்பட்ட வங்கியின் இடம்பெயர் நாணயக் கண்காட்சி 1993 இலும் அதன் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தது. உலகிலுள்ள அநேகமான எல்லா நாடுகளினதும் மாதிரி நாணயத்தாள்கள், போலிநாணயத் தாள்கள், குறைபாட்டுடன் அச்சிடப்பட்ட இலங்கை நாணயத்தாள்கள் என்பன இடம்பெயர் கண்காட்சியில் இடம்பெற்றன. 1993 இல் அத்தகைய 20 கண்காட்சிகள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நடத்தப்பட்டன. 1993 ஓகத்தில் திணைக்களம் கொழும்பு தேசிய அரும்பொருட்காட்சிச் சாலையினால் ஒழுங்கு செய்யப்பட்ட நாணயம்சார் செயலமர்விலும் நாணயக் கண்காட்சியிலும் பங்கேற்றது.

1992 இல் நாணயத் தாள்களைச் செயல் முறைப்படுத்தும் முறை தன்னியக்கப்படுத்தப்பட்டதுடன் இந்நோக்கத்திற்காக திணைக்களத்தில் நாணயத்தாள்கள் சரிபார்க்கும், எண்ணும், பிரித்தெடுக்கும் முறைகள் (சீவீஎஸ் முறைகள்) நிறுவப்பட்டன. தன்னியக்கமாக்கப்பட்ட முறை 1993 இல் தொடர்ந்தும் தொழிற்பாட்டிலிருந்தது. எனினும் புதிதாக வடிவமைக்கப்பட்ட இலங்கை மரபு வழித் தொடர் நாணயத் தாள்களை செயல்முறைப்படுத்தும் விதத்தில் இம்முறையை மீள ஒத்திசையவைக்க வேண்டியிருந்ததுடன் மீள் ஒத்திசைவுச் செயல்முறையை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுவருகின்றன.

# வங்கித் தொழில் அபிவிருத்தி

## கிளை விரிவாக்கம்

1993இல், நாட்டின் வங்கித்தொழில் வலையமைப்பு முன்னைய ஆண்டினைவிட மெதுவான வேகத்தில் விரிவடைந்தமையை அட்டவணை 2.5 காட்டுகின்றது. கம்பகா நிருவாக மாவட்டத்தில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி திறக்கப்பட்டதுடன் அபிவிருத்தி வங்கிகளையும் சேமிப்பு வங்கிகளையும் உள்ளடக்கிய வங்கித்தொழில் நிறுவனங்களின் மொத்த எணணிக்கை 1992 இன் 43 இலிருந்து 1993 இல் 44 இற்கு அதிகரித்தது. 1993 இறுதியில் வங்கித்தொழில்முறை 23 வர்த்தக வங்கிகளையும் (6 உள்நாட்டு வர்த்தக வங்கிகள் மற்றும் 17 வெளிநாட்டு வர்த்தக வங்கிகள்) 17 பி. கி. அ. வங்கிகளையும் 3 அபிவிருத்தி வங்கிகள் மற்றும் ஒரு சேமிப்பு வங்கியையும் உள்ளடக்கியிருந்தது.

1993 இல் வர்த்தக வங்கிகளினதும் பி. கி. அ. வங்கிகளினதும் கிளைவலையமைப்பு மெதுவான வளர்ச்சியைக் காட்டியது. தொழிற்பாட்டிலுள்ள கிளைகளின் மொத்த எண்ணிக்கை 1,017 இற்கு அதிகரித்து 4.4 சதவீதமான அதிகரிப்பினை எடுத்துக்காட்டியவிடத்து 1992 இல் கிளைகளின் எண்ணிக்கை 9.2 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. 1993 இல் அரச வங்கிகளின் கிளை வலையமைப்பின் விரிவாக்கம் மெதுவாக இருந்தமைக்கு தற்போதுள்ள கிளைகளை ஒன்று சேர்க்கும் கொள்கையே முக்கிய காரணமாகும். ஏனைய வர்த்தக வங்கிகளினதும் (உள்நாட்டு தனியார் வங்கிகளும் வெளிநாட்டு வங்கிகளும்) மற்றும் பி. கி. அ. வங்கிகளினதும் கிளைகளும் 1993 இல் மெதுவாகவே அதிகரித்தன.

1993 இல் இலங்கை வங்கி குறிப்பிட்ட கடன்வகைகளை கண்காணித்து மேற்பார்வை செய்யும் நோக்குடன் "இரண்டாவது கூட்டுறவுக்கிளை" என்ற கிளையை மட்டுமே திறந்தது. மூதூர்க் கிளையை மீளத்திறந்தமைக்குப் புறம்பாக கெல்பொட, தியத்தலாவ, மிகிந்தலை, நாவுல, பஸ்கொட ஆகிய இடங்களிலுள்ள வேளாண்மைப் பணிநிலையக் கிளைகளை 'சி' தரத்திற்குத் தரமுயர்த்தியதுடன் இலங்கை வங்கி சிலோன்சிப்பிங் லைன் களஞ்சியச் சாலையில் விரிவாக்க அலுவலகமொன்றினையும் திறந்தது. இம்மாற்றங்களின் விளைவாக ஆண்டின் இறுதியில் இலங்கை வங்கி முதன்மைக் கிளைகளின் எண்ணிக்கை 259 ஆக விளங்கிய வேளையில் வே.ப. நிலையக்கிளைகள், கச்சேரிக் கிளைகள், விரிவாக்க அலுவலகங்கள் மற்றும் கொடுப்பனவு அலுவலகங்களின் எண்ணிக்கை முறையே 29, 24, 18, 3 ஆக விளங்கின. இலங்கை வங்கியினது வெளிநாட்டுக்கிளைகளின் எண்ணிக்கை 2 ஆக மாற்றமின்றியிருந்தது.

மக்கள் வங்கி அதன் சேருநுவர, முல்லைத்தீவுக் கிளைகளை மீளத்திறந்தமைக்குப் புறம்பாக 3 புதிய கிளைகளை தெகியத்தகண்டிய, சேருநுவர, கணேமுல்ல, யக்கல ஆகிய இடங்களில் திறந்தது. மேலும் மக்கள் வங்கி இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் கட்டத்தில் விரிவாக்க அலுவலகமொன்றினைத் திறந்தது. இவற்றைத் திறந்ததுடன் மக்கள் வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை 320இற்கு அதிகரித்தவேளையில் மக்கள் வங்கியின் விரிவாக்க/ கொடுப்பனவு அலுவலகங்கள் மற்றும் அடைவுபிடிக்கும் நிலையங்களின் எண்ணிக்கை 7 இற்கு அதிகரித்தது.

வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கி பாலத்துறை, தம்புல்லை, கம்பகா, கொரனை ஆகிய இடங்களில் 4 கிளைகளைத் திறந்ததுடன் அதன் கிளை வலையமைப்பினை 51 இற்கு அதிகரித்தது. கொக்கல சுதந்திர வர்த்தக வலயத்தில் கொடுப்பனவு அலுவலகமொன்றினைத் திறந்ததுடன் அட்டன் நசனல் வங்கியின் விரிவாக்க மற்றும் கொடுப்பனவு அலுவலகங்களின் எண்ணிக்கை 2 இற்கு உயர்ந்தது. வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி கந்தானை, மருதானை, அக்குரசை ஆகிய இடங்களில் 3 கிளைகளைத் திறந்தமையின் மூலம் அதன் கிளை வலையமைப்பு 31 இற்கு விரிவடைந்தது. வரையறுக்கப்பட்ட சம்பத்வங்கி கம்பகாவிலும் தெகிவளையிலும் 2 கிளைகளை நிறுவியதன்மூலம் இதன் கிளைகளினது மொத்த எண்ணிக்கை 1993 இறுதியில் 15 இற்கு அதிகரித்தது. வரையறுக்கப்பட்ட செலான் வங்கி ஆய்விற்குரிய ஆண்டில் நாவல, பண்டாரவளை, குளியாப்பிட்டி, மாவனெல்ல, பழைய சோனகத்தெரு, கிங்குரான்கொட, எம்பிலிப்பிட்டிய, புத்தளம், மருதானை, கட்டுனேறிய, கொக்கல ஆகிய இடங்களில் 11 கிளைகளை நிறுவியதுடன் அலுபோமுல்ல (இது பண்டாரகமவிற்கு மாற்றப்பட்டது) மன்னம்பிட்டி ஆகிய இடங்களிலமைந்திருந்த இடம்பெயர் வங்கித் தொழில் நிலையங்களை முழுமையான கிளைகளாகத் தரமுயர்த்தியது. இதன்படி வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை 1993 இறுதியில் 57 இற்கு அதிகரித்தது.

ஏ. என். இசட் கிறின்லேஸ் வங்கி மூன்று கிளைகளை மொரட்டுவ, இராசகிரிய, கொள்ளுப்பிட்டி ஆகிய இடங்களில் திறந்ததுடன் அதன் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 7 ஆகியது. அதேவேளை ஏ. பீ. என். ஆம்றோ வங்கி கொழும்பு 7 இல் கிளையொன்றைத் திறந்தது. ஏ. என். இசட் கிறின்லேஸ் வங்கியினாலும் ஏ. பீ. என். ஆம்றோ வங்கியினாலும் கிளைகள் திறக்கப்பட்டமையின் விளைவாக 1993 இறுதியில் வெளிநாட்டு வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை 33 ஆக அமைந்து முன்னைய ஆண்டினைவிட 4 அதிகமாகக் காணப்பட்டது.

பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் அவற்றின் கிளைவலையமைப்பினை மேலும் விரிவாக்கின. புதிதாகத் திறக்கப்பட்ட கம்பகா பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி கம்பகாவிலும், மாவரமண்டியவிலும் 2 கிளைகளைத் திறந்தவேளையில் அம்பாறை பி. கி. அ. வங்கி கல்முனையிலும் மகாஓயாவிலும் 2 கிளைகளைத் திறந்ததன் மூலம் அதன் கிளையமைப்பினை 5 இலிருந்து 7 இற்கு அதிகரித்தது. பொலனறுவை பி. கி. அ. வங்கி கலமுனவில் ஒரு கிளையைத் திறந்தவேளையில் இரத்தினபுரி பி. கி. அ. வங்கி கலவானவில் ஒரு கிளையைத் திறந்தது. கேகாலை பி. கி. அ. வங்கி நெலும்தெனியாவில் கிளையொன்றை நிறுவியதன் மூலம் அதன் கிளைகளின் எண்ணிக்கையை 13 இற்கு அதிகரித்தது. இம்மாற்றங்களுடன் பி. கி. அ. வங்கிகளினது கிளைகளின் மொத்த எண்ணிக்கை 1992 இன் 156 இலிருந்து 1993 இல் 163 இற்கு அதிகரித்தது.

தேசிய சேமிப்பு வங்கி வத்தளையில் கிளையொன்றைத் திறந்தமையின் மூலம் அதன் கிளைகளினது மொத்த எண்ணிக்கை 84 இலிலிருந்து 85இற்கு அதிகரித்தது. தேசிய அபிவிருத்தி வங்கி, மற்றும் இலங்கை அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம் என்பனவற்றின் கிளை வலையமைப்பு இவ்வாண்டில் மாற்றமின்றியிருந்தது. அரசஈட்டு முதலீட்டு வங்கி அதன் மாத்தறைக்கிளையை மூடிவிட்டதன் விளைவாக அதன் கிளைகளினது மொத்த எண்ணிக்கை 3 இலிருந்து 2 ஆகியது.

அட்டவணை 2.5

## வங்கித் தொழில் நிறுவனங்களின் அமைப்பும் வங்கிக் கிளைகளின் பரம்பலும் 1990 – 1993

| வகை | 1990 | 1991 | 1992 | 1993 |
|---|---|---|---|---|
| 1. நிறுவனங்களின் எண்ணிக்கை ... | 40 | 42 | 43 | 44 |
| 1.1. வர்த்தக வங்கிகள் ... | 24 | 23 | 23 | 23 |
| 1.1.1 உள்நாட்டு வர்த்தக வங்கிகள் ... | 6 | 6 | 6 | 6 |
| 1.1.2 வெளிநாட்டு வங்கிகள் ... | 18 | 17 | 17 | 17 |
| 1.2. பி. கி. அ. வங்கிகள் (அ) ... | 12 | 16 | 16 | 17 |
| 1.3. சேமிப்பு வங்கிகள் ... | 1 | 1 | 1 | 1 |
| 1.4. அபிவிருத்தி வங்கித் தொழில் நிறுவனங்கள் (அ. வ. நிறுவனங்கள்) ... | 3 | 3 | 3 | 3 |
| 2. வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை (ஆ) ... | 924 | 973 | 1,058 | 1,102 |
| 2.1. வர்த்தக வங்கிக் கிளைகள் ... | 747 | 768 | 818 | 854 |
| 2.1.1. உள்நாட்டு வங்கிகளின் கிளைகள் ... | 724 | 743 | 789 | 821 |
| (i) முதன்மைக் கிளைகள் ... | 638 | 656 | 699 | 733 |
| (ii) வே.ப.நி. கிளைகள் .. | 38 | 36 | 34 | 29 |
| (iii) கச்சேரிக் கிளைகள் ... | 23 | 24 | 24 | 24 |
| (iv) விரிவாக்க / கொடுப்பனவு அலுவலர்கள் / அடைவு நிலையங்கள்* | 23 | 25 | 30 | 33 |
| (v) வெளிநாட்டுக் கிளைகள் (இ) ... | 2 | 2 | 2 | 3 |
| 2.1.2. வெளிநாட்டு வங்கிக் கிளைகள் ... | 23 | 25 | 29(ஈ) | 33 (ஈ) |
| 2.2. பி. கி. அ. வ. கிளைகள் ... | 101 | 124 | 156 | 163 |
| 2.3. தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகள் ... | 76 | 81 | 84 | 85 |
| 3. அ. வ. நிறுவன கிளைகளின் / அலுவலகங்களின் எண்ணிக்கை (உ) ... | 6 | 7 | 7 | 6 |
| 3.1 இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத் தாபனம் (இ. அ. நி. கூ.) | 3 | 3 | 3 | 3 |
| 3.2. அரச ஈட்டு முதலீட்டு வங்கி (அ. ஈ. மு. வ.) ... | 2 | 3 | 3 | 2 |
| 3.3. தேசிய அபிவிருத்தி வங்கி (தே. அ. வ.) | 1 | 1 | 1 | 1 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) 1985 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிகிஅவ சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள்.

(ஆ) கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் நீக்கலாக.

(இ) இலங்கை வங்கியின் இரு வெளிநாட்டுக் கிளைகள் (லண்டன், மாலே கிளைகள்)

(ஈ) கொங்கொங் அன்ட் சங்காய் பாங்கிங் கோப்பரேசனின் இரு துணைக் கிளைகள் உட்பட.

(உ) அ.வ. நிறுவனங்களின் தலைமை அலுவலகங்கள் உட்பட.

* மக்கள் வங்கி, இலங்கை வங்கி, அட்டன் நசனல் வங்கி, சம்பத் வங்கி என்பனவற்றின் எல்லா விரிவாக்க / கொடுப்பனவு அலுவலகங்களையும் அடைவு நிலையங்களையும் உள்ளடக்குவதற்காகத் திருத்தப்பட்டது.

### இடம்பெயர் வங்கித் தொழில் நிலையங்கள்

வங்கித்தொழில் வசதிகள் இல்லாத அல்லது வங்கித் தொழில் வசதி குறைந்த பிரேதசங்களிலுள்ள மக்களுக்கு வங்கித்தொழில் தேவைகளை வழங்கும் நோக்குடன் இரு அரச வங்கிகளுட்பட பி. கி. அ. வங்கிகளும் சில வர்த்தக வங்கிகளும் தொடர்ந்து இடம்பெயர் வங்கித்தொழில் பணிகளை வழங்கின. 1993 இல் செலான்வங்கி இரத்தொலுவ, கணேமுல்ல, கொட்டியக்கும்பற ஆகிய இடங்களில் இடம்பெயர் வங்கித் தொழில் பணிகளைத் தொடங்கியது. அநுராதபுரம், பி. கி. அ. வங்கி நெகம்பக, சியம்பலன்கமுவ ஆகிய இடங்களில் இடம்பெயர் வங்கித்தொழில் பணிகளைத் தொடங்கியது.

### தன்னியக்க ரெலர் பொறிகளை நிறுவுதல்

வர்த்தக வங்கிகள் அவற்றின் இடத்திலும் அவற்றிற்கு வெளியேயும் தன்னியக்க ரெலர் பொறிகளை அமைத்தலில் முன்னேற்றம் கண்டுவருவதை 1993 ஆம் ஆண்டு காட்டியது. மக்கள் வங்கி அதன் கணனிமயமாக்கப்பட்ட கிளைவலையமைப்பினை விரிவாக்கியதுடன் கிரிபத்கொட, குருநாகல், கேகாலை, மொரட்டுவ ஆகிய இடங்களிலுள்ள அதன் கிளைகளில் 4 த.ரெ. பொறிகளை நிறுவியது. மேலும் இடத்திற்கு வெளியேயான த.ரெ. பொறியொன்று வரையறுக்கப்பட்ட நவலோக தனியார் வைத்தியசாலைக் கட்டடத்தில் மக்கள் வங்கியால் நிறுவப்பட்டது. அட்டன்நசனல் வங்கி மொரட்டுவ, கிரில்லபன, கண்டி, பாலத்துறை ஆகிய இடங்களிலுள்ள அதன் கிளைகளைக் கட்டடங்களில் 4 த. ரெ. பொறிகளை நிறுவியது. அதேவேளை இலங்கை வங்கியும் வரையறுக்கப்பட்ட வர்த்தக வங்கியும் இவ்வாண்டில் ஒவ்வொரு த. ரெ. பொறிகளை நிறுவின. வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி தெகிவளையிலும் கம்பகாவிலும் 2 த. ரெ. பொறிகளை நிறுவியது.

## வங்கி மேற்பார்வை

வங்கி மேற்பார்வைத் திணைக்களம் நாட்டின் அனைத்து வங்கித் தொழில் நிறுவனங்களையும் மேற்பார்வை செய்வதற்கும் காலத்திற்குக் காலம் பரிசோதனை செய்வதற்கும் தொடர்ந்து பொறுப்பாக இருந்தது. மேற்பார்வை செய்வதன் முக்கிய அடிப்படைக் குறிக்கோள் யாதெனில் வங்கித்தொழில்முறையில் பொதுமக்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்துவதுடன் வைப்பாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதுமேயாகும்.

தலப்பரீட்சிப்பு மற்றும் தலத்துக்கு வெளியேயான கவனமான கண்காணிப்பு என்பனவற்றின் மூலம் திணைக்களம் இப்பொறுப்புக்களை மேற்கொண்டது.தலப் பரீட்சிப்புக்களைப் பொறுத்தவரையில் 1993 இல் திணைக்களம் 15 வர்த்தக வங்கிகளினதும் ஒரு பிரேதச கிராமிய அபிவிருத்தி வங்கியினதும் ஒரு அபிவிருத்தி வங்கித் தொழில் நிறுவனத்தினதும் பரீட்சிப்புக்களைத் தொடங்கியது. இவற்றில் பி. கி. அ. வங்கி மற்றும் அபிவிருத்தி வங்கித்தொழில் நிறுவனத்தினதும் 9 வர்த்தக வங்கிகளினதும் பரீட்சிப்புக்கள் ஆய்வுக்குரிய ஆண்டில் முற்றுப்பெற்றன. 1992 இல் தொடங்கிய மூன்று வர்த்தக வங்கிகளின் பரீட்சிப்புக்கள் 1993 இல் முற்றுப்பெற்றன.

தலப்பரீட்சிப்புக்களில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்களின் அடிப்படையில் தொடர்பான வங்கிகளின் முகாமையாளர்களினால் தேவையானவிடத்து சரியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது உறுதிப்படுத்தப்பட்டது.

வர்த்தக வங்கிகளின் தலத்திற்கு வெளியேயான கவனக் கண்காணிப்பினை பொறுத்தமட்டில் திணைக்களம் வர்த்தக வங்கிகளினதும் பி. கி. அ. வங்கியினதும் நிதிநிலைமைகளை திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்களின் மாதாந்தக் கூற்றுக்களின் அடிப்படையில் தொடர்ந்தும் கண்காணித்துவந்தது. வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் திட்டத்தின்கீழ் நிறுவப்பட்ட வெ. நா. வ. தொழில் பிரிவுகளின் தொழிற்பாடுகளின் கண்காணிப்பும் வதிவுடைய ஏற்றுமதியாளர்களின் கடன்வழங்கல் தொழிற்பாடுகளின்மீது கூடியளவு முக்கியத்துவமளித்து மாதாந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. வர்த்தக வங்கிகளின் தொடர்ச்சியான அபிவிருத்தியைப் பரீட்சிக்கும்பொருட்டு ஒழுங்கீனமானதும் மிகக்கூடியதுமான முற்பணங்கள் மீதான தகவல்கள் காலாண்டு அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டன. ஒவ்வோர் வர்த்தக வங்கியினதும் அதேபோன்று முழுக் கைத்தொழிலினதும் இலாபத்தன்மை, நிதியியல் பலம் என்பன வங்கிகளினால் வழங்கப்பட்ட வருமானம் மற்றும் செலவுகளைப் பற்றிய ஆண்டுக்கூற்றுக்களின் அடிப்படையில் கணிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டன.

வங்கித்தொழில் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதித் தேவைப்பாடுகள் மற்றும் மதியூகமான தேவைப்பாடுகள் பற்றித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஏனைய வழிகாட்டல்கள் என்பனவற்றுக்குக் கடுமையாக இசைந்தொழுகுவதனை உறுதிப்படுத்தும் பொறுப்பினைத் திணைக்களம் தொடர்ந்தும் கொண்டிருந்தது. இவை திரவச்சொத்துக்கள் மற்றும் மூலதனம் என்பனவற்றின் ஆகக்குறைந்த மட்டத்தைப்பேணுதல், தனிக் கடன் பெறுநரின் எல்லைகளை அவதானித்தல். பணிப்பாளர்களுக்கான கடன்வசதி மற்றும் நலன்களின் மீது கட்டுப்பாடுகள், குறிப்பிட்ட காலஎல்லைக்குள் விதித்துரைக்கப்பட்ட கணக்கிடல் முறையில் ஆண்டு நிதிக்கூற்றினைச் சமர்ப்பித்தல், செயலாற்றமற்ற முற்பணங்களின் மீதான தொங்கற் கணக்குகளின் வட்டிகளைத் தீர்மானித்தல் மற்றும் அறவிடமுடியாக் கடன்களுக்காக போதுமான ஏற்பாடுகளை வழங்குதல் என்பனவற்றையும் உள்ளடக்கியிருந்தது. மத்திய வங்கியினால் விதிக்கப்பட்ட எல்லைகளை வர்த்தக வங்கிகள் விஞ்சவில்லை என்பதனை உறுதிப்படுத்துவதற்காக அவ்வங்கிகளின் வெளிநாட்டுத் தொழிற்படு நிலுவைகள் நாளாந்தம் கண்காணிக்கப்படுகின்றன. இத்தொழிற்பாடுகளில் காலத்தோடிணையும் வகையில் கணனிமயப்படுத்துவதற்கும் புதிய பகுப்பாய்வுத் தொழில் நுட்பங்களைப் பின்பற்றுவதற்குமான தொடக்கத் திட்டங்களைத் திணைக்களம் தயாரித்துள்ளது.

ஆய்விற்குரிய ஆண்டில், வங்கித்தொழில் ஒழுங்குவிதிகள் மற்றும் மேற்பார்வை நடைமுறைக் குழுவினால் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட ஏற்ற அளவு மூலதனத்தின் புதிய வழிமுறைகளை நடைமுறைப்படுத்தலே திணைக்களத்தால் பொறுப்பேற்கப்பட்ட மிகப்பெரும் பணியாக இருந்தது. நாணய விதிச்சட்டத்தின் பிரிவு 102 இன் நியதிகளின்படி நாணயச்சபை வர்த்தக வங்கிகளுக்காக விதிக்கப்பட்ட அதன் தேவைப்பாடுகளை 1993 ஒற்றோபர் 1 ஆம் நாளின் எண் 786/15 கொண்ட அதிவிசேட அரச செய்தி மடலில்

வெளிப்படுத்தியிருந்தது. இத்தேவைகளின் நியதிகளின்படி வர்த்தக வங்கிகள் 1993 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 4 சதவீதமான மைய ஏற்ற அளவு மூலதன விகிதத்தினையும் 1994 மாச்சு 31 இல் உள்ளபடி 8 சதவீதம் கொண்ட பொதுவான விகிதத்தினையும் பேணுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன. புதிய ஒழுங்குகளின் கீழ் மூலதனத்தின் ஏற்ற அளவு இடர்த்தன்மையுள்ள சொத்துக்களுக்கெதிராக அளவிடப்பட்டது. இது, வங்கியின் மொத்தப் பொறுப்புக்களுக்கெதிராக மூலதனத்தின் ஏற்ற அளவினை அளவிடுகின்ற முன்னைய நடைமுறைகளிலிருந்தும் வேறுபட்டதாகும். வர்த்தக வங்கிகள் திணைக்களத்தினால் விதித்துரைக்கப்பட்ட குறிப்பிட்ட வடிவத்தில் அவற்றின் மூலதன ஏற்ற அளவின் தன்மையின் மீதான காலாண்டுக் கூற்றினை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன. இக்கூற்றுக்களின் அடிப்படையில் திணைக்களத்தினால் வழமையான கண்காணிப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

ஆய்விற்குரிய ஆண்டில் திணைக்களம் 1987 தொடக்கம் தொழிற்பட்டுவரும் வைப்புக் காப்புறுதித் திட்டத்தை நிருவகித்து வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை இவ்வாண்டில் 11 ஆக இருந்தவேளையில் செலுத்தப்பட வேண்டிய கட்டுப்பணம் முன்னைய ஆண்டினைப் போன்றே ஒவ்வொரு காலாண்டிற்கும் ஒவ்வொரு ரூ. 100 இற்கும் தொடர்ந்தும் 3.75 சதமாக இருந்தது.

இலங்கையின் நிதியியல்துறையின் மறுசீரமைப்பிற்கு அவசியமான வங்கித் தொழில் சட்டத்திற்காக ஏற்கெனவே இடம்பெற்ற அல்லது முன்மொழியப்பட்டிருந்த பல திருத்தங்களை உருவாக்குவதில் திணைக்களம் சுறுசுறுப்பாக ஈடுபட்டது. இது தொடர்பாக எடுத்துரைக்கப்பட்டுள்ள திருத்தங்கள் இலங்கையில் உள்ள உரிமம்பெற்ற அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும் அவை தொழிற்படும் துறையில் சமமான வாய்ப்பினை ஏற்படுத்தும் என நம்பப்படுகிறது. இவை, வர்த்தக வங்கிகளின் கரைகடந்த செயற்பாடுகள் போன்ற இதுவரை ஒழுங்குபடுத்தப்படாதிருந்த நிதியியல் தொழிற்பாடுகளை மத்திய வங்கியின் மேற்பார்வை வரம்பிற்குள் கொண்டுவருவதுடன் மத்திய வங்கியின் ஒழுங்குபடுத்தும் அதிகாரங்களை வலுப்படுத்துவதன் மூலம் மேற்பார்வை செயற்பரப்பை விரிவாக்கக்கூடும். முன்மொழியப்பட்ட திருத்தங்கள் தற்போது நடைமுறையிலுள்ள செயற்றிறன்மிக்க ஒழுங்குவிதிகளை, வங்கித்தொழில் சட்டத்திலுள்ள அத்தகைய ஒழுங்கு விதிகளுக்குட்பட்டிராத அபிவிருத்தி நிறுவனங்கள் மற்றும் சேமிப்பு வங்கிகளின் தொழிற்பாடுகளுக்குப் பொருந்தத்தக்கதாகச் செய்யும்.

## வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள்

முன்னைய ஆண்டுகளைப் போன்றே, 1993 ஆம் ஆண்டிலும் மத்திய வங்கி அதனுடன் பதிவுசெய்து கொண்ட நிதிக்கூட்டு நிலையங்களைத் தொடர்ந்தும் கண்காணித்தும் மேற்பார்வை செய்தும் வந்தது. இவ்வாண்டில் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் நிதி நிறுவனங்களின் தலப்பரீட்சிப்புக்களுக்கு பெரும் முக்கியத்துவம் வழங்கிய வேளையில் நேரகாலத்துடன் எச்சரிக்கின்ற முறையின் மூலமாக தலத்திற்கு வெளியேயான கவனக் கண்காணிப்பினையும் தொடர்ந்து மேற்கொண்டது. தலத்திற்கு வெளியேயான கவனக்கண்காணிப்பினை மேலும் வலுவாக்கும் பொருட்டு திணைக்களம் இலாப

நட்டக் கணக்குகளையும் ஐந்தொகையையும் மாதாந்த அடிப்படையில் கோருவதெனத் தீர்மானித்தது.

பொதுமக்களின் வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்ட நிதிக்கூட்டு நிலையங்களின் திரட்டிய ஐந்தொகை 1993.3.31 இல் முடிவடைந்த நிதியாண்டில் வைப்புப் பொறுப்புக்களில் 16 சதவீதமான வளர்ச்சியைக் காட்டியது. இக்கூட்டுநிலையங்களின் கடன்பாடுகள் 37.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தவேளையில் அவற்றின் தேறிய மூலதன நிதியங்கள் 15 சதவீதத்தினால் அதிகரித்தன. அறவிடமுடியாக் கடன் மற்றும் ஐயத்திற்கிடமான படுகடன்களுக்கான ஒதுக்குகள் நிதியாண்டில் இரண்டு மடங்கிற்கும் கூடுதலாயின. சொத்துக்கள் பக்கத்தில் நிதியாண்டில் மொத்தத் திரவச் சொத்துக்கள் 20 சதவீதத்தினால் அதிகரித்தவேளையில் 92.3.31 இல் மொத்தச் சொத்துக்களில் 58 சதவீதத்திற்கு வகைகூறி 93.3.31 இல் 64 சதவீதத்திற்கு அதிகரித்த முற்பணங்கள் ஏறத்தாழ 22 சதவீதமான வளர்ச்சி வீதத்தை எடுத்துக்காட்டின. கூடுதலான விபரங்கள் அட்டவணை 2.6 இல் தரப்பட்டுள்ளன.

1988 இன் 78 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் 28 நிதிக்கூட்டு நிலையங்களுக்கு மத்திய வங்கியின் நாணயச் சபையினால் பதிவு வழங்கப்பட்டது. இரு கூட்டுநிலையங்களுக்கு வழங்கப்பட்ட பதிவுகள் இவ்வாண்டில் புறக்கீடு செய்யப்பட்டன. வரையறுக்கப்பட்ட சப்றா யுனிக்கோ பினான்சின் பதிவு 93.08.27 இல் புறக்கீடு செய்யப்பட்ட வேளையில் வரையறுக்கப்பட்ட சிற்றி கிரடிட்டின் பதிவு 93.11.29 இல் புறக்கீடு செய்யப்பட்டது. இவ்விரு கூட்டுநிலையங்களினதும் பதிவுகள் புறக்கீடு செய்யப்பட்டமைக்கு நாணயச்சபையினால் வழங்கப்பட்ட பணிப்புரைகள் தொடர்ச்சியாக மீறப்பட்டமையே காரணமாகும். இவ்வாண்டில் புதிய கூட்டுநிலையங்களெதற்கும் பதிவுகள் வழங்கப்படவில்லை.

1989 இல் தொழிற்பாட்டிற்கு வந்த இடர்ப்பாட்டிலுள்ள நிதிக்கூட்டு நிலையங்களின் வைப்பாளர்களுக்கான நிவாரணத்திட்டம் இவ்வாண்டில் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட்டது. இடருக்குள்ளான 7 நிதிக் கூட்டு நிலையங்களின் வைப்பாளர்களுக்குக் கிடைக்கச் செய்யப்பட்ட நிவாரணக் கொடுப்பனவுகள் இவ்வாண்டில் ரூ. 480 இலட்சமாக விளங்கின. 1993 இறுதிவரை வைப்பாளருக்கு வழங்கப்பட்ட நிவாரணக் கொடுப்பனவுகளின் மொத்தப் பெறுமதி ரூ. 5,099 இலட்சமாகும். இந்நிவாரணக் கொடுப்பனவுகள் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களினூடாகப் பெருமளவிற்கு நிதியிடப்பட்டன. 1992 பெப்புருவரியில் நிருவாகமும் முகாமைத்துவமும் நாணயச் சபையினால் பொறுப்பேற்கப்பட்ட பதிவுசெய்யப்பட்ட நிதிக்கூட்டு நிலையமொன்றிற்கு அதன் வைப்புப் பொறுப்புக்களை ஈடுசெய்வதற்காக இவ்வாண்டில் ரூ. 2,131 இலட்சம் கொண்ட கடன்கள் வழங்கப்பட்டன. 1993 திசெம்பர் இறுதியில் இக்கூட்டுநிலையத்திற்கு வழங்கப்பட்டு வெளிநின்ற மத்திய வங்கியின் மொத்தக் கடன்கள் ரூ. 11,410 இலட்சமாக விளங்கின.

வரையறுக்கப்பட்ட காசல் பினான்ஸ் நிதிக்கூட்டு நிலையத்தினை ஒடுக்கிவிடுவதற்காக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பான கட்டளை 1993 யூன் 25 ஆம் நாளன்று வழங்கப்பட்டதுடன் அதன்படி ஒழித்துக்கட்டுபவரும் நியமிக்கப்பட்டார். அறவிடமுடியா மற்றும் ஐயத்திற்கிடமான

அட்டவணை 2.6

## தொழிற்படும் நிதிக் கூட்டு நிலையங்களின் ஒன்று திரட்டிய ஐந்தொகை*

| | | 31.03.92 இல் உள்ளவாறு ('000) | 31.03.93 இல் உள்ளவாறு ('000) | முன்னைய ஆண்டிற்கு மேலாக சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|
| **பொறுப்புக்கள்** | | | | |
| 1. மூலதன நிதியம் | | | | |
| வழங்கப்பட்ட பங்கு மூலதனம் | ... | 185,533 | 170,012 | |
| மூலதன ஒதுக்கு | ... | 315,629 | 455,065 | |
| பொது ஒதுக்கு | ... | 196,087 | 246,525 | |
| ஒதுக்கு நிதியம் | ... | 147,457 | 175,368 | |
| ஏனைய ஒதுக்குகள் | ... | 191,737 | 45,930 | |
| இலாப நட்டக் கணக்கு | ... | (56,578) | 17,625 | |
| மொத்த மூலதன நிதியங்கள் | ... | 979,865 | 1,110,525 | |
| கழிக்க : பிற்போடப்பட்ட செலவுகள் | ... | 13,868 | 107 | |
| தேறிய மூலதன நிதியங்கள் | ... | 965,997 | 1,110,418 | + 14.95 |
| 2. அறிவிடமுடியாக் கடனுக்கான ஒதுக்கு | ... | 125,866 | 258,903 | + 105.69 |
| 3. பொதுமக்களின் வைப்புக்கள் | ... | 4,288,943 | 4,986,693 | + 16.26 |
| 4. கடன்பாடுகள் | | | | |
| வங்கிகள் | ... | 1,147,746 | 718,553 | |
| ஏனையவை | ... | 49,159 | 29,724 | |
| மொத்தக் கடன்பாடுகள் | ... | 1,196,905 | 748,277 | - 37.48 |
| 5. ஏனைய பொறுப்புக்கள் | ... | 659,677 | 951,104 | + 44.48 |
| முழு மொத்தம் | ... | 7,237,388 | 8,055,395 | + 11.30 |
| **சொத்துக்கள்** | | | | |
| 1. திரவச் சொத்துக்கள் | | | | |
| காசும் வங்கிகளிலிருந்து வரவேண்டியவையும் | ... | 441,076 | 168,216 | |
| நிலையான வைப்புக்கள் | ... | – | 325,207 | |
| திறைசேரி உண்டியல்கள் | ... | 405,915 | 501,915 | |
| நி. வைப்புக்கள், தி. உண்டியல்கள் மீதான வட்டிகள் | ... | – | 28,352 | |
| மொத்த திரவச் சொத்துக்கள் | ... | 846,991 | 1,023,690 | + 20.36 |
| 2. முதலீடுகள் | | | | |
| துணை மற்றும் கூட்டிலுள்ள பங்குகள் | ... | 102,686 | 119,347 | |
| ஏனைய கம்பனிகளிலுள்ள பங்குகள் | ... | 444,814 | 428,298 | |
| தொடர்புடைய கம்பனிகளிலுள்ள பங்குகள் | ... | – | 500 | |
| மொத்த முதலீடுகள் | ... | 547,500 | 548,146 | + 0.11 |
| 3. முற்பணங்கள் | | | | |
| கடன்கள் | ... | 1,071,482 | 577,968 | |
| வாடகைக் கொள்வனவுகள் | ... | 1,911,866 | 1,991,550 | |
| குத்தகை | ... | 1,246,388 | 472,892 | |
| குத்தகை நிதி | ... | – | 1,633,504 | |
| உண்மைச் சொத்துக்கள் | ... | – | 200,614 | |
| ஏனைய சொத்துக்கள் | ... | – | 275,738 | |
| மொத்த முற்பணங்கள் | ... | 4,229,736 | 5,152,266 | + 21.81 |
| 4. துணைமற்றும் கூட்டிலிருந்து வரவேண்டியது | ... | – | 9,538 | |
| 5. நிலையான சொத்துக்கள் | | | | |
| இறையில் காணியும் கட்டடங்களும் | ... | 507,495 | 591,429 | |
| தளபாடங்கள் பொருத்துக்கள் இணைப்புக்கள் அலுவலக கருவிகள் | | 96,434 | 92,246 | |
| உந்து ஊர்திகள் | ... | 83,178 | 68,912 | |
| பொறிகள் | ... | – | 33,993 | |
| ஏனையவை | ... | 303,336 | 11,419 | |
| மொத்த நிலையான சொத்துக்கள் | ... | 990,443 | 797,999 | – 19.43 |
| 6. ஏனைய சொத்துக்கள் | ... | 622,718 | 523,757 | – 15.89 |
| முழு மொத்தம் | ... | 7,237,388 | 8,055,395 | + 11.30 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

* பொதுமக்களின் புதிய வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு அனுமதிக்கப்படாத கூட்டு நிலையங்கள் நீங்கலாக அறியத்தந்த கூட்டு நிலையங்களின் எண்ணிக்கை.

கடன்களுக்கான ஒதுக்கங்கள் மீதான பணிப்புரைகள் தொடர்பாக 1992 இல் நாணயச்சபையினால் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் 1993.3.31 இல் இருந்து மேலும் ஓராண்டு காலத்திற்கு நீடிக்கப்பட்டன.

வரையறுக்கப்பட்ட சிற்றி கிறடிட் மற்றும் வரையறுக்கப்பட்ட சப்றா யுனிக்கோ பினான்ஸ் என்பனவற்றின் உரிமங்கள் இரத்துச் செய்யப்பட்டதன் விளைவாக அவர்களின் நிதி வியாபாரத்தை நீக்கிவிட்டு வைப்பாளர்களுக்கான அவர்களின் பொறுப்புக்களைத் தீர்ப்பனவு செய்யுமாறு இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் அவர்களுக்கு பணிப்புரை வழங்கப்பட்டது. 1993 ஓகத்து 10 ஆம் நாளன்று அரச செய்திமடலில் வெளியிடப்பட்ட, வரையறுக்கப்பட்ட சப்றா யூனிக்கோ பினான்சுக்கு வழங்கப்பட்ட கட்டளையின் பிரிவெடை பின்வருமாறு.

1993 ஆம் ஆண்டின் நிதிக் கம்பெனிகள் (கொழும்பு 4 ஆர். ஏ. த மெல் மாவத்தை 2 $^{2}/_{1}$ ஆம் இலக்கத்தைக்கொண்ட சப்றா கவுசிலுள்ள சப்றா யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்டின் நிதி அலுவல்களைத் துறத்தலும் வைப்புப் பொறுப்புக்களைக் கொடுத்துத் தீர்த்தலும்) பற்றிய பணிப்புரை.

வரையறுக்கப்பட்ட சப்றா யூனிக்கோ பினான்ஸ் (இதனகத்துப் பின்னர் கம்பெனி என அழைக்கப்பட்டு குறிப்பீடு செய்வதான) அதன் நிதி அலுவல்களை உரிமைதுறக்கவும் பதினெட்டுக் கோடியே எழுபத்திரண்டு இலட்சத்து இருபத்துநாலாயிரத்து எழுநூற்றி நாற்பது ரூபா பதினெட்டுச் சதம் (ரூ. 187,224,740.18) பெறுமதியான அதன் வைப்புப் பொறுப்புக்களைக் கொடுத்துத் தீர்க்கவும் தொடங்குதல் வேண்டும்.

(i) 10.27 கோடி ரூபாவுக்குக் குறையாதவொரு பணத்தொகை பின்வரும் முறையில் 1993 செத்தெம்பர் 1 ஆம் தேதியிலிருந்து தொடங்குகின்ற 12 மாதங்களினுள் நிலுவையாகவுள்ள வைப்புக்களுக்கு விகிதமாக அத்தகைய வைப்பு முதிர்வடையும் ஒழுங்கு வரிசைப்படி வைப்பாளர்களுக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(அ) 6.52 கோடி ரூபா பணத்தொகையை 1993 செத்தெம்பர் 1 ஆம் தேதியிலிருந்து 1993 திசெம்பர் 31 ஆம் தேதிவரையிலான காலப்பகுதியின் போது வைப்பாளர்களுக்குச் செலுத்தப்படுதல்.

(ஆ) 2.45 கோடி ரூபா பணத்தொகையை 1994 சனவரி 1 ஆம் தேதியிலிருந்து 1994 ஏப்பிறல் 30 ஆம் திகதிவரையிலான காலப்பகுதியின்போது வைப்பாளர்களுக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(இ) 1.3 கோடி ரூபா பணத்தொகையை 1994 மே 1 ஆம் தேதியிலிருந்து 1994 ஓகத்து 31 ஆம் தேதிவரையிலான காலப்பகுதியின்போது வைப்பாளர்களுக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(ii) அதன் பின்னர் 5.57 கோடி ரூபாவிற்குக் குறையாத பணத்தொகையை பின்வரும் முறையில் 1994 செத்தெம்பர் 1 ஆம் தேதியிலிருந்தும் தொடங்குகின்ற அடுத்த 12 மாதங்களினுள் நிலுவையாகவுள்ள வைப்புக்களுக்கு விகிதசமமாக முதிர்வடையும் ஒழுங்குவரிசைப்படி வைப்பாளர்களுக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(அ) 1.07 கோடி ரூபா பணத்தொகையை 1994 செத்தெம்பர் 1 ஆம் தேதியிலிருந்தும் 1994 திசெம்பர் 31 ஆம் தேதியிலான காலப்பகுதிக்குள் செலுத்தப்படுதல்.

(ஆ) 4.5 கோடி ரூபா பணத்தொகையை 1995 சனவரி 1 ஆம் தேதியிலிருந்தும் 1995 ஓகத்து 31 ஆம் தேதிவரையிலான காலப்பகுதிக்குள் செலுத்தப்படுதல்.

(iii) 1995 செத்தெம்பர் 1 ஆம் தேதியன்று நிலுவையாகவுள்ள மீதி வைப்புப் பொறுப்புக்களும் 187,224,740 ரூபாவான மொத்த வைப்புப் பொறுப்புக்கள் மீது 1993 யூலை 1 ஆம் தேதிவரையிலான ஒன்று திரண்ட வட்டியும் 1995 செத்தெம்பர் 1 ஆம் தேதியிலிருந்து தொடங்குகின்ற 12 மாதங்களினுள் செலுத்தப்படுதல் வேண்டும்.

வரையறுக்கப்பட்ட சிற்றிகிறடிட்டிற்கு 1993 நவெம்பர் 30 ஆம் நாளிலிருந்து வழங்கப்பட்டு அரச செய்திமடலில் வெளியிடப்பட்ட கட்டளையின் பிரிவெடை பின்வருமாறு.

1993 ஆம் ஆண்டின் நிதிக்கூட்டு நிலையங்கள் (கொழும்பு 3 காலிவீதி 329 $^{1}/_{1}$ ஆம் இலக்கத்தைக்கொண்ட சிற்றிகிறடிட் லிமிட்டட்டின் நிதி அலுவல்களை துறத்தலும் வைப்புப் பொறுப்புக்களைக் கொடுத்துத் தீர்த்தலும்) பற்றிய பணிப்புரை

வரையறுக்கப்பட்ட சிற்றிகிறடிட் (இதனகத்துப் பின்னர் கம்பனி என அழைக்கப்பட்டு குறிப்பீடு செய்யப்படுவதான) அதன் நிதி அலுவல்களை உரிமை துறக்கவும் ஒரு கோடியே இருபத்திரண்டு இலட்சத்து இருபத்து ஏழாயிரத்து நூற்றி இருபத்திரண்டு ரூபா அறுபத்தாறு சதம் (ரூ. 12,227,122.66) பெறுமதியான அதன் வைப்புப் பொறுப்புக்களை பின்வரும் முறையில் கொடுத்துத் தீர்க்கவும் தொடங்குதல் வேண்டும்.

(i) கம்பனியானது அதன் வைப்புப் பொறுப்புக்களில் (வட்டி நீங்கலாக) மாதமொன்றுக்கு 8.5 சதவீதத்திற்கு குறையாத தொகையை அதன் வைப்பாளர்களுக்குச் செலுத்தல் வேண்டும். கொடுப்பனவுகள் 1993 திசெம்பர் 1 இலிருந்து வைப்புக்கள் முதிர்ச்சியடையும் ஒழுங்கில் செலுத்தப்படல் வேண்டும்.

(ii) ரூபா 12,227,122.66 கொண்ட மொத்தவைப்புப் பொறுப்புக்களின் மீது 1993 யூன் 30 வரையான ஒன்று திரண்ட வட்டியும் 1994 திசெம்பர் 1 ஆம் நாளிலிருந்து தொடங்குகின்ற 12 மாதங்களினுள் செலுத்தப்படுதல் வேண்டும்.

# அபிவிருத்தி நிதி

1993 இல் அபிவிருத்தி நிதித் திணைக்களம், பன்னாட்டு அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகள் முகவர் நிலையத்தின் (பஅஐநாமு) வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமானம் பெறுவோர் புகலிட நிகழ்ச்சித் திட்டம் (வீஉகுவபுதி) கட்டம் IV இன் கீழான குறைந்த வருமானம் பெறும் குழுவினருக்கான வீடமைப்பு மீள்நிதியிடல் திட்டத்திற்குப் புறம்பாக சிறிய, நடுத்தர கைத்தொழில்களுக்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டங்கள், பேருந்துக் கொள்வனவுக் கடன், தொழில் முயற்சியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் என்பனவற்றின் தொழிற்பாட்டினைத் தொடர்ந்தும் தொழிற்படுத்தியது. 1991 திசெம்பரில் நடைமுறைக்கு வந்த நடுத்தர நீண்டகால கொடுகடன் நிதியத்தின் (நநீகொநி) கீழான மீள்நிதியிடல் வசதிகளின் இடைநிறுத்தம் 1993 இலும் தொடர்ந்திருந்தது. எனவே நநீகொ நிதியத்தினை நிருவகித்தல் நநீகொ நிதி வசதி இடைநிறுத்தப்படுவதற்கு முன் மீள்நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களின் (நிதிக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட மீள்நிதியிடல் நீங்கலாக) செயலாற்றத்தினை பின்தொடர்வதற்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

## கொடுகடன் உத்தரவாதத் தொழிற்பாடுகள்

மத்திய வங்கியினால் நிருவகிக்கப்படும் ஆறு கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களின் கீழான அதாவது சிறிய அளவுக் கைத்தொழில் திட்டம், சி. ந. கைத்தொழில் I, II, III, IV திட்டங்கள், மற்றும் பேருந்துக் கொள்வனவு கடன் திட்டம் என்பனவற்றுடன் உத்தரவாத தொழிற்பாடுகளின் தொகுப்பு 1993 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே அட்டவணை 2.7 இலும் 2.8 இலும் தரப்பட்டுள்ளது. சிறிய நடுத்தரக் கைத்தொழில் II, III மற்றும் IV திட்டங்களின்கீழ் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களின் கைத்தொழில்வாரியான பகுப்பினை அட்டவணை 2.9 தருகின்றது.

## சிறிய அளவுக் கைத்தொழில் திட்டம்

1978 இல் நடைமுறைக்கு வந்த சிஅ கை திட்டம் 1979 இன் சி ந கை திட்டம் I இன் மூலம் அகற்றப்பட்டது. சிஅகை திட்டத்தின் கீழ் கொடுகடன் உத்தரவாதத்தினை வழங்குதல் 1981 இல் முற்றுப்பெற்றது. இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட 767 மொத்தக் கடன்களில் ரூ. 5.8 இலட்சம் பெறுமதி கொண்ட 10 கடன்கள் மட்டும் மத்திய வங்கிக்கான ரூ. 4.4 இலட்சம் கொண்ட மொத்த உத்தரவாதக் கடப்பாடுகளுடன் 1993 இறுதியில் தொழிற்பாட்டிலிருந்தன. இத்திட்டத்தின் கீழான கோரல்கள் திறைசேரியினால் செலுத்தப்பட்டதுடன் இது ஏற்கெனவே ரூ. 17 இலட்சங்களைச் செலுத்தியுள்ளது. வெளிநின்ற அனைத்து 10 கடன்கள் தொடர்பான கோரல்கள் சமர்ப்பிக்கப்பட்டவுடன் திறைசேரியினால் வழங்கப்படும் ரூ. 5 இலட்சம் கொண்ட மேலதிகக் கொடுப்பனவுடன் தொடர்பானதாக இது இருக்கும்.

## சிறிய, நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் – 1 (சிநகை – 1) திட்டம்

சி. ந. கைத்தொழில் I திட்டம் 1979 இல் நடைமுறைக்கு வந்தது. இத்திட்டத்தின் கீழ் 1979 – 1982 காலப்பகுதியில் ரூ. 2,860 இலட்சம் பெறுமதிகொண்ட 1,670

## மத்திய வங்கிக் கொடுகடன்
## 1993 திசெம்பர்

| திட்டங்களும் ஆண்டுகளும் | சிறிய அளவுக் கைத்தொழில்கள் (சிஅகை) 1993 | | சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் - I 1993 | |
|---|---|---|---|---|
| விடயம் | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி |
| 1.1 வழங்கப்பட்ட கடன்கள் ... | 767 | 31.20 | 1,670 | 286.10 |
| 1.2 உத்தரவாதமளிக்கப்பட்ட கடன்கள் ... | 767 | 23.40 (ஆ) | 1,670 | 157.50 (இ) |
| 2.1 முழுமையாக மீளச் செலுத்தப்பட்ட கடன்கள் ... | 596 | 22.90 | 1,223 | 182.53 |
| 2.2 புறக்கீடு செய்யப்பட்ட அல்லது காலாவதியான உத்தரவாதங்கள் ... | 90 | 4.89 | 113 | 31.38 |
| **கோரல்கள்** | | | | |
| 3.1 பெறப்பட்ட மொத்தக் கோரல்கள் ... | 88 | 4.32 (எ) | 337 | 75.72 (எ) |
| 3.2 மத்திய வங்கிப் பொறுப்புக்கள் ... | | 2.42 | | 33.51 |
| 3.3 தீர்க்கப்பட்ட கோரல்கள் | | | | |
| 3.3.1 முழுமையாகத் தீர்க்கப்பட்டவை ... | 63 | 1.68 | 229 | 18.87 |
| 3.3.2 பகுதியளவில் தீர்க்கப்பட்டவை ... | 1 | 0.00 (ஏ) | 27 | 2.11 |
| 3.3.3 நிராகரிக்கப்பட்ட கோரல்கள் .. | 7 | 0.22 | 29 | 5.08 |
| 3.3.4 கோரல்கள் சமர்ப்பிக்கப்பட்டபின் முழுமையாகச் செலுத்தப்பட்ட கடன்கள் (ஒ) ... | 16 | 0.24 | 37 | 2.03 |
| 3.3.5 பிற்போடப்பட்ட கோரல்கள் (ஒ) ... | 1 | 0.27 | 11 | 2.64 |
| 3.3.6 முடிவுறாக் கோரல்கள் (ஒ) ... | | | 3 | 0.51 |
| 3.3.7 புறக்கீடு செய்யப்பட்ட கோரல்கள் (ஒ) ... | | | | |
| 4.1 வெளிநிற்கும் கடன்கள் ... | 10 | 0.58 (ஐ) | 49 | 5.96 (ஐ) |
| 4.2 (இதில் செலுத்தப்படாது உள்ளவை) ... | 10 | 0.58 | 49 | 5.96 |
| 4.3 வெளிநின்ற உத்தரவாதங்கள் மீதான மத்திய வங்கியின் பொறுப்பு ... | 10 | 0.44 (ஆ) | 49 | 3.58 (இ) |
| 5. கட்டணச் சேகரிப்புக்கள் ... | | 1.00 | | 12.17 |
| 6. கோரலுக்குப் பிந்திய மீட்புக்கள் ... | | 0.61 | | 6.90 |

(அ) தேசிய அபிவிருத்தி வங்கியால் சிறிய நடுத்தர அளவு கைத்தொழில்கள் IV ற்கு மாற்றப்பட்ட கடன்கள் நீங்கலாக.

(ஆ) வெளிநிற்கும் கடன்களில் 75 சதவீதம்.

(இ) செயற்றிட்டம் ஒன்றுக்கு ஆகக் கூடியது ரூ. 400,000/- வரையறைக்குட்பட்டு, வெளி நின்ற கடன்களில் 60 சதவீதம்.

(ஈ) ரூ. 2,000,000 வரையான கடன்களைப் பொறுத்தவரை ஆகக்கூடியது ரூ. 800,000 இற்கும் ரூ. 2,000,000 இற்கும் ரூ. 4,000,000 இற்கும் இடைப்பட்ட கடன்களுக்கு ஆகக்கூடியது ரூ. 1,200,000 இற்கு உட்பட்டு, வெளிநின்ற கடன்களில் 60 சதவீதம்.

(உ) செயற்றிட்டமொன்றிற்கு ஆகக்கூடியது ரூ. 1,600,000 இற்கு உட்பட்டு ரூ. 2,000,000, வரை, ரூ. 2,000,000 தொடக்கம் ரூ. 3,000,000, ரூ. 3,000,000 தொடக்கம் ரூ. 4,000,000 வரையான கடன்களுக்கு முறையே 80 சதவீதம், 60 சதவீதம், 40 சதவீதம்.

அட்டவணை 2.7

## உத்தரவாதத் திட்டங்களின் தொகுப்பு

31 இல் உள்ளவாறு

(பெறுமதி பத்து இலட்சம் ரூபாய்களில்)

சிறிய, நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் (சிநகை)

| சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் - II | | | | சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் - III | | | | சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் - IV | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1992 | | 1993 | | 1992 | | 1993 | | 1992 | | 1993 | |
| எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி |
| 2,531 | 1,392.54 | 2,531 | 1,392.54 | 3,129 | 1,955.04 (அ) | 3,130 | 1,955.59 (அ) | 2,621 | 1,915.99 | 4,899 | 3,477.03 |
| 2,531 | 713.63 (ஈ) | 2,531 | 713.63 (ஈ) | 3,129 | 1,312.18 (உ) | 3,130 | 1,312.62 (உ) | 2,621 | 1,137.52 (ஊ) | 4,899 | 2,102.03 (ஊ) |
| 1,111 | 441.65 | 1,368 | 575.58 | 227 | 99.36 | 505 | 183.85 | 6 | 1.26 | 19 | 13.74 |
| 340 | 167.37 | 340 | 167.37 | 267 | 202.09 | 252 | 195.19 | 22 | 11.62 | 52 | 32.69 |
| 204 | 84.71 (எ) | 216 | 87.21 (எ) | 36 | 14.54 (எ) | 90 | 37.18 (எ) | 1 | 0.14 (எ) | 13 | 6.50 (எ) |
| | 49.87 | | 55.76 | | 12.74 | | 30.98 | | 0.14 | | 6.39 |
| 113 | 25.94 | 117 | 29.44 | 16 | 3.45 | 50 | 15.39 | | | 5 | 1.08 |
| 5 | 0.71 | 4 | 0.67 | | | | | | | | |
| 39 | 9.08 | 40 | 9.41 | 5 | 1.70 | 16 | 5.49 | | | 1 | 0.16 |
| 2 | 0.58 | 5 | 1.10 | | | | | | | | |
| 24 | 7.51 | 24 | 7.51 | 3 | 0.40 | 5 | 2.57 | | | 1 | 1.11 |
| 21 | 5.16 | 19 | 2.99 | 12 | 7.18 | 19 | 8.44 | 1 | 0.14 | 6 | 4.06 |
| | | 7 | 3.62 | | | | | | | | |
| 923 | 287.27 (ஐ) | 662 | 203.51 (ஐ) | 2,614 | 1,128.53 (ஐ) | 2,307 | 872.88 (ஐ) | 2,592 | 840.75 (ஐ) | 4,822 | 1,801.26 (ஐ) |
| 678 | 163.37 | 427 | 55.72 | 893 | 73.16 | 748 | 80.89 | | | | |
| 923 | 164.76 (ஈ) | 662 | 117.05 (ஈ) | 2,614 | 759.41 (உ) | 2,307 | 577.04 (உ) | 2,592 | 579.09 (ஊ) | 4,822 | 1,220.18 (ஊ) |
| | 27.17 | | 28.38 | | 27.96 | | 34.68 | | 2.58 | | 17.93 |
| | 6.98 | | 11.86 | | 0.49 | | 3.25 | | | | 0.09 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(ஊ) செயற்றிட்டமொன்றிற்கு ஆகக்கூடியது ரூ. 16 இலட்சம் என்பதற்குட்பட்டு ரூ. 5 இலட்சம் வரை, ரூ. 5 இலட்சம் - ரூ. 10 இலட்சம், ரூ. 10 இலட்சம் - ரூ. 20 இலட்சம், ரூ. 20 இலட்சம் - ரூ. 80 இலட்சம் என்பனவற்றிற்கு முறையே 90%, 80%, 70%, 60%.

(எ) ஒன்றுசேர்ந்த வட்டியையும் உள்ளடக்கிய செலுத்தப்படாத தொகை.

(ஏ) ரூ. 4504.75 தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளது.

(ஐ) மீட்கப்பட்ட தவணைப் பணம் நீங்கலாக.

(ஒ) 2.1 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஓ) 4.1. இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

உத்தரவாதங்கள் வழுங்கப்பட்டன. 1993 வரை 1,223 கடன்கள் முழுமையாகச் செலுத்தப்பட்டன. பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் மத்திய வங்கியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு இணங்கி ஒழுகாமையின் காரணமாக 1993 இறுதியில் ரூ. 310 இலட்சம் தொகை கொண்ட 113 உத்தரவாதங்கள் ஒன்றில் புறக்கீடு செய்யப்பட்டன அல்லது காலாவதியாகின. ரூ. 335 இலட்சம் மொத்தப் பொறுப்பினைக் கொண்ட 337 கோரல்கள் பெறப்பட்டதுடன் இதில் ரூ. 189 இலட்சங்கொண்ட 229 கோரல்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டன. எடுக்கப்பட்ட தீர்மானத்தின் நியதிகளுக்கிணங்க நாட்டின் வடக்குக் கிழக்குப் பகுதிகளிலுள்ள செயற்றிட்டங்களுக்காக வழங்கப்பட்டு செலுத்தத் தவறிய அல்லது தோல்விகண்டவையென பிரகடனம் செய்யப்பட்ட 27 கடன்கள் மீதான 50 சதவீதப் பொறுப்பில் ரூ. 21 இலட்சம் கொண்டதொகை இடைக்காலத் தீர்ப்பனவாகச் செலுத்தப்பட்டது. கடன் பெறுநர்களினால் உரிமக் கோரல்கள் சமர்ப்பிக்கப்பட்டபின் 37 கோரல்கள் தொடர்பாக ரூ. 20 இலட்சம் செலுத்தப்பட்ட வேளையில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு இணங்கி ஒழுகாமையின் காரணமாக ரூ. 51 இலட்சம் மொத்தப் பெறுமதி கொண்ட 29 கோரல்கள் நிராகரிக்கப்பட்டன. பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட புத்தாக்க நிகழ்ச்சித் திட்டங்களின் காரணமாக அல்லது கடன் பெறுநர்கள் தமது உரிமக்கோரல்களைச் சமர்ப்பித்த பின்னர் அத்தகைய கடன்களை மீளச் செலுத்துவதற்கு மீண்டும் தொடங்கியமை காரணமாக ரூ. 26 இலட்சம் தொகை கொண்ட 11 கோரல்களைச் சீர்தூக்கிப் பார்த்தல் பிற்போடப்பட்டது. 1993 திசெம்பர் இறுதியில் ரூ. 36 இலட்சம் ஆகக்கூடிய உத்தரவாதப் பொறுப்பினைக் கொண்ட ரூ. 59.6 இலட்சம் பெறுமதியான 49 கடன்கள் மட்டும் தொழிற்பாட்டிலிருந்ததாக அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் சேகரிக்கப்பட்ட கட்டுப்பணமும் மத்தியவங்கியினால் பெறப்பட்ட உரிமக்கோரலுக்குப் பிந்திய மீளப் பெறுகைகளும் முறையே ரூ. 122 இலட்சமாகவும் ரூ. 69 இலட்சமாகவும் விளங்கின. கட்டுப்பண உட்பாய்ச்சல், மற்றும் உரிமக்கோரலுக்குப் பிந்திய மீளப்பெறுகைகள் என்பனவற்றின் மூலம் உருவான கிடைக்கத்தக்க மூலவளங்கள் ரூ. 191 இலட்சமாக அமைந்து இத்திட்டத்தின் கீழான பொறுப்புக்களை ஈடுசெய்யப் போதுமானதாக இருக்காமையினால் ரூ. 20 இலட்சம் கொண்ட தொகை மத்திய வங்கியினால் ஈடுசெய்யப்பட வேண்டியிருந்தது. ரூ. 59 இலட்சம் தொகைகொண்ட வெளிநின்ற கடன்கள் மீதான 49 உத்தரவாதங்கள் தொடர்பான மதிப்பிடப்பட்ட பொறுப்பு ரூ. 36 இலட்சமாக இருந்தது.

## சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் – II (சி ந கை II) திட்டம்

சி. ந. கை II திட்டம் 1982 இல் நடைமுறைக்கு வந்ததுடன் இத்திட்டத்தின் கீழான உத்தரவாதங்கள் 1989 வரை வழங்கப்பட்டன. 1982 – 89 காலப்பகுதியில் ரூ. 7,140 இலட்சம் ஆகக்கூடிய உத்தரவாதப் பொறுப்பினைக் கொண்ட ரூ. 13,930 இலட்சம் தொகைகொண்ட கடன்கள் மீது 2,531 உத்தரவாதங்கள் வழங்கப்பட்டன. இவற்றில் ரூ. 5,760 இலட்சம் தொகைகொண்ட 1,368 கடன்கள் முழுமையாக மீளச் செலுத்தப்பட்ட வேளையில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் மத்திய வங்கியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு இணங்கி ஒழுகாமையின் காரணமாக ரூ. 1,670 இலட்சம் பெறுமதி கொண்ட 340 உத்தரவாதங்கள் ஒன்றில் புறக்கீடு செய்யப்பட்டன அல்லது காலாவதியாகின. 1993 இறுதியில் ரூ. 560 இலட்சம்

பொறுப்பைக்கொண்ட 216 கோரல்கள் பெறப்பட்டதுடன் இதில் ரூ. 290 இலட்சம் தொகை கொண்ட 117 உரிமக்கோரல்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டன. வடக்கு கிழக்கு மாகாணங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானத்தின் நியதிகளின்படி ரூ. 6.7 இலட்சம்கொண்ட 4 உரிமக்கோரல்கள் தொடர்பாக மத்திய வங்கியின் பொறுப்பில் 50 சதவீதத்தினை விஞ்சாத இடைக்கால கொடுப்பனவு செய்யப்பட்ட வேளையில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் மத்திய வங்கியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு இணங்கி ஒழுகாமை காரணமாக ரூ. 90 இலட்சங்கொண்ட 40 உரிமக் கோரல்கள் நிராகரிக்கப்பட்டன. மத்திய வங்கிக்கு உரிமக் கோரல்களைச் சமர்ப்பித்தபின் கடன் பெறுநர்களால் 5 உரிமக் கோரல்களுடன் தொடர்பான கடன்கள் மீளச் செலுத்தப்பட்ட வேளையில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் ரூ. 36 இலட்சம் தொகைகொண்ட 7 கோரல்களைப் புறக்கீடு செய்தன. 1993 இறுதியில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட புத்தாக்க நிகழ்ச்சித் திட்டங்களின் பேரில் அல்லது கடன் பெறுநர்கள் உரிமக்கோரல்களைச் சமர்ப்பித்ததின்பின் கடன்களை மீளச் செலுத்துவதற்கு மீண்டும் தொடங்கியமையால் ரூ. 75 இலட்சம் தொகை கொண்ட 24 உரிமக்கோரல்களைச் சீர்தூக்கிப் பார்ப்பது பிற்போடப்பட்டது. 1993 இறுதியில் ரூ. 1,170 இலட்சம் கொண்ட மொத்த மத்திய வங்கி உத்தரவாதப் பொறுப்பினையுடைய ரூ. 2,040 இலட்சம் கொண்ட 662 கடன்கள் தொழிற்பாட்டிலிருந்தன. இவற்றில் ரூ. 557 இலட்சம் பொறுப்பினைக் கொண்ட 427 கடன்கள் நிலுவையிலுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1993 இறுதியில் இத்திட்டத்தின்கீழ் சேகரிக்கப்பட்ட மொத்தக்கட்டுப்பணம் ரூ. 284 இலட்சமாக அமைந்தவேளையில் மத்திய வங்கியினால் உரிமக் கோரல்களுக்குப்பின் பெறப்பட்ட மீளப்பெறுகைகள் ரூ. 119 இலட்சமாக விளங்கி மொத்தம் ரூ. 403 இலட்சமாக அமைந்தது.

## சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் - III (சிநகை III) திட்டம்

சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில் III திட்டம் 1988 இல் நடைமுறைக்கு வந்தது. இத்திட்டத்தின் கீழ் ரூ. 19,560 இலட்சம் பெறுமதியான 3,130 கடன்கள் உத்தரவாதப்படுத்தப்பட்டன. 1991 இல் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் நியதிகளின்படி சி. ந. கை. III இன் கீழ் ஆரம்பத்தில் ஒப்புதலளிக்கப்பட்ட 754 கடன்கள் சிநகை IV திட்டத்திற்கு மாற்றப்பட்டன.

சிநகை III திட்டத்தின்கீழான 3,130 கடன்களில் ரூ. 1,840 இலட்சங்கொண்ட 505 கடன்கள் முழுமையாக மீளச் செலுத்தப்பட்ட வேளையில் ரூ. 1,950 இலட்சம் கொண்ட 252 கடன்களுடன் தொடர்பான உத்தரவாதங்கள் மத்திய வங்கியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு ப. கொ. நிறுவனங்கள் இணங்கி ஒழுகாமை காரணமாகப் புறக்கீடு செய்யப்பட்டன அல்லது காலாவதியாகின. 1993 இறுதியில் ரூ. 310 இலட்சம் மத்தியவங்கி உத்தரவாதப் பொறுப்பினைக் கொண்ட 90 கோரல்கள் பெறப்பட்டன. இவற்றில் ரூ. 154 இலட்சம் தொகை கொண்ட 50 கோரல்கள் தீர்ப்பனவு செய்யப்பட்ட வேளையில் ரூ. 55 இலட்சம் தொகை கொண்ட 16 கோரல்கள் நிராகரிக்கப்பட்டன. இவ்வாறான உரிமக் கோரல்களைச் சமர்ப்பித்த பின்னர் கடன்பெறுநர்கள் சம்பந்தப்பட்ட கடன் கணக்குகளை ஒழுங்கு

முறைப்படுத்தியதன் காரணமாக 5 உரிமக் கோரல்களைச் சீர்தூக்கிப்பார்த்தல் பிற்போடப்பட்டது. 1993 திசெம்பர் இறுதியில் ரூ. 5,770 இலட்சம் ஆகக்கூடிய உத்தரவாதப் பொறுப்பினைக் கொண்ட ரூ. 8,730 இலட்சம் பெறுமதி கொண்ட 2,307 கடன்கள் தொழிற்பாட்டிலிருந்தன.

இத்திட்டத்தின்கீழ் சேகரிக்கப்பட்ட மொத்தக் கட்டுப்பணங்கள் 1993 திசெம்பர் இறுதியில் ரூ. 347 இலட்சமாக விளங்கிய வேளையில் உரிமைக் கோரல்களுக்குப் பிந்திய மீளப்பெறுகைகளாக மத்திய வங்கியினால் ரூ. 33 இலட்சம் மீளப்பெறப்பட்டது.

## சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் - IV (சிநகை - IV) திட்டம்

சிநகை IV திட்டம் 1992 மாச்சில் தொடங்கப்பட்டு தற்பொழுது தொழிற்பட்டு வருகின்றது. 1993 இறுதியில் ரூ. 34,770 இலட்சம் தொகை கொண்ட 4,899 கடன்கள் உத்தரவாதப்படுத்தப்பட்டன. இக்கடன்கள் தொடர்பான மத்திய வங்கியின் பொறுப்பு ரூ. 21,020 இலட்சமாக இருந்தது. இவ்வாண்டுக் காலத்தில் ரூ. 137 இலட்சம் பெறுமதி கொண்ட 19 கடன்கள் முழுமையாகத் தீர்ப்பனவு செய்யப்பட்டவேளையில் 52 உத்தரவாதங்கள் மத்திய வங்கியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு ப. கொ. நிறுவனங்கள் இணங்கி ஒழுகாமை காரணமாக ஒன்றில் புறக்கீடு செய்யப்பட்டன அல்லது காலாவதியாகின. 1993 இறுதியில் ரூ. 18,010 இலட்சம் பெறுமதியான 4,822 கடன்கள் தொழிற்பாட்டிலிருந்தன. இக்கடன்கள் மீது வழங்கப்பட்ட உத்தரவாதங்கள் ரூ. 12,220 இலட்சங்களாக விளங்கின. 1993 திசெம்பர் இறுதியில் ரூ. 65 இலட்சம் பெறுமதியான 13 உரிமக்கோரல்கள் பெறப்பட்டதுடன் இதில் ரூ. 11 இலட்சம் தொகை கொண்ட 5 உரிமக்கோரல்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டன. 1993 இறுதியில் சேகரிக்கப்பட்ட உத்தரவாதக் கட்டுப்பணத்தின் மொத்தத் தொகை ரூ. 179 இலட்சமாக இருந்தது.

## பேருந்துக் கொள்வனவுக் கடன் திட்டம் (பே. கொ. க. திட்டம்)

பொதுமக்களின் போக்குவரத்திற்காக பேருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கு தனியார் பேருந்துத் தொழிற்பாட்டாளருக்கு ப. கொ. நிறுவனங்களினால் வழங்கப்பட்ட கடன்களை உள்ளடக்கும் விதத்தில் மத்தியவங்கியினால் இத்திட்டம் 1990 நவெம்பரில் தொடங்கப்பட்டது. பே. கொ. கடன் திட்டத்தின்கீழ் 1,816 கடன் பெறுநர்களினால் 1,911 புதிய பேருந்துகள் பொதுமக்கள் பேருந்து போக்குவரத்து தொகுதிக்கு அறிமுகப்படுத்தப்பட்டமையானது இத்திட்டத்தினைப் பயன்படுத்திக்கொண்ட தனியொரு பேருந்து சொந்தக்காரர்களின் உயர்ந்த விகிதத்தினை எடுத்துக்காட்டுவதாகவுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ரூ. 8,710 இலட்சங்கொண்ட மத்திய வங்கிப் பொறுப்புடன் ரூ. 10,990 இலட்சம் பெறுமதி கொண்ட 1,932 கடன்கள் உத்தரவாதமளிக்கப்பட்டன. 1992 இறுதியில் மீள்நிதியிடலை வழங்குவதற்கான தேசிய அபிவிருத்தி வங்கி வசமிருந்த மூலவளங்கள் முழுமையாகச் செலவிடப்பட்டு விட்டமையால் இத்திகதியிலிருந்து இத்திட்டம் தொழிற்படுவது நிறுத்தப்பட்டது.

1993 இறுதியில் ரூ. 280 இலட்சம் தொகை கொண்ட 51 கடன்கள் மீளச் செலுத்தப்பட்ட வேளையில் ரூ. 660 இலட்சம் பெறுமதி கொண்ட 114 உத்தரவாதங்கள் மத்திய வங்கியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு ப. கொ. நிறுவனங்கள்

இணங்கி ஒழுகாமை காரணமாக ஒன்றில் காலாவதியாகின அல்லது புறக்கீடு செய்யப்பட்டன.

1993 இறுதியில் ரூ. 23 இலட்சங்கொண்ட மத்திய வங்கியின் பொறுப்புடன் ரூ. 37 இலட்சம் தொகைகொண்ட 6 உரிமக் கோரல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. இவற்றில் ரூ. 3.9 இலட்சம் கொண்ட இரண்டு உரிமக் கோரல்கள் தீர்க்கப்பட்டதுடன் ஒரு உரிமக்கோரல் தொடர்பாக ரூ. 3 இலட்சம் கொண்ட இடைக்காலத் தீர்ப்பனவு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. 1993 இறுதியில் ரூ. 8 இலட்சம் கொண்ட இரு உரிமக் கோரல்கள் நிலுவையாக இருந்தவேளையில் ரூ. 6 இலட்சம்கொண்ட ஒரு கோரல் நிராகரிக்கப்பட்டது.

அட்டவணை 2.8

## பேருந்துக் கொள்வனவுக் கடன் திட்டத்தின் தொகுப்பு

(பெறுமதி ப. இ. ரூபாய்களில்)

| விடயம் | 1992 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | 1993 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி |
| 1.1 வழங்கப்பட்ட கடன்கள் ... | 1,928 | 1,096.57 | 1,932 | 1,098.58 |
| 1.2 உத்தரவாதமளிக்கப்பட்ட கடன்கள் ... | 1,928 | 870.62(அ) | 1,932 | 871.18(அ) |
| 2.1 முழுமையாக மீளச் செலுத்தப்பட்ட கடன்கள் ... | 9 | 4.78 | 51 | 27.75 |
| 2.2 புறக்கீடு செய்யப்பட்ட அல்லது காலாவதியான உத்தரவாதங்கள் ... | 104 | 59.51 | 114 | 66.45 |
| **கோரல்கள்** | | | | |
| 3.1 பெறப்பட்ட மொத்தக் கோரல்கள் ... | 5 | 3.17(ஆ) | 6 | 3.71(ஆ) |
| 3.2 மத்திய வங்கிப் பொறுப்பு ... | - | 1.94 | - | 2.33 |
| 3.3 கோரல்களின் தீர்ப்பனவு ... | | | | |
| 3.3.1 முழுமையாகத் தீர்க்கப்பட்டவை ... | | | 2 | 0.39 |
| 3.3.2 பகுதியளவில் தீர்க்கப்பட்டவை ... | 1 | 0.2 | 1 | 0.3 |
| 3.3.3 நிராகரிக்கப்பட்ட கோரல்கள் ... | 1 | 0.6 | 1 | 0.6 |
| 3.3.4 பின்போடப்பட்ட கோரல்கள் (ஈ) ... | - | - | - | - |
| 3.3.5 முடிவுறாக் கோரல்கள் (ஈ) ... | 3 | 1.82 | 2 | 0.81 |
| 4.1 வெளிநின்ற கடன்கள் ... | 1,810 | 903.50(இ) | 1,763 | 725.71(இ) |
| 4.2 வெளிநின்ற உத்தரவாதங்கள் மீதான மத்திய வங்கியின் பொறுப்பு ... | 1,810 | 716.79(அ) | 1,763 | 574.60(அ) |
| 5. சேகரிக்கப்பட்ட கட்டணம் ... | | 8.90 | | 12.61 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) செயற்றிட்டம் ஒன்றுக்கு ஆகக் கூடியது ரூ. 16 இலட்சத்திற்கு உட்பட்டு ரூ. 20 இலட்சம் வரை ரூ. 20 இலட்சம்/ரூ. 30 இலட்சம்/ரூ. 30 இலட்சம், ரூ. 40 இலட்சம் என்பனவற்றுக்கு முறையே 80%, 60%, 40%.

(ஆ) ஒன்று சேர்ந்த வட்டி உட்பட செலுத்தத் தவறிய தொகை.

(இ) மீட்கப்பட்ட தவணைப் பணங்கள் நீங்கலாக.

(ஈ) 4.1 இன் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 2.9

## சிநகை – II, சிநகை – III, சிநகை – IV இன் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்கள் கைத்தொழில் வகைப்படியான பகுப்பாய்வு 1993 திசெம்பர் 31 இல் உள்ளவாறு

(ரூ. '000)

| கைத்தொழில் | சிறிய நடுத்தரக் கைத்தொழில் II, III, IV 1982 - 1993 | | | | | | சிறிய நடுத்தரக் கைத்தொழில் IV 1993 | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வழங்கப்பட்ட கடன்கள் | % | கடன் தொகை | % | உத்தரவாத மளிக்கப்பட்ட தொகை | % | வழங்கப் பட்ட கடன்கள் | % | கடன் தொகை | % | உத்தரவாத மளிக்கப்பட்ட தொகை | % |
| 1. உணவு பதனிடல் | 2,595 | 24.6 | 1,662,856 | 24.4 | 959,495 | 23.2 | 500 | 22.2 | 352,991 | 22.6 | 204,884 | 21.2 |
| 2. ஏனைய வேளாண்மைக் கைத்தொழில் | 260 | 2.5 | 111,525 | 1.6 | 73,625 | 1.8 | 73 | 3.2 | 25,310 | 1.6 | 18,540 | 1.9 |
| 3. இறப்பர் உற்பத்திகள் | 221 | 2.1 | 219,904 | 3.2 | 121,570 | 2.9 | 24 | 1.1 | 34,325 | 2.2 | 16,406 | 1.7 |
| 4. உலோக உற்பத்திகள் | 879 | 8.3 | 431,704 | 6.3 | 266,121 | 6.4 | 153 | 6.7 | 65,517 | 4.2 | 45,464 | 4.7 |
| 5. கட்டடவாக்கப் பொருட்கள் | 683 | 6.5 | 361,298 | 5.3 | 247,291 | 6.0 | 89 | 3.9 | 36,773 | 2.4 | 26,578 | 2.8 |
| 6. கட்டடவாக்க ஒப்பந்தம் | 134 | 1.3 | 187,276 | 2.7 | 89,378 | 2.2 | 43 | 1.9 | 74,005 | 4.7 | 36,663 | 3.8 |
| 7. மர உற்பத்திகள் | 641 | 6.1 | 275,271 | 4.0 | 189,830 | 4.6 | 109 | 4.8 | 51,026 | 3.3 | 35,977 | 3.7 |
| 8. ஆடைகள் | 710 | 6.7 | 601,137 | 8.8 | 339,444 | 8.2 | 100 | 4.4 | 81,522 | 5.2 | 43,641 | 4.5 |
| 9. புடவைகள் | 235 | 2.2 | 244,238 | 3.6 | 129,006 | 3.1 | 22 | 1.0 | 34,320 | 2.2 | 16,141 | 1.7 |
| 10. தொழிற் கூடத்திருத்தல் | 399 | 3.8 | 179,288 | 2.6 | 125,526 | 3.0 | 84 | 3.7 | 40,643 | 2.6 | 30,467 | 3.2 |
| 11. ஏனையவை | 3,803 | 36.0 | 2,550,663 | 37.4 | 1,586,994 | 38.4 | 1,075 | 47.2 | 764,611 | 49.0 | 489,751 | 50.8 |
| மொத்தம் | 10,560 | 100.0 | 6,825,163 | 100.0 | 4,128,280 | 100.0 | 2,278 | 100.0 | 1,561,043 | 100.0 | 964,512 | 100.0 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

1993 இறுதியில் இத்திட்டத்தின்கீழ் சேகரிக்கப்பட்ட மொத்தக் கட்டுப்பணம் ரூ. 126 இலட்சமாக விளங்கியது. அட்டவணை 2.8 இத்திட்டத்தினது செயலாற்றத்தின் தொகுப்பினைத் தருகின்றது.

## வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான புகலிட நிகழ்ச்சித் திட்டம் (வீஉகுவபுநிதி) கட்டம் IV

1992 யூலையில் தொடங்கப்பட்ட வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான புகலிட நிகழ்ச்சித் திட்டம் IV இன் கீழான மீள் நிதியிடல் திட்டம் 1993 இல் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினைப் பதிவு செய்தது. இத்திட்டத்தின்கீழ் மத்திய வங்கி உச்சக் கடன்வழங்குநராக தொழிற்படுகின்றது. ஐக்கியநாடுகளின் அரச வீடமைப்புக் கடன் உத்தரவாத நிகழ்ச்சித் திட்டம் IV இன்கீழ் இலங்கை அரசிற்குக் கடனாக வழங்கப்பட்ட நிதியங்களிலிருந்து இலங்கை மத்திய வங்கியினால் மீள் நிதியிடல் வசதிகள் வழங்கப்படுகின்றன. வீஉகுவபு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியுடன் உடன்படிக்கை செய்துகொண்ட துணை உச்சக்கடன் வழங்குநர்களாகவும் (து.உ.க.வ) நேரடி முதன்மைக் கடன் வழங்குநராகவும் (நே. மு. க. வ.) குறித்துரைக்கப்பட்ட பங்குபற்றும் கொடுகடன் நிறுவனங்களுக்கு இந்நிதியங்கள் கிடைக்கச் செய்யப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் தற்பொழுது இலங்கை வங்கி, மக்கள்வங்கி, வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கி அரசஈட்டு முதலீட்டு வங்கி, வரையறுக்கப்பட்ட செலான்வங்கி, வரையறுக்கப்பட்ட வர்த்தக வங்கி, வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம், குருநாகல், கண்டி, கேகாலை, புத்தளம், காலி, பதுளை, பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் என்பன துணை உச்ச கடன் வழங்குநர்களாகப் பங்கேற்றன. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபையானது இலங்கை வங்கியூடாக இத்திட்டத்தில் பங்கேற்கிறது. இத்திட்டத்தின்கீழ் வீடமைப்பிற்காக காணிகளைக் கொள்வனவு செய்வது உட்பட சொந்தமாகக் குடியிருப்பதற்காக ஏற்கெனவேயுள்ள வீடுகளை பெருப்பித்தல், முன்னேற்றல், புதுப்பித்தல், என்பனவற்றுடன் தொடர்பான எந்தவொரு நோக்கத்திற்காகவும் கடன்கள் வழங்கப்பட்டன. குடியிருப்பாளர்களின் வருவாய் மாதாந்தம் ரூ. 4,600 அல்லது அதற்குக் குறைவாக இருக்குமிடத்து இத்திட்டத்தின்கீழ் கடன்களைப் பெற அவர்கள் உரித்துடையவராவர்.

வீஉகுவபுநி திட்டத்தினது செயலாற்றத்தின் புள்ளிவிபர அமைப்பினை அட்டவணைகள் 2.10, 2.11, 2.12 தருகின்றன. வீஉகுவபுநி திட்டத்தின் செயலாற்றத்தின் அடிப்படைப் பண்புகள் பின்வருமாறு :

1993 இறுதியில் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான கடன்களின் மீது ரூ. 2,460 இலட்சம் மீள் நிதியிடலுக்காக ஒப்புதலளிக்கப்பட்டதுடன் இதில் ரூ. 1,370 இலட்சம் பகிர்ந்தளிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட கடன்களில் அரைப்பங்கு புதியவீடுகளின் கட்டுமானத்திற்கானவையாக இருந்தவேளையில் வீடுகளை முன்னேற்றுவதற்கான கடன்கள் ஒப்புதலளிக்கப்பட்ட கடன்களில் மூன்றிலொன்றைக் கொண்டிருந்தன. இத்திட்டத்தின்கீழான கடன்களுக்கான தொகை ரூ. 100,000 வரையிலானதாக இருந்த வேளையில் இக்கடன்களின் அரைப்பங்கிற்கும் மேலானவற்றின் தொகை ரூ. 10,000 இற்கும் குறைவானதாகவும் மேலும் 12 சதவீதமான கடன்கள் ரூ. 10,000 – ரூ. 15,000 இற்கும் இடைப்பட்டனவாகவும் காணப்பட்டன. சிறிய கடன்களைக் கொண்ட பெரும் விகிதமானது இத்திட்டம்

அட்டவணை 2.10

## வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான புகலிட நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் IV மீள் நிதியிடல் ஒப்புதல்களும் பகிர்ந்தளிப்புகளும்

(ரூபா '000)

| துணை உச்சக் கடன் வழங்குநர் | | ஒப்புதலளிக்கப்பட்ட மீள்நிதியிடல் | | பகிர்ந்தளிக்கப்பட்ட மீள்நிதியிடல் | |
|---|---|---|---|---|---|
| | | 1992 | 1993 | 1992 | 1993 |
| 1. | இலங்கை வங்கி ... | 24,497 | 150,254 | 7,611 | 91,858 |
| 2. | வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி ... | _ | 847 | _ | 216 |
| 3. | வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கி ... | 1,177 | 3,522 | _ | 2,920 |
| 4. | வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் ... | _ | 10,350 | _ | 3,401 |
| 5. | மக்கள் வங்கி ... | _ | 35,792 | _ | 22,900 |
| 6. | பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் ... | _ | 5,343 | _ | 2,201 |
| 7. | வரையறுக்கப்பட்ட செலான் வங்கி ... | _ | 1,600 | _ | 915 |
| 8. | அரச ஈட்டு முதலீட்டு வங்கி ... | 1,707 | 11,055 | _ | 4,493 |
| | மொத்தம் ... | 27,381 | 218,762 | 7,611 | 128,902 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

குறைந்த வருமானத்தொகுதியினருக்கு பெருமளவிற்கு கடன் வழங்கப்படுவதனை எடுத்துக்காட்டுவதாகவுள்ளது. உண்மையில் 15 இலட்சம் வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் தகைமைபெறும் கடன்பெறுநர்களுக்கே முக்கியமாகக் கடன் வழங்கும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபை 1993 இறுதியில் ஒப்புதலளிக்கப்பட்ட மொத்தக் கடன்களில் ஏறத்தாழ 70 சதவீதத்திற்கு வகைகூறியது. இத்திட்டத்தின் கீழான கடன்களில் ஏறத்தாழ 80 சதவீதம் கிராமியத்துறைக்கானதாக இருந்தது. கடன்களில் அரைப்பங்கு 6 தொடக்கம் 10 ஆண்டுக் காலத்தைக் கொண்டனவாகவும் ஏறத்தாழ மூன்றிலொரு கடன்கள் 5 ஆண்டுக்காலத்தைக் கொண்டனவாகவும் ஐந்திலொரு கடன்கள் 11 தொடக்கம் 15 ஆண்டுக்காலத்தைக் கொண்டனவாகவும் இருந்தன. பாலடிப்படையில் கடன் பெறுநர்களின் பகுப்பாய்வு, கிராமியத்துறையின் கடன்பெறுநர்களில் 30 சதவீதத்தினரும், நகரத்துறையின் கடன் பெறுநர்களில் 36 சதவீதத்தினரும் பெண்களாக உள்ளமையைக் காட்டுகின்றது.

அட்டவணை 2.11

## வீஉகுவபுநி திட்டம் கட்டம் - IV இன் செயலாற்றத்தினது தொகுப்பு நோக்கம், முதிர்ச்சி, அளவின்படி ஒப்புதலளிக்கப்பட்ட கடன்கள் (1.10.92 இலிருந்து 31.12.93 வரை)

(ரூ. '000)

| வகை | | | ஒப்புதல்கள் | | |
|---|---|---|---|---|---|
| | | | நகரம் | கிராமம் | மொத்தம் |
| 1. கட்டடவாக்கம் | | ... | 24,758 | 117,589 | 142,347 |
| 2. முன்னேற்றங்கள் | | ... | 15,508 | 62,842 | 78,350 |
| 3. நிலக் கொள்வனவு | | ... | 4,693 | 20,061 | 24,753 |
| 4. உட்கட்டமைப்பு அபிவிருத்தி | | ... | 110 | 582 | 692 |
| மொத்தம் | | ... | 45,068 | 201,074 | 246,143 |
| முதிர்ச்சியின்படி கடன்கள் | | | | | |
| 5 ஆண்டுகளுக்குக் குறைவானவை | | ... | 11,030 | 60,497 | 71,526 |
| 6 - 10 ஆண்டுகள் | | ... | 17,504 | 99,368 | 116,872 |
| 11- 15 ஆண்டுகள் | | ... | 16,326 | 40,761 | 57,087 |
| 16 - 20ஆண்டுகள் | | | 209 | 449 | 658 |
| கடன்களின் அளவு | ரூபா | | | | |
| 0 | 2,500 | ... | 99 | 7,109 | 7,208 |
| 2,501 | 5,000 | ... | 1,350 | 20,011 | 21,361 |
| 5,001 | 7,500 | ... | 2,656 | 31,185 | 33,841 |
| 7,501 | 10,000 | ... | 5,770 | 84,950 | 90,720 |
| 10,001 | 15,000 | ... | 25,585 | 5,046 | 30,631 |
| 15,001 | 20,000 | ... | 1,565 | 7,861 | 9,426 |
| 20,001 | 25,000 | ... | 1,267 | 8,786 | 10,053 |
| 25,001 | 30,000 | ... | 535 | 4,132 | 4,667 |
| 30,001 | 35,000 | ... | 478 | 2,212 | 2,690 |
| 35,001 | 40,000 | ... | 541 | 3,919 | 4,460 |
| 40,001 | 45,000 | ... | 439 | 2,310 | 2,749 |
| 45,001 | 50,000 | ... | 1,540 | 11,308 | 12,848 |
| 50,001 | 100,000 | ... | 3,243 | 12,246 | 15,489 |
| மொத்தம் | | ... | 45,068 | 201,074 | 246,143 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 2.12

**வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான புகலிட நிகழ்ச்சித் திட்டம் – கட்டம் IV**
**மாகாணங்களின்படி கடன் ஒப்புதல்கள்**
**(1.10.92 இலிருந்து 31.12.93 வரை)**

| மாகாணம் | | தொகை (ரூ. '000) | சதவீதம் |
|---|---|---|---|
| 1. மத்திய | ... | 31,819 | 12.9 |
| 2. கிழக்கு | ... | 8,021 | 3.3 |
| 3. வடமத்திய | ... | 86,612 | 35.2 |
| 4. வடமேற்கு | ... | 18,970 | 7.7 |
| 5. வடக்கு | ... | 944 | 0.4 |
| 6. சப்பிரகமுவா | ... | 17,921 | 7.3 |
| 7. தெற்கு | ... | 20,610 | 8.4 |
| 8. ஊவா | ... | 9,402 | 3.8 |
| 9. மேல் | ... | 51,844 | 21.1 |
| மொத்தம் | ... | 246,143 | 100.0 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

## சிறிய நடுத்தரக் கைத்தொழில் மற்றும் பேருந்துக் கொள்வனவுக் கடன் உத்தரவாத நிதிய மூலவளங்களின் முதலீடு

1988 யூலையில் ஆரம்பித்த முதலாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தையில் சிறிய நடுத்தரக் கைத்தொழில் மற்றும் பேருந்து கொள்வனவுக் கடன் உத்தரவாத மூலவளங்களின் முதலீடு 1993 இலும் தொடர்ந்தது. 1993 இறுதியில் முதலீடுகளும் சேகரிக்கப்பட்ட கட்டுப்பணமும் ரூ. 4,920 இலட்சமாக விளங்கின. 1993 இல் முதலீடுகளிலிருந்தான வட்டி வருவாய் ரூ. 720 இலட்சமாக விளங்கியது.

## தொழில் முயற்சியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

பல்வேறு மாவட்டங்களிலும் நடாத்தப்பட்ட சிறப்புமுறையில் வடிவமைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினூடாக தற்போதுள்ள சிறிய கைத்தொழிலாளர்களின் தொழில்நுட்ப முகாமைத்துவ தேர்ச்சியினை தரமுயர்த்துவதே தொழில் முயற்சியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும். முலாம்பூச்சு, இரும்பு உருக்கு உற்பத்தித் தயாரிப்பு, உணவுபதனிடல் போன்ற கைத்தொழில் துணைத் தொகுதிகளின் நன்மைக்காக கிராம மட்டத்தில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. பள்ளிக்கூடத்திலிருந்து விலகுவோருக்கும் சனசக்தி பெறுவோருக்கும் சுயதொழில் வாய்ப்புப் பற்றிய அறிவினை ஊட்டுவதற்கும் சுயதொழில் செயற்றிட்டங்களை அவர்கள் ஏற்படுத்துவதற்கு உதவுவதற்குமாக அவர்களின் நன்மைகருதி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. ஏற்கெனவே

நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் பயன்விளைவு கைத்தொழில் அபிவிருத்திச்சபை மற்றும் தொடர்பான பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் என்பனவற்றின் ஒத்துழைப்புடன் கண்காணிக்கப்பட்டுவருகின்றது. இந்நோக்கத்திற்குத் தேவையான நிதிக்கு 1993 இறுதியில் உலகவங்கி ஒப்புதல் வழங்கியது. 1994 இல் ஆறு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்கு ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டுள்ளதுடன் பல்வேறு மாவட்டங்களிலும் சிறுகைத்தொழிலாளர்களுக்குத் தேவையான பயிற்சிகளை இனங்கண்டு கொள்வதன் அடிப்படையில் மேலும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஒழுங்கு செய்யப்படும்.

### செயற்றிட்டங்களைப் பின் தொடர்தலும் பரிசோதித்தலும்

1993 இல் சிறிய நடுத்தரக் கைத்தொழில் செயற்றிட்டங்களின் ஆற்றல் மற்றும் தொழிற்பாடுகளைக் கண்காணிக்கும்பொருட்டு அவை தொடர்ந்தும் பரிசோதிக்கப்பட்டன. தேவையானவிடத்து சரியான நடவடிக்கைகளுக்கு விதந்துரைப்புக்களை வழங்கும் பொருட்டும் ப. கொ. நிறுவனங்களால் ஒப்படைக்கப்பட்ட உரிமைக்கோரல்களைத் தீர்ப்பனவு செய்வதற்காகவும் 275 செயற்றிட்டங்கள் பரிசோதிக்கப்பட்டன. இச் செயற்றிட்டங்களில் பெரும்பாலானவை கொழும்பு, காலி, புத்தளம், கம்பகா, அனுராதபுரம், கண்டி, இரத்தினபுரி மாத்தறை ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ளன.

## கிராமியக் கொடுகடன்

வேளாண்மையையும் கிராமியத்துறையையும் முன்னேற்றுவதற்காக வெளிநாடுகளினால் நிதியிடப்பட்ட பின்வரும் செயற்றிட்டங்களின் கொடுகடன் நிறைவேற்று முகவராக வங்கி முன்னைய ஆண்டினைப் போன்று 1993 இலும் தொடர்ந்து செயற்பட்டது.

1. வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியிடப்பட்ட கேகாலை மாவட்டத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம்.
2. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட கிருண்டி ஓயா நீர்ப்பாசன மற்றும் குடியமர்த்தல் செயற்றிட்டம் (கட்டம் ii).
3. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட சிறு உடைமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம்.
4. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட மத்திய நில நீண்டகால பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம்.
5. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட வேளாண்மைப் புத்தாக்கச் செயற்றிட்டம்.
6. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட தென்மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம்.
7. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட வடமேல் மாகாண நீர் வள அபிவிருத்திச் செயற்றிட்டம்.

8. வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம் மற்றும் கனடிய பன்னாட்டு அபிவிருத்தி முகவராண்மையினால் நிதியிடப்பட்ட சிறு வேளாண்மையாளர்கள் மற்றும் காணியற்றோர் கொடுகடன் செயற்றிட்டம்.

## கேகாலை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம்

சிஎஉ 15.5 இலட்ச கொடுகடன் கூறினைக் கொண்ட கேகாலை மாவட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டமானது 1987 ஒற்றோபர் 15 ஆம் நாள் தொழிற்படத் தொடங்கியதோடு 1994 திசெம்பர் 31 இல் முற்றுப்பெறச் செய்வதற்காக அட்டவணையிடப்பட்டுள்ளது. இச் செயற்றிட்டத்தின் கீழ் வழுங்கப்பட்ட கடன்கள் 100 சதவீத மீள்நிதியிடலுக்கு உரித்துடையனவாகும். நடுத்தரகால வேளாண்மை மற்றும் கைத்தொழில் கடன்களைப் பொறுத்தவரை செயற்றிட்ட நிதியங்களிலிருந்து 75 சதவீத மீள் நிதியிடல் வழுங்கப்படுகின்ற வேளையில் எஞ்சிய 25 சதவீதம் மத்திய வங்கி நிதியங்களிலிருந்து வழுங்கப்படுகின்றது. பயிர்ச் செய்கைக் கடன்கள் தொடர்பாக ஆண்டொன்றுக்கு ரூ. 330,000/- இனை விஞ்சிய கடன்களில் 50 சதவீதமானவை வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தின் நிதியங்களிலிருந்து மீளச் செலுத்தப்படுவதற்கான தகைமையினைப் பெறுகின்றன. 93.12.31 இல் அனைத்து வகை செயற்றிட்டத்தின் கீழும் பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை ரூ. 900 இலட்ச மொத்த ஒதுக்கீட்டுக்கு (சிஎஉ 15.5 இலட்சம்) எதிராக ரூ. 640 இலட்சமாக விளங்கியது.

## கிருண்டி ஓயா நீர்ப்பாசன குடியமர்த்தல் செயற்றிட்டம்

செயற்றிட்டப் பிரதேசத்தில் வேளாண்மையாளர்களுக்குப் பயிற்சி, ஆதாரப்பணிகள் மற்றும் இரண்டு சக்கர இழுவைப் பொறிகளைக் கொள்வனவு செய்வதற்கான நிதியங்களை வழுங்கும் கிருண்டி ஓயா நீர்ப்பாசனம் மற்றும் குடியமர்த்தல் செயற்றிட்டம் அதனது பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களாக இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் அம்பாந்தோட்டை பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி என்பனவற்றைக் கொண்டுள்ளது. இச் செயற்றிட்டம் 1993 திசெம்பர் 31 இல் முற்றுப்பெறச் செய்யப்பட்டது. 93.12.31 இல் இச்செயற்றிட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை ரூ. 464.8 இலட்ச மொத்த ஒதுக்கீட்டுக்கு எதிராக (சிஎஉ 7,620 இலட்சம்) ரூ. 195.6 இலட்சமாக விளங்கியது.

## சிறு உடைமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம்

ஐக்கிய அமெரிக்க டொலர் 191 இலட்ச கொடுகடன் கூறொன்றைக் கொண்டுள்ள சிறு உடைமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டத்தின்கீழ் கள அபிவிருத்தி (புதியபயிரிடல், மீள் பயிரிடல்) நாற்றுமேடை அபிவிருத்தி, தொழிற்சாலைப் புத்தாக்கம் என்பனவற்றிற்காகப் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்கள் தொடர்பாக 1993 இல் வங்கியினால் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு ரூ. 320 இலட்சம் கொண்ட தொகையொன்று மீள் நிதியிடப்பட்டது. இச் செயற்றிட்டத்தின் கீழ் நிதியங்களின் பகிர்ந்தளிப்பை விரைவு படுத்தும் நோக்கில் தேயிலை சிறு உடைமையாளர்கள், தொழிற்சாலைச் சொந்தக்காரர்கள் மற்றும் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களின் முகாமையாளர்கள் ஆகியோரை இலக்காகக் கொண்டு

1993 இல் வங்கியினால் செயற்றிட்டப் புரிந்துணர்வு நிகழ்ச்சித் திட்டமொன்று தொடக்கி வைக்கப்பட்டது. இவ்வாண்டில் இக்கடன் திட்டத்தின் கீழ் ரூ. 100,000 இற்குக் குறைவான கள அபிவிருத்திக் கடன்களின் கொடுகடன் உத்தரவாதத்தை 50 சதவீதத்திலிருந்து 75 சதவீதத்திற்கு அதிகரித்தல், தெளிவான காணி உறுதிகளை வைத்திராத கடன்பாட்டாளர்களுக்கு ரூ. 50,000 இற்குக் குறைவான கடன்களுக்கான பிணைகளின் தேவைகளைத் தளர்த்தல் மற்றும் கடன் நடவடிக்கைகளை இலகுபடுத்தல் போன்ற பல திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1993 இல் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்கள் 72 சதவீதத்தினால் அதிகரித்தன. 1993 இல் தொழிற்சாலை அபிவிருத்திக்காகப் பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகரித்த கடன்களில் இவ்வதிகரிப்பு முக்கியமாகப் பிரதிபலித்தது. இக்கடன் திட்டத்தின்கீழ் 1993 இறுதியில் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட மொத்த மீள்நிதியிடலானது கடன் கூறின் கீழான மொத்த ஒதுக்கீடான ரூ. 9,359 இலட்சத்திற்கெதிராக ரூ. 750 இலட்சமாக விளங்கியது. இது கள அபிவிருத்திக்காக வழங்கப்பட்ட ரூ. 120 இலட்சத்தையும் நாற்று மேடை அபிவிருத்திக்கான ரூ. 90 இலட்சத்தையும், தொழிற்சாலைப் புத்தாக்கத்திற்கான ரூ. 540 இலட்சத்தையும் கொண்டிருந்தது.

ஆய்வுக்குரிய காலப்பகுதியில் இத்திட்டத்தின் கீழான பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களில் ஒன்றாக வரையறுக்கப்பட்ட செலான் வங்கி அனுமதிக்கப்பட்டது.

### மத்திய நில நீண்டகாலப் பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம்.

ஐந்தாவது ஆண்டாக நடைமுறைப்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கும் நீண்டகால பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டக் கடன் திட்டமானது சிறப்பாக சிறு ஏற்றுமதிப் பயிர்கள், சிறு உணவுப் பயிர்கள் போன்ற நீண்டகாலப் பயிர்களின் உற்பத்தியினை அதிகரிப்பதற்கும் வர்த்தக மயமாக்கலை மேம்படுத்துவதற்குமான நோக்கில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து பெறப்பட்ட நிதியங்களிலிருந்து வேளாண்மையாளர்களுக்கு கடன் வசதிகளை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டதொன்றாகும். நிதியங்களின் மெதுவான பகிர்ந்தளிப்புக்களின் காரணமாக இத்திட்டத்தின் கீழ் கடன் பகிர்ந்தளிப்புக்களை விரைவுபடுத்தும் நோக்கில் 1993 இன் நடுப்பகுதியில் மீள முறைப்படுத்தும் செயற்றிட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது. இம்மீள் முறைப்படுத்தலானது செயற்றிட்டப் பிரதேசத்தை கம்பகா, குருநாகல், புத்தளம் ஆகிய மாவட்டங்களுக்கு விரிவாக்கல், கடன் வசதிகளைப் பெறுவதற்குத் தேவையான ஆகக்குறைந்த காணி உடைமையின் அளவினை அகற்றுதல், ரூ. 200,000 இற்குக் குறைவான கடன்களுக்கான கடன் உத்தரவாதத்தினை 50 சதவீதத்திலிருந்து 75 சதவீதத்திற்கு அதிகரித்தல், நீண்டகாலப் பயிர்களுடனும் கால்நடை அபிவிருத்தியுடனும் துணை உணவுப் பயிர்களையும் தெங்குச் செய்கையினையும் சேர்த்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. இதன்விளைவாக செலான் வங்கியும் புத்தளம், குருநாகல் கம்பகா ஆகிய மாவட்டங்களில் உள்ள பிரேதச கிராமிய அபிவிருத்தி வங்கிகளும் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களாக அனுமதிக்கப்பட்டுள்ளன. இந்தச் செயற்றிட்டத்தின் கீழ் பண்ணையில் பயிர் அபிவிருத்தி, தனியார் நாற்றுமேடை அபிவிருத்தி, பண்ணையில் அறுவடையின் பின்னான கையாளல், மற்றும்

நீண்டகாலப் பயிர்களின் பதனிடல் என்பனவற்றிற்காக கடன் வசதிகள் வழங்கப்பட்டன. 1993 இறுதியில் மத்திய வங்கியினால் மீள்நிதியிடலாக கூட்டு மொத்தமாக ரூ. 349 இலட்சம் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. இவ்வாண்டில் பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை ரூ. 175 இலட்சமாக விளங்கியது.

## வேளாண்மைப் புத்தாக்கச் செயற்றிட்டம்

வேளாண்மைப் புத்தாக்கச் செயற்றிட்டத்தின் முதன்மை நோக்கம் வடக்குக் கிழக்கு மாகாணங்களிலும் புத்தளம், அநுராதபுரம், பொலநறுவை, மொனராகலை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய எல்லை மாவட்டங்களிலுமுள்ள உள்நாட்டுக் குழப்பங்களின் காரணமாகப் பாதிக்கப்பட்ட ஆட்களையும் உடைமைகளையும் புத்தாக்கம் செய்வதற்கான செயற்றிட்டங்களுக்கு வேண்டிய மூலதனத் தேவைப்பாடுகளை நிதியிடுவதற்குக் கடன் வசதிகளை வழங்குவதாகும். இச்செயற்றிட்டமானது வேளாண்மை, கால்நடை, கடற்றொழில் மற்றும் வேளாண்மை வியாபாரத்துறைகள் போன்றவற்றிற்குப் புத்துயிரூட்டுவதன் மூலம் பண்ணை உற்பத்தியினை நிறைவு செய்து உற்பத்தியினை ஊக்குவித்து தொழில்வாய்ப்பு மற்றும் வருவாய் உருவாக்கம் என்பனவற்றை விரிவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. கொடுகடன் கூறினை நடைமுறைப்படுத்துவதற்காக 1991 இல் வங்கியில் நிறுவப்பட்ட செயற்றிட்ட முகாமைத்துவ அலகு 1993 இறுதியில் வங்கிகளுக்கு அவற்றினால் வழங்கப்பட்ட 9,916 துணைக்கடன்கள் தொடர்பாக ரூ. 4,993 இலட்சங்கொண்ட மீள்நிதியிடலை வழங்கியது. செயற்றிட்ட முகாமைத்துவ அலகு கடன்பாட்டாளர்களுக்கிடையில் புரிந்துணர்வினை உருவாக்கும் வகையில் உறுதியான விளம்பர நடவடிக்கையொன்றினை மேற்கொண்டது. இதன்விளைவாக இத்திட்டத்தின்கீழ் துணைக்கடன்களுக்காகப் பெருமளவு கேள்வி உருவாக்கப்பட்டதுடன் குறுகிய காலத்தினுள் மொத்த ஒதுக்கீட்டின் 80 சதவீதத்திற்கும் அதிகமானதொரு தொகையினைப் பகிர்ந்தளிப்பதற்கு இந்த அலகுக்கு இயலுமாகக் காணப்பட்டது. இத்துணைக் கடன்களின் மீட்பு தொடங்கியுள்ளதுடன் முதலாவது சுற்றில் நிதி உதவி வழங்கப்படாத விண்ணப்பதாரிகளுக்கு மீட்புத் தொகையினை மீண்டும் கடனாக வழங்கும்படி செயற்றிட்ட முகாமைத்துவ அலகு பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்குப் பணித்துள்ளது.

## தென்மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம்

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட தென்மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் முதன்மைக் குறிக்கோள் செயற்றிட்டப் பிரதேசத்தில் வருவாய் மற்றும் தொழில்வாய்ப்புகளை உருவாக்கக்கூடிய வாய்ப்புக்களை ஏற்படுத்துவதன் மூலம் தென்மாகாண மக்களின் வருவாயையும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவதாகும். இந்நோக்கத்திற்காக தென்மாகாணத்தில் கைத்தொழில் மற்றும் சுயதொழில் வாய்ப்பு முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு மக்களுக்கு நிதியியல் வசதிகள் கிடைக்கச் செய்யப்பட்டன.

செயற்றிட்டத்தின் கொடுகடன் கூறினை செயற்படுத்தும் முகவராக வங்கி கருமமாற்றுகின்றது. இலங்கை அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனமும் மற்றும் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மூன்று பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளும் பங்கேற்கும் கொடுகடன் வழங்கும் நிறுவனங்களாக அனுமதிக்கப்பட்டுள்ளன. இச்செயற்றிட்டத்தின் கீழ் வெலிகாமத்தில் சாலி மவுண்டன்

கைத்தொழில் பேட்டையில் அமைந்துள்ள சிறிய/நடுத்தர அளவு கைத்தொழில்களுக்கும் தென் மாகாணத்தில் வேறு ஏதேனும் சிறிய/நடுத்தர அளவு கிராமிய தொழில் முயற்சிகளுக்கும் நிதியிடுவதற்காக வங்கியினால் மீள்நிதியிடல் வழங்கப்படுகின்றது. 1993 இறுதிப்பகுதியில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுடன் துணைக்கடன்களுக்கான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டவேளையில் நிதியங்களின் பகிர்ந்தளிப்பு தொடர்ந்துவரும் ஆண்டில் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

## வடமேல் மாகாண நீர்வள அபிவிருத்திச் செயற்றிட்டம்

வடமேல் மாகாண நீர்வள அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கொடுகடன் திட்டத்தினை 1993இன் நாலாம் காலாண்டில் வங்கி தொழிற்படுத்தத் தொடங்கியது. இத்திட்டத்தின் கீழ் 1993 – 1998 காலப்பகுதியில் வேளாண்மைக் கிணறுகளையும் ஏற்றல் நீர்ப்பாசன திட்டங்களையும் நிருமாணிப்பதற்காக வேளாண்மையாளருக்கும் சுயதொழில் திட்டங்களுக்காக கிராமிய மகளிருக்கும் கடன் வழங்குவதற்காக பங்கேற்கும் வங்கிகளுக்கு மீள்நிதியிடல் வழங்கப்படும். இக்கடன் திட்டமானது குருநாகல், புத்தளம் ஆகிய மாவட்டங்களில் உள்ள பிரேதச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் மற்றும் வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல்வங்கி என்பனவற்றினால் குருநாகல், புத்தளம் ஆகிய மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இக்கடன் திட்டத்தின் மொத்தச்செலவு ஐ. அ. டொலர்கள் 28 இலட்சமாவதோடு இதில் ஐ. அ. டொலர்கள் 18 இலட்சம் ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியங்களிலிருந்து பெறப்படும். எஞ்சியதொகை வேளாண்மைக் கிணறுகளின் நிருமாணத்திற்கான உதவு தொகையாக இலங்கை அரசினாலும், தமது ஒப்புரவுத் தொகையாக துணைக்கடன் பெறுநர்களினாலும் வழங்கப்படுகின்றது.

1993 இறுதியில் சுயதொழில் செயற்றிட்டங்களுக்காக 18 கடன்களுக்கு ஒப்புதலளிக்கப்பட்டதுடன் பங்கேற்கும் வங்கிகளினால் ரூ. 200,000/- கொண்ட தொகை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

## சிறு வேளாண்மையாளர், நிலமற்றோர் கொடுகடன் திட்டம்

இச்செயற்றிட்டத்தின் நடைமுறைப்படுத்தும் முகவராக வங்கி தொடர்ந்தும் கருமமாற்றியது. செலவு – பயன்பாட்டு கடன் வழங்கல் முறை மற்றும் ஆதாரப்பணிகள் என்பனவற்றின் ஊடாக காலி, மாத்தறை, புத்தளம், கண்டி ஆகிய மாவட்டங்களில் கிட்டத்தட்ட 32,870 வறிய கிராமிய குடும்பங்களின் பொதுநலனை அதிகரிக்கும் நோக்கிலும் பொதுவான பொருளாதார அபிவிருத்திக்காகவும் இச்செயற்றிட்டமானது 1990 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

இச்செயற்றிட்டத்திற்கு வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம் சிஎஉ 47.5 இலட்சங்கொண்ட கடன் ஒன்றையும் கனடிய பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு சிஎஉ 48.5 இலட்சங்கொண்ட கொடை ஒன்றையும் வழங்கியுள்ளன.

1993 இறுதியில் கண்டி, புத்தளம் ஆகிய மாவட்டங்களில் (வேஅபநி) ஒப்புதலளிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை 12,866 ஆகவும் கடன் தொகை ரூ. 923.7

இலட்சமாகவும் விளங்கியவேளையில் காலி, மாத்தறை மாவட்டங்களில் (கபஅஅ) ரூ. 341.8 இலட்சங்கொண்ட 5,003 கடன்களுக்கு ஒப்புதலளிக்கப்பட்டிருந்தது. 1993 இறுதிவரையிலான பெறுபேறுகள் முதல் நான்கு ஆண்டுகளின் தொழிற்பாட்டிற்கான மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கடன் பகிர்ந்தளிப்புக்களின் இலக்கில் 70 சதவீதத்தினைக் கொண்டிருந்தன.

இதுவரையில் கடன்மீட்பு வீதங்கள் திருப்திகரமானதாக இருந்துள்ளதோடு செலுத்தப்படவுள்ள அனைத்துக் கொடுப்பனவுகளும் வேஅபநி மற்றும் கபஅஅ மாவட்டங்களில் முறையே 92 சதவீத 84 சதவீத சராசரியைக் கொண்டிருந்தன.

செயற்றிட்ட மாவட்ட அலுவலகங்களைத் தவிர 8 பங்கேற்கும் முகவராண்மைகளும் (அரசு, அரசல்லா) செயற்றிட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன.

செயற்றிட்டநிதி அறிக்கை மற்றும் கண்காணிப்பு, மதிப்பீட்டு நடவடிக்கைகளைக் கணனி மயப்படுத்தல் கனடிய நிறைவேற்று முகவராண்மையினால் மேற்கொள்ளப்படுகின்றது. செயற்றிட்ட பிரதேசங்களில் ஆற்றல்மிக்க பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பான மேலதிக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளும் செயற்றிட்டத்தின் தொழில்நுட்ப உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது.

நிறுவனரீதியான பலப்படுத்தலின் கீழ் கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் அலுவலர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டமைக்கு மேலதிகமாக இம்மாவட்டங்களின் நான்கு கிராமிய அபிவிருத்தி வங்கிகளுக்கு கணனிகளும் சம்பந்தப்பட்ட மென்கலத் தொகுதிகளும் வழங்கப்பட்டுள்ளன.

**உள்நாட்டு உண்டியல் திட்டம்**

ரூ. 69 இலட்சம் கொண்ட நான்கு ஏற்றுக்கொள்ளல் கடன் வரையறைகளின் ஒப்புதலுடன் இவ்வாண்டில் உள்நாட்டு உண்டியல் திட்டம் தொடர்ந்து செயற்பட்டதுடன் இத்தகைய வரையறைகளின் மொத்த எண்ணிக்கை 34 ஆக விளங்கியது. வர்த்தக வங்கிகளினூடாக தேயிலைக்கொழுந்து வழங்குநர்களுக்கும், வாங்கப்பட்ட தேயிலைக்கொழுந்து தொழிற்சாலை உடைமையாளர்களுக்கும் உதவி வழங்குதற்காக 1989 ஆம் ஆண்டில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதனைத்தொடர்ந்து நுவரெலியா கிராமிய அபிவிருத்தி வங்கியினூடாக பால் கொள்வனவாளர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் நிதி உதவிகளை வழங்குவதற்காக இத்திட்டம் விரிவாக்கப்பட்டது.

## பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் (பிகிஅவ)

கிராமியப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் தமது முயற்சிகளைத் தொடரும் வகையில் 1993 இல் கிராமிய அபிவிருத்தி வங்கிகள் தமது நடவடிக்கைகளை குறிப்பிடத்தக்களவில் விரிவுபடுத்தின.

## பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் கிளை வலையமைப்பு

கம்பகா பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி நிறுவப்பட்டதைத் தொடர்ந்து 1993 இல் தொழிற்பாட்டில் உள்ள கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் மொத்த எண்ணிக்கை 17 இற்கு அதிகரித்தது. நடைமுறையாண்டில் 5 பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் 7 புதிய கிளைகளை நிறுவியதன் மூலம் பி கி. அ. வங்கிக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 163 இற்குக் கொண்டுவரப்பட்டது. பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் வங்கிக்கிளை வலையமைப்பின் விபரங்கள் அட்டவணை 2.13 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.13

### பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி கிளை விரிவாக்கம்

| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியின் பெயர் | பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி நிறுவிய திகதி | தலைமை அலுவலகம் | திறக்கப்பட்ட கிளைகளின் எண்ணிக்கை | | | | | | | | | 1993 இறுதியில் மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 | |
| 1. களுத்துறை | 85.07.13 | புளத்சிங்கள | 4 | 3 | 4 | 1 | _ | _ | 1 | 2 | _ | 15 |
| 2. மாத்தறை | 85.07.28 | மாத்தறை | 5 | 2 | _ | 1 | _ | _ | _ | 4 | _ | 12 |
| 3. குருநாகல் | 85.08.10 | குளியாப்பிட்டி | 6 | 4 | 2 | 1 | 1 | 1 | _ | 2 | _ | 17 |
| 4. அநுராதபுரம் | 85.08.12 | அநுராதபுரம் | 2 | 4 | 1 | _ | _ | _ | 3 | 1 | _ | 11 |
| 5. அம்பாந்தோட்டை | 86.12.13 | அம்பாந்தோட்டை | | 2 | 2 | 2 | _ | 1 | _ | 1 | _ | 8 |
| 6. கேகாலை | 87.02.08 | கேகாலை | | | 8 | 1 | 2 | 1 | 1 | 1 | 1 | 13 |
| 7. புத்தளம் | 87.07.11 | சிலாபம் | | | 5 | 1 | _ | 2 | 1 | 1 | _ | 10 |
| 8. காலி | 87.08.17 | எல்பிட்டிய | | | 1 | 7 | 1 | _ | _ | 3 | _ | 12 |
| 9. கண்டி | 87.10.13 | கண்டி | | | 6 | 3 | _ | 2 | _ | 2 | _ | 13 |
| 10. நுவரெலியா | 88.10.10 | நுவரெலியா | | | | 1 | 3 | 2 | _ | 2 | _ | 8 |
| 11. மொனராகலை | 88.10.11 | புத்தளை | | | | 1 | 2 | 1 | 2 | _ | _ | 6 |
| 12. பதுளை | 90.10.13 | பதுளை | | | | | | 4 | 2 | 3 | _ | 9 |
| 13. பொலநறுவை | 91.05.17 | பொலநறுவை | | | | | | | 4 | 2 | 1 | 7 |
| 14. மாத்தளை | 91.06.21 | மாத்தளை | | | | | | | 5 | 1 | _ | 6 |
| 15. இரத்தினபுரி | 91.09.30 | இரத்தினபுரி | | | | | | | 4 | 2 | 1 | 7 |
| 16. அம்பாறை | 92.02.24 | அம்பாறை | | | | | | | | 5 | 2 | 7 |
| 17. கம்பகா | 93.06.07 | கம்பகா | | | | | | | | | 2 | 2 |
| மொத்தம் | | | 17 | 15 | 29 | 19 | 9 | 14 | 21 | 32 | 7 | 163 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

## வைப்புத் திரட்டல்

நடைமுறையாண்டின் இறுதியில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளினால் 720,908 கணக்குகள் தொடர்பாக திரட்டப்பட்ட வைப்புக்களின் மொத்தப் பெறுமதி ரூ. 10,990 இலட்சமாக விளங்கியது. 1992 உடன் ஒப்பிடுகையில் இது வைப்புக்களின் பெறுமதியின் 65 சதவீத அதிகரிப்பையும் கணக்குகளின் எண்ணிக்கையில் 26 சதவீத அதிகரிப்பினையும் குறித்துக்காட்டியது. கிராமிய சேமிப்புக்களைத் திரட்டுவதிலும் நிறுவனத்துறைக்கு இவற்றை வழிப்படுத்துவதிலும் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளினால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை இது குறித்துக்காட்டுவதாக உள்ளது. வைப்புக்களின் மொத்தப் பெறுமதியில் சேமிப்பு வைப்புக்கள் ரூ. 9,790 இலட்சமாக விளங்கிய வேளையில் நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூ. 1,200 இலட்சமாக விளங்கி 1992 இனைவிட முறையே 67, சதவீத 50 சதவீத அதிகரிப்புக்களைக் குறித்துக் காட்டின. 1992 இல் ரூ. 1,031 ஆக விளங்கிய சேமிப்புக் கணக்கொன்றின் சராசரிப் பெறுமதி 1993 இல் 33 சதவீதத்தினால் அதிகரித்து ரூ. 1,367 ஆக விளங்கிய வேளையில் நிலையான வைப்பு ஒன்றின் சராசரிப் பெறுமதி 1992 இன் ரூ. 23,675 இலிருந்து 1993 இல் ரூ. 26,307 இற்கு 11 சதவீதத்தினால் அதிகரித்தது. கவர்ச்சிகரமான சேமிப்புத் திட்டங்களின் அறிமுகப்படுத்தல், கிளைகளின் விரிவாக்கம் வங்கித்தொழில் நடைபெறாத பிரேதசங்களிலும் வங்கித்தொழில் குறைவாக நடைபெறும் பிரதேசங்களிலும் இடம்பெயர் வங்கித்தொழில் வசதிகள் வழங்கப்பட்டமை, கிராமியப் பொருளாதார நடவடிக்கைகளின் விரிவாக்கம் என்பன கிராமிய பிரேதச அபிவிருத்தி வங்கிகளின் வைப்புத் திரட்டலில் ஏற்பட்ட அதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்த முதன்மைக் காரணிகளாக விளங்கின.

## கடன் வழங்கல்

1992 இல் 70,709 கடன்கள் தொடர்பாக பகிர்ந்தளிக்கப்பட்ட ரூ. 7,030 இலட்சத்திற்கெதிராக 1993இல் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் 72,176 கடன்கள் தொடர்பாக ரூ. 9,660 இலட்சத்தினைப் பகிர்ந்தளித்தன. கடன்களின் எண்ணிக்கை 2 சதவீதத்தினால் அதிகரித்திருக்கையில் கடன்களின் தொகை 37 சத வீதத்தினால் அதிகரித்து கடன் ஒன்றின் சராசரி அளவு 1992 இன் ரூ. 9,945 இலிருந்து 1993 இல் ரூ. 13,390 இற்கு அதிகரித்தமையைப் பிரதிபலித்தது.

முன்னைய ஆண்டுகளைப் போலவே பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் மொத்தக் கடன்பட்டியலில் வேளாண்மை முக்கிய பங்கினைக் கொண்டிருந்ததுடன் 1993 இல் வழங்கப்பட்ட கடன்களின் மொத்தப் பெறுமதியில் 44 சத வீதத்திற்கும் வகைகூறியது. வர்த்தகமும் வியாபாரமும், சிறு கைத்தொழில்கள், மற்றும் பல்வேறுபட்ட துறைகளுக்கு வழங்கப்பட்ட கடன்களின் தொகை முறையே 18 சதவீதத்திற்கும் 10 சதவீதத்திற்கும் 28 சதவீதத்திற்கும் வகைகூறியது.

1993 இன் இறுதியில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளில் வெளிநின்ற கடன்களின் கூட்டுமொத்தத் தொகை 226,717 கடன்கள் தொடர்பாக ரூ. 15,150 இலட்சமாக விளங்கியது.

தங்கம் மற்றும் தங்க ஆபரணங்களின் பிணைகளுக்கு எதிராக வழங்கப்பட்ட முற்பணங்கள் 1992 இன் 65,125 கடன்களுக்கான ரூ. 1,720 இலட்சத்திற்கு எதிராக 1993 இல் 156,757 கடன்கள் தொடர்பில் ரூ. 4,110 இலட்சத்திற்கு கணிசமான விரிவாக்கமொன்றைப் பதிவுசெய்தன.

**ஏனைய நடவடிக்கைகள்**

1993 ஆம் ஆண்டில் பிரேதச கிராமிய அபிவிருத்தி வங்கிகளினால் அவற்றினது வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட துணைப்பணிகளில் மிகக்குறிப்பிடத்தக்க விரிவாக்கமொன்று காணப்பட்டது. தொழில் முயற்சியாளர் அபிவிருத்தி, மூலவளங்களை இனங்காணலும் நிதியிடலும், கால்நடை வளர்ப்பு மற்றும் ஏனைய சிறிய அளவிலான செயற்றிட்டங்கள் என்பன தொடர்பான விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பப் பிரச்சனைகள் போன்ற விடயங்கள் பற்றி தமது வாடிக்கையாளர்களுக்கு நன்மை பயக்கக்கூடிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்தலை இப்பணிகள் உள்ளடக்கியிருந்தன.

கிராமிய சமூகத்தின் நலிவுற்ற பிரிவினர்களை பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிளின் நிகழ்ச்சித் திட்டங்களுடன் தொடர்புபடுத்துவதற்கான வழிமுறையொன்றாக பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் தொடர்ந்தும் 'சனசமூவ' கூட்டங்களை ஒழுங்குபடுத்தின. ஒரே வகையான சமூக பொருளாதாரப் பின்னணியிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட ஒரே வகையான கருத்துக்களைக் கொண்ட 5 முதல் 7 ஆட்களைக் கொண்ட குழுக்களுக்கு கொடுகடன் வசதிகள் நீடிக்கப்பட்டன. இத்தகைய கடன்களுக்கான பிணை அவர்களுக்கிடையேயான உத்தரவாதங்களாக அமைந்தன. இத்தகைய திட்டங்கள் பெரும்பாலும் அனைத்து பிரேதச கிராமிய அபிவிருத்தி வங்கிகளினாலும் செயற்படுத்தப்பட்டன. குழுக்களாக ஆட்களை ஒழுங்குபடுத்தல், இலகுவான நியதிகளிலும் நிபந்தனைகளிலும் கடன் வழங்கல் என்பன அவர்களை அபிவிருத்தியின் முக்கிய பங்குநர்களாகக் கொண்டுவரப் பெரிதும் உதவின.

கிராமிய உற்பத்தியாளர் அவர்களது உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கு உதவி வழங்குவதிலும் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் முக்கிய பங்கினைக் கொண்டிருந்தன. பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் ரூ. 345 இலட்சம் பெறுமதியுடைய நெல், மரமுந்திரிகை, மிளகாய் போன்றவற்றிற்கு களஞ்சிய வசதிகளை வழங்கியதுடன் இதன்மூலம் வேளாண்மையாளர்களுக்கு அறுவடைக் காலத்தின் பின்னர் நியாயமான விலையினைப் பெற்றுக்கொள்ள இயலுமாக இருந்தது. தமது வாடிக்கையாளர்களுக்கு விதைநெல், வளமாக்கி, வேளாண்மை இரசாயனங்கள், தெளிகருவிகள், நீர் இறைக்கும் பொறிகள் மற்றும் பலதரப்பட்ட உள்ளீட்டுப் பொருட்கள் என்பனவற்றை சலுகை விலைகளில் பெற்றுக்கொள்வதற்கான ஒழுங்குகளும் கிராமிய பிரதேச அபிவிருத்தி வங்கிகளினால் மேற்கொள்ளப்பட்டன. இத்தகைய துணைப்பணிகளுடன் கிராமிய வறிய மக்களுக்கு கொடுகடன் வழங்கலானது கிராமியப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் குறிப்பிடத்தக்க பங்கினை ஏற்பதற்கு வழிவகுத்தன.

அரசின் வறுமை ஒழிப்புத் திட்டத்திற்கு ஆதரவளிக்கும் நோக்கத்துடன் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் பல கடன் திட்டங்களின் நடைமுறைப்படுத்தலை தொடர்ந்து மேற்கொண்டன. 1993 இறுதியில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளினால் சனசக்தி நன்மை பெறுநர்களுக்கு ரூ. 1,000 இலட்சங்கொண்ட 16,233 கடன்கள் வழங்கப்பட்டிருந்தன.

வேளாண்மை புத்தாக்கச் செயற்றிட்டம், வடமேல் மாகாண நீர்வள அபிவிருத்திச் செயற்றிட்டம், நீண்டகாலப் பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம், சிறு உடைமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் தென்மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம், ப.அ.ஐ.நா. முகவர் வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான புகலிட நிகழ்ச்சித்திட்டம் போன்ற பல சிறப்புக் கொடுகடன் திட்டங்களின் கீழான பங்கேற்கும் கொடுகடன் வழங்கும் நிறுவனங்களிலொன்றாக பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் தொடர்ந்தும் கருமமாற்றின.

## கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி

1992 இல் 1,901 ஆட்களுக்காக நடாத்தப்பட்ட 67 பயிற்சி நெறிகளுடன் ஒப்பிடுகையில் 1993 இல் கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி 1,111 ஆட்களுக்கு 51 பயிற்சி நெறிகளை வழங்கியது.

1993 இல் நடாத்தப்பட்ட 51 பயிற்சி நெறிகளில் 40 பயிற்சி நெறிகள் கல்லூரியிலும் எஞ்சிய 11 உம் வெளி இடங்களிலும் நடாத்தப்பட்டதுடன் இவற்றில் 292 ஆட்கள் பங்குபற்றினர். வெளிஇடங்களில் நடாத்தப்பட்ட பயிற்சி நெறிகளில் பங்குபற்றியோர்கள் முக்கியமாக சிறிய அளவு தொழில் முயற்சியாளர்களாகவும், சுயதொழில் புரிவோராகவும் காணப்பட்டதோடு இவர்கள் முக்கியமாக பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளிலிருந்து ஏற்கனவே கடன் வசதிகளைப் பெறுபவர்களாக அல்லது பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளினால் கிடைக்கச் செய்யப்பட்ட நிறுவனக் கடன் வசதிகளைப் பெறுவதற்கு எதிர்பார்த்திருந்தவர்களாகக் காணப்பட்டனர். இலங்கை மத்திய வங்கியிலிருந்து 311 பங்கேற்பாளர்களையும் வர்த்தக வங்கிகளிலிருந்து 127 பங்கேற்பாளர்களையும் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளிலிருந்து 247 பங்கேற்பாளர்களையும் சிறு வேளாண்மையாளர் நிலமற்றோர் கொடுகடன் திட்டத்திலிருந்து 82 பங்கேற்பாளர்களையும் ஏனைய நிறுவனங்களிலிருந்து 52 பங்கேற்பாளர்களையும் உள்ளடக்கிய மொத்தம் 819 ஆட்கள் 1993 இல் வங்கியில் நடாத்தப்பட்ட 40 பயிற்சி நெறிகளில் கலந்து கொண்டனர்.

கிராமிய வங்கித்தொழில், செயற்றிட்டம் சார்ந்த அபிவிருத்தி, வர்த்தக வங்கித்தொழில், பன்னாட்டு வர்த்தகம், வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள், முகாமைத்துவம், பயிற்சியாளர்களுக்கான பயிற்சி, கணனிப்பயிற்சி என்பனவே 1993 இல் கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயிற்சிக்கல்லூரியினால் வழங்கப்பட்ட முக்கிய பயிற்சி நெறிகளாகும். அட்டவணையிடப்பட்ட பயிற்சி நெறிகளுக்கு மேலதிகமாக 1993 இல் கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக்கல்லூரி (அ) சிறுவேளாண்மையாளர் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் (ஆ) நீண்டகாலப் பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம் என்பனவற்றினால் கேட்டுக்கொள்ளப்பட்டவாறு இவற்றின் வெளிக்கள மட்டத்திலான அலுவலர்களின் நன்மைகருதி பல சிறப்பு பயிற்சி நெறிகளை நடாத்தியது. வங்கி மேற்பார்வைத் திணைக்களம் வேண்டிக் கொண்டதன்படி, வர்த்தக வங்கிகளின் தொழிற்பாடுகள்பற்றி அறிவூட்டும் பொருட்டு பதில் மற்றும் தகுதிகாண் நிலையிலுள்ள உயர் பதவி அலுவலர்களுக்கு இரு சிறப்புப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி "கிராமிய அபிவிருத்தியில் போட்டிச் சந்தைகளின் பங்கு" என்ற தலைப்பின் கீழ் 12 ஆவது வருடாந்த விரிவுரையை நடாத்தியது. இவ் விரிவுரை மூத்த துணை ஆளுநர் திரு. ஏ. எஸ். ஜயவர்த்தனவினால் நிகழ்த்தப்பட்டது.

கல்லூரியில் ஆங்கில ஆய்வு கூடத்தினை ஏற்படுத்தும் செயற்பாடும் நடைபெற்று வருகின்றது. இவ்வாய்வு கூடம் 1994 ஏப்பிறலில் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஊழியர் சேம நிதியம் (ஊ. சே. நி)

1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமநிதியச் சட்டத்தின் நியதிகளின்படி உதவுதொகைகள், தண்டப்பணங்கள், நிதியத்தின் பணத்தினை முதலீடு செய்வதன் மூலம் கிடைக்கும் வருமானம், பதிவு செய்யப்பட்ட தொழில் தருநர்களினதும் நிதியத்தின் தனிப்பட்ட உறுப்பினர்களினதும் கணக்குகளைச் சரியாகப் பேணுதல், உறுப்பினர்களின் மீளளிப்பு நன்மைகளைப் பெற்றுக்கொடுத்தல் ஆகிய பொறுப்புக்கள் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஊழியர் சேமநிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளை நிருவகித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் என்பனவற்றைக் கவனிக்கும் தொழிற் திணைக்களத்தின் ஊழியர் சேமநிதியப் பிரிவின் நெருங்கிய ஒத்துழைப்புடன் இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

### உதவுதொகைகள்

நிதியத்தினால் பெறப்பட்ட உதவுதொகை 1992 இன் ரூ. 53,383 இலட்சத்திற் கெதிராக 1993 இல் ரூ. 66,109 இலட்சமாக விளங்கியது. இது முந்திய ஆண்டில் பெறப்பட்ட உதவு தொகைகளின் மட்டத்தினைவிட ரூ. 12,726 இலட்சம் அல்லது 23.8 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பிரதிபலிக்கின்றது.

### உறுப்பினர்களின் நிலுவைகள்

ஆய்விற்குரிய ஆண்டிற்கான வட்டி ஒதுக்கீடுகளுக்கு முன் 1993 திசெம்பர் 31 இல் உறுப்பினர்களது நிலுவைகள் ரூ. 624,250 இலட்சமாக அமைந்து 1992 இனைவிட ரூ. 103,301 இலட்சம் அல்லது 19.8 சதவீதம் கூடுதலாக விளங்கின.

### முதலீடுகள்

ஆய்விற்குரிய ஆண்டில் நிதியம் அரச பிணைகள், திறைசேரி உண்டியல்கள், வங்கிகளுக்கிடையேயான அழைப்புப் பணச்சந்தை, பெருந்தோட்டக் கூட்டு நிலையத் தொகுதிக் கடன்கள் என்பனவற்றில் 1992 இன் ரூ. 267,424 இலட்சத்திற்கெதிராக ரூ. 304,305 இலட்சத்தினை முதலீடு செய்தது. இது 1992 இன் முதலீட்டு மட்டத்தினை விட ரூ. 36,881 இலட்சம் அதிகமானதாகும். 1993 திசெம்பர் 31 ஆம் நாளன்று நிதியத்தின் மொத்த முதலீடுகள் ரூ. 665,323 இலட்சமாக விளங்கின. இது 1992 இன் மட்டத்தினைவிட ரூ. 116,976 இலட்சம் அதிகமானதாகும்.

## முதலீடுகளிலிருந்து பெற்ற வருவாய்

1989 இல் உண்ணாட்டு அரசிறைச் சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தத்தின் நியதிகளின்படி ஊழியர் சேம நிதியத்திற்கு வருமான வரியிலிருந்து வழங்கப்பட்டிருந்த விலக்களிப்பு புறக்கீடு செய்யப்பட்டது. இதன்படி 1989 ஏப்பிரல் 01 இலிருந்து முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட எல்லா வருவாய்களும்.10 சதவீத தடுத்துவைத்தல் வரிக்கு உட்படுத்தப்பட்டன. 1993 ஆம் ஆண்டில் முதலீட்டு வருமானத்திலிருந்து கழிக்கப்பட்ட தடுத்து வைத்தல் வரியின் மொத்தத் தொகை ரூ. 9,224 இலட்சமாகும்.

முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருவாய் 1992 இன் ரூ. 69,055 இலட்சத்திற்கெதிராக 1993 இல் ரூ. 91,596 இலட்சமாக விளங்கி ரூ. 22,541 இலட்சங்கொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்தது.

## மீளளிப்புக்கள்

ஊழியர் சேமநிதிய நன்மைகளின் மீளளிப்புக்கள் மூலம் அதன் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்பட்ட மொத்தத் தொகை 1992 இன் ரூ. 22,651 இலட்சத்திற்கெதிராக 1993 இல் ரூ. 23,773 இலட்சமாக அமைந்தது. இது ரூ. 1,122 இலட்சம் அல்லது 4.9 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. நன்மைகளின் மீளளிப்புக்காகச் செலுத்தப்பட்ட கோரல்கள் 1992 இன் 49,864 இற்கெதிராக ஆய்விற்குரிய ஆண்டில் 51,343 ஆக விளங்கின.

## உறுப்பினர்களின் நிலுவைகள் மீதான வட்டி

நிதியத்தின் பண முதலீட்டிலிருந்து பெறப்பட்ட வருவாயிலிருந்து ஒவ்வொரு வருட இறுதியிலும் உள்ள உறுப்பினர்களது நிலுவைகளுக்கு வட்டி செலுத்துமாறு ஊழியர் சேமநிதியம் கேட்கப்பட்டுள்ளது. 1993 இறுதியில் உறுப்பினர்களது நிலுவைகள் மீது செலுத்தப்பட வேண்டிய வட்டிவீதம் ஆண்டுக்கு 13.5 சதவீதமாகும். இது 1992 இன் வட்டிவீத மட்டத்தினை விட 2 சதவீதம் கூடுதலானதாகும்.

ஆண்டின் இறுதியில் உறுப்பினர்களது வரவில் நிலுவையாகவுள்ள ஒன்று சேர்ந்த தொகை மீது வட்டி செலுத்தப்படும். ஆண்டில் பெறப்பட்ட எல்லா உதவு தொகைகளும் அப்பணம் பெறப்பட்ட நாளைக் கருத்தில் எடுக்காது ஆண்டு முழுவதற்குமான வட்டியைப் பெறுவதற்குத் தகுதியுடையனவாகும். உதாரணமாகத் திசெம்பரில் பெறப்பட்ட உதவுதொகைகள் அவ்வாண்டில் சனவரியில் பெறப்பட்ட உதவுதொகைகளைப் போன்று முழு ஆண்டுக்குமான வட்டியைப் பெறும். எனவே தாக்கமுள்ள வட்டிவீதம் ஓரளவு கூடுதலானதாகும்.

## ஊழியர் சேம நிதிய வீடமைப்புக் கடன் திட்டம்

வீடமைப்பு நோக்கங்களுக்காக உறுப்பினர்கள் தமது வரவில் உள்ள நிலுவையில் 75% வரையிலான தொகையை சில குறிப்பிட்ட கடன்வழங்கும் நிறுவனங்களிடமிருந்து கடனாகப் பெறுவதனை இயலச் செய்யும் வகையில் 1988 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கச் சட்டத்தினால் ஊசேநி சட்டம் திருத்தியமைக்கப்பட்டது.

இத்திட்டத்தில் பங்கேற்கும் கடன்வழங்கும் நிறுவனங்களாக வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, அரசஈட்டு முதலீட்டு வங்கி, மக்கள் வங்கி, இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, நாட்டில் பரவலாக உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் என்பன விளங்குகின்றன.

நிலுவைகளை உறுதிப்படுத்துவதற்காக ஊழியர் சேம நிதியத் திணைக்களம் 1993 திசெம்பர் 31 ஆம் நாளின்படி மொத்தமாக 51,289 விண்ணப்பங்களைச் செயல்முறைப்படுத்தி சம்பந்தப்பட்ட தொழில் அலுவலகங்களுக்கு அனுப்பி வைத்தது.

நிதியத்தின் தொழிற்பாடுகள் மீதான 1992, 1993 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பீட்டுத் தரவுகள் அட்டவணை 2.14 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.14

**ஊழியர் சேமநிதியப் புள்ளி விபரங்கள் 1992 – 1993**

(ரூ. பத்து இலட்சங்களில்)

| | | 1992 | 1993 |
|---|---|---|---|
| 1. | பெறப்பட்ட உதவு தொகைகள் (அ) ... | 5,294.5 | 6,568.0 |
| 2. | முதலீடுகள் (ஆ) ... | 26,742.4 | 30,430.5 |
| 3. | முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருவாய் ... | 6,905.5 | 9,159.6 |
| 4. | மீளளிப்புக் கொடுப்பனவுகள் ... | 2,265.1 | 2,377.3 |
| 5. | மீளளிப்புக்களின் எண்ணிக்கை ... | 49,864 | 51,343 |
| 6. | வட்டி வீதம் (சதவீதம்) ... | 11.5 | 13.5 |
| 7. | உறுப்பினர் நிலுவைகள் மீதான வட்டி ஒதுக்கல் ... | 5,990.9 | 8,427.3 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) தொங்கற் கணக்கில் வரவு வைக்கப்பட்ட உதவு தொகைகள் நீங்கலாக.
(ஆ) அரச பிணைகளில் மீள் முதலீடு செய்யப்பட்ட முதிர்ச்சிப் பெறுகைகளையும் குறுங்கால, முதலாந்தர திறைசேரி உண்டியல்களிலும் அழைப்புப் பணச் சந்தையிலும் முதலீடு செய்யப்பட்ட பணத்தையும் உள்ளடக்கும்.

## செலாவணிக்கட்டுப்பாடு

செலாவணிக்கட்டுப்பாட்டுத் தளர்த்தலில் தற்போது கடைப்பிடிக்கப்படும் செயல் முறைகளை மேலும் தொடர்ந்து நடத்துவதற்கு 1993 இல் பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. வதிவுடைய இலங்கையர்களுக்குப் பின்வருவனவற்றுக்காக வெளிநாட்டுச் செலாவணியை வழங்குவது தொடர்பான வரையறை 1993 சனவரி 15 இல் 50 சதவீதத்தால் உயர்த்தப்பட்டது - விடுமுறைக்கான வெளிநாட்டுப்பயணம், கல்வி, மருத்துவச் சிகிச்சையும் தொழில் வாய்ப்பும், அன்பளிப்புகள் மற்றும் வர்த்தக மாதிரிகளின் ஏற்றுமதி, மீளக்கொண்டுவருதலின் அடிப்படையிலான

தனியாளுக்கான ஆபரணம் மற்றும் சொந்தப் பாவனைக்ளின் ஏற்றுமதி, குடியகல்வோரினால் மாற்றல் செய்யப்படும் மூலதனம். நடைமுறைக் கணக்கு (மூலதனமல்லா)க் கொடுக்கல் வாங்கல்கள் மீதான எல்லாக் கட்டுப்பாடுகளையும் நீக்குவதென்ற அரசின் கொள்கையுடன் ஒத்துச்செல்லும் வகையில் 1993 மாச்சின் பிற்பகுதியில் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதற்காக மேலும் முயற்சிகள் எடுக்கப்பட்டன.

மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட மாற்றங்களாவன :-

**பயணம்**

பின்வரும் நோக்கங்களுக்காகத் தற்போது கட்டுப்பாடு எதுவுமின்றி வெளிநாட்டுச் செலாவணியைப் பெற்றுக்கொள்ளலாம். - விடுமுறை மற்றும் யாத்திரைகளுக்கான வெளிநாட்டுப்பயணம், மாநாடுகள் உட்பட வணிகம், ஆய்வரங்குகளும் செயலமர்வுகளும், வாழ்க்கைச் செலவு உட்படக் கல்வியும் வைத்தியமும், நம்பகத் தன்மைகொண்ட பல்வகைப் பணவனுப்பல்கள். அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் இத்தகைய நோக்கங்களுக்காக தமது திறனாய்வினையும் தன்மதிப்பிரயோகத்தையும் பயன்படுத்தி எவ்வித கட்டுப்பாடுமின்றி வெளிநாட்டுச் செலாவணியை வழங்குமாறு அறிவுறுத்தப்படுவதுடன் வெளிநாட்டுச் செலாவணியை விடுவிக்கையில் கடவுச்சீட்டுக்களில் குறிப்பீடு செய்யப்பட வேண்டியது அவசியமல்ல எனவும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அறிவுறுத்தப்பட்டனர். வெளிநாட்டுச் செலாவணியின் அளவு, பயணங்களின் எண்ணிக்கை, பயண வழிகளின் தேர்வு என்பன தொடர்பாக நிலவிய கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன. வெளிநாட்டுப்பயணத்தை மேலும் வசதிப்படுத்துவதற்காக வெளிநாட்டுச் செலாவணியில் நியாயமான ஒரு தொகையைத் தாள் நாணயமாக வழங்குவதற்கும் அனுமதியளிக்கப்பட்டது. மேலும் அவற்றின் ஒழுங்கு விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு சருவதேசக் கடன் அட்டைகளைக் கட்டுப்பாடின்றி வழங்கலாமென அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் 1993 ஏப்பிறல் 5 இல் அறிவிக்கப்பட்டனர். இலங்கை நாட்டவர்களும் வெளிநாட்டுத் தொழில்நுட்ப ஆளணியினரும் அவர்களது குடும்பங்களைப் பராமரிப்பதற்காக மாதாந்த ஊதியங்களைக் கட்டுப்பாடின்றி அனுப்புவதற்கு அனுமதிக்கலாமென அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

**ஏற்றுமதிகள்**

1971 இன் 17 ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவுகள் 22 (4) மற்றும் 6 (2) (அ) என்பனவற்றின் நியதிகளுக்கிணங்க ஏற்றுமதியாளர் மீது விதிக்கப்பட்ட தாயகம் மீட்பு மற்றும் ஒப்படைப்புத் தேவைப்பாடுகள் முறையே 1993 மாச்சு 26 ஆம் நாளிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியின் மூலமும் 1993 மாச்சு 29 ஆம் நாளிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் மூலமும் நீக்கப்பட்டன. இதன்படி ஏற்றுமதியாளர்கள் தற்பொழுது ஒன்றில் ஏற்றுமதிப் பெறுகைகளைத் தாயகத்திற்கு அனுப்பி இவற்றை இலங்கையில் ரூபா அல்லது வெளிநாட்டு நாணயக்கணக்குகளில் வைத்திருக்கலாம் அல்லது வெளிநாட்டிலுள்ள வர்த்தக வங்கியொன்றில் வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் வைத்திருக்கலாம். ஏற்றுமதி செய்யும் கம்பனிகள் தமது ஏற்றுமதிகளின் அதிகரித்துச் செல்லும் பெறுமதியில் 5 சதவீதத்தை வதிவுடைய வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் வரவு வைப்பதற்கு

வழங்கப்பட்ட வசதி புறக்கீடு செய்யப்பட்டது. கப்பலேற்றும் முகவர்களும் சரக்குகளை அனுப்பி வைப்போரும் தாம் வழங்கிய பணிகளுக்காக குறிப்பிட்ட சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு அவர்களது வெளிநாட்டு முதன்மையாளர்களிடமிருந்து பெற்ற தரகு மற்றும் இலாபங்களுடன் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறப்பதற்கும் தொழிற்படுத்துவதற்கும் அனுமதிக்கப்பட்டனர். பயணமுகவர்கள் / ஒப்பந்த அடிப்படையிலான பறப்புக்களைத் தொழிற்படுத்துவோர் என்பவர்களிடமிருந்து பெற்ற கொடுப்பனவுகளுடன் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைப் பேணும் வசதி சில குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு உணவக விடுதியினருக்கும், 1993 ஒற்றோபர் 4 ஆம் நாள் வழங்கப்பட்டது. ஏற்றுமதியாளரினால் ஏற்றுமதிப் பெறுகைகள் இலங்கைக்கு அனுப்பப்படும் பட்சத்தில் ஏற்றுமதி வருவாய்களின் க. ஏ. பெ. இல் நியாயமான ஒரு சதவீதப் பங்கினை வெளிநாட்டிலுள்ள முகவர்களுக்குத் தரகுப்பணமாக அனுப்புவதற்கு அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டனர். வாங்குநரே முகவராகவும் உள்ளவிடத்து வாங்குநருக்குச் சேரவேண்டிய தரகினை மூல முதலிலேயே கழிப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டது.

1993 சனவரி 15 இலிருந்து பயனுறும் வகையில் ஏற்றுமதிக் கட்டளைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான வெளிநாட்டு உள்ளீடுகளின் இறக்குமதிகளுக்கு நிதியிடும் நோக்கத்திற்காக நேரடி மற்றும் மறைமுக ஏற்றுமதியாளருக்கு அவர்களது உள்நாட்டுப் பிரிவுகளிலுள்ள வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வதிவுடைய வெளிநாட்டு நாணயக் கணக்கு, வதிவுடைய இலங்கையரல்லாதோரின் வெளிநாட்டு நாணயக் கணக்கு என்பனவற்றில் உள்ள நிதியங்களிலிருந்து மட்டுமே வெளிநாட்டு நாணயக் கடன்கள்கிடைக்கச் செய்தல் வேண்டுமென அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் அறிவிக்கப்பட்டனர்.

சுங்கப்பகுதி, செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் அனுமதியின்றியே அதனது தன்மதியைப் பிரயோகித்து ஆபரணங்கள், வர்த்தக மாதிரிகள், அன்பளிப்புக்கள் மற்றும் சுயபாவனைப் பொருட்கள் என்பனவற்றின் ஏற்றுமதியினை அனுமதிக்கலாம் என்றும் சுங்கப் பணிப்பாளர் நாயகம் அறிவிக்கப்பட்டார்.

## இறக்குமதிகள்

இறக்குமதிகள் தொடர்பான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களுடன் சம்பந்தப்பட்ட செயல்முறைகள் இலகுபடுத்தப்பட்டன. இறக்குமதியாளர்கள் தற்போது முன்கூட்டியே உரிமம் பெறவேண்டிய சில விடயங்கள் நீங்கலாக எந்த ஒரு விடயத்தையும் அத்தகைய இறக்குமதிகளுக்கான சலுகைக்கால நாணயக் கடிதத்தினைச் சமர்ப்பிக்கும் பட்சத்தில் பிற்போடப்பட்ட கொடுப்பனவு நியதிகளில் இறக்குமதி செய்யலாம். கைத்தொழிலுக்கான மூலப்பொருள் மற்றும் ஐ. அ. டொலர் 3,000 வரையிலான பெறுமதி கொண்ட புத்தகங்கள் என்பனவற்றின் இறக்குமதியினை நாணயக்கடிதம் ஒன்றை நிறுவும் தேவையில்லாமலேயே மேற்கொள்ளலாம் என வழங்கப்பட்ட விலக்களிப்பு வர்த்தக அடிப்படையிலான தாள் நறுக்குகள், அலங்கார நேந்தைகள் என்பனவற்றின் இறக்குமதியையும் அனுமதிக்கும் வகையில் 1993 யூன் 11 இல் மேலும் திருத்தியமைக்கப்பட்டது. இவ்வசதிக்கு மேலதிகமாக இறக்குமதியாளர்கள் நாணயக்

கடிதத்தினை நிறுவாமலே கொடுப்பனவின் போதான ஆவணங்களின் (கொ / ஆ). நியதிகளில் ஐ. அ. டொலர் 7,500/- வரையிலான பொருட்களை வர்த்தகத் தொகைகளில் இறக்குமதி செய்வதற்கு அனுமதிக்கப்பட்டனர். பெறுமதி அதிகரிக்கப்படாதிருப்பின் வழமையான காலக்கெடுவிற்கு மேலாக 6 மாத காலப்பகுதிக்கு நாணயக் கடிதத்தை நீடிப்பதற்கு வர்த்தக வங்கிகள் அனுமதிக்கப்பட்டன.

இந்தியாவுடனான வணிகப்பொருள் இறக்குமதிகள் மற்றும் கட்புலனாகா இறக்குமதிக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விலைப்பட்டியலை ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் நியதிகளில் தீர்ப்பனவு செய்யவேண்டிய தேவைப்பாடு 1993 ஏப்பிறல் 28 இல் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது.

கொழும்பு சருவதேச விமான நிலையத்திலுள்ள தீர்வையற்ற கடைச் சொந்தக்காரர்கள் தமது கடைகளில் விற்பனை செய்வதற்காகப் பொருட்களை இறக்குமதி செய்கையில் நாணயக்கடிதம் நிறுவப்படாமலே ஏற்றுக்கொள்ளலின் மீதான ஆவணங்களின் (ஏ./ஆ.) நியதிகளில் பொருட்களை இறக்குமதி செய்யும் வசதியினை அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கலாம். அனுமதிக்கப்படக்கூடிய சலுகைக்காலம் கப்பலேற்றப்பட்ட பொருட்களுக்கான ஏற்று முறியின் நாளிலிருந்து 180 நாட்கள்வரை நீடிக்கப்படலாம். கொடுப்பனவின் போதான ஆவணம்காண் நியதிகளிலும் பொருட்களின் இறக்குமதி அனுமதிக்கப்பட்டது.

### களஞ்சியப்படுத்தும் வர்த்தகம்

சில குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு நாணயக் கடிதத்தினை நிறுவாமலே கொ/ஆ மற்றும் ஏ/ஆ என்ற நியதிகளில் களஞ்சியப்படுத்தும் வர்த்தகத்திற்காகப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான விண்ணப்பங்களுக்கு ஒப்புதலளிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டனர். மீள் ஏற்றுமதி செய்வதற்காக புடவைத் துணிகள், ஆடைகள், கராம்பு, போதைப்பொருட்கள், ஆயுதங்களும் வெடிமருந்துகளும் என்பனவற்றை இறக்குமதி செய்தல் களஞ்சியப்படுத்தும் வர்த்தகத்தின் கீழ் கடுமையாகத் தடுக்கப்பட்டுள்ளது.

### முன்மாற்று விற்பனைகள்

நோக்கத்தினைக் கருத்திற் கொள்ளாது 360 நாட்கள் வரையான காலத்திற்கு வெளிநாட்டுச் செலாவணி முன்மாற்று விற்பனைக்கான ஒப்பந்தத்தில் ஈடுபடுவதற்கு வர்த்தக வங்கிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

### குடியகல்வு

நியாயமான அளவு வெளிநாட்டுச் செலாவணியை குடியகலும் இலங்கையருக்கு விடுவிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டனர். குடும்பம் ஒன்றிற்கு உச்ச எல்லையான ரூ. 10 இலட்சத்திற்கு உட்பட்டு தனியாள் ஒருவருக்கு ரூ. 750,000 ஆக மூலதன மாற்றல்களின் பெறுமதி அதிகரிக்கப்பட்டது. குடியகல்வோரினால் ஏற்றுமதி செய்யப்படும் தனியாருக்கான ஆபரணம் விவாகமான

பெண் ஒருவருக்கு ரூ. 150,000 ஆகவும் ஆணுக்கு ரூ. 37,500 ஆகவும் உயர்த்தப்பட்டது. நியாயமான பெறுமதி வரையிலான சொந்தப் பாவிப்பிற்கான பொருட்களின் ஏற்றுமதி அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களினால் அனுமதிக்கப்படலாம். 1993 திசெம்பர் 24 ஆம் நாளிலிருந்து பயனுறும் வகையில் வட்டியும் வாடகையும் உள்ளடங்கலாக இலங்கையிலுள்ள முதலீடுகளிலிருந்து பெறப்படும் வருமானங்களின் முழுப் பெறுமதியும் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தாமலேயே அனுப்பப்படலாம்.

### ஓய்வூதியங்கள்

தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் எவ்வித கட்டுப்பாடுமின்றி தமது ஓய்வூதியம் முழுவதனையும் அனுப்பலாம்.

### முதலீடு

வதிவற்ற முதலீட்டாளர்கள் பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு நிதியங்களிலிருந்து பங்குகளைக் கொள்வனவு செய்திருப்பின் அவர்களுக்கு கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட கம்பனிகளால் வழங்கப்படும் அத்தகைய பங்குச் சான்றிதழ்களை ஏற்றுமதி செய்வதற்கான ஒப்புதலை வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் பதிவு செய்யப்பட்ட கிளை அலுவலகங்களினால் திறக்கப்பட்டுத் தொழிற்படுத்தப்படும் சிறப்பு ரூபா நடைமுறைக் கணக்குகளைப் பேணுதல் மற்றும் கிளை அலுவலகங்கள் /கூட்டு அலுவலகங்களின் இலாபங்களைத் தாய் நாட்டிற்கு அனுப்பிவைத்தல் தொடர்பான வழிகாட்டல்கள் அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கு 1993 யூன் 25 இல் வழங்கப்பட்டன.

### வதிவற்றோர் ரூபாக் கணக்கு

மூலதனக் கொடுக்கல் வாங்கல்களிலிருந்து பெறப்பட்ட நிதியங்கள் நீங்கலான வெளிநோக்கிய பண அனுப்பல்களையும் உள்நாட்டு வரவுகளையும் செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் முன் ஒப்புதல் இன்றி அனுமதிக்கும் வகையில் வதிவற்றோர் ரூபாக் கணக்குத் திட்டம் திருத்தியமைக்கப்பட்டது. எனினும் குடியகல்வோரைப் பொறுத்தவரை மூலதன மற்றும் நடைமுறைக் கணக்குக் கொடுக்கல் வாங்கல்கள் இரண்டிலுமிருந்து பெறப்பட்ட நிதியங்களின் வெளிநோக்கிய பணவனுப்பல்கள் தொடர்பான பற்றுக்கள் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் முன்ஒப்புதலுக்கு உட்பட்டதாகும்.

## பொதுப்படுகடன்

நாணய விதிச் சட்டத்தின் 113 ஆம் பிரிவின் நியதிகளின்படி, அரசின்சார்பில் வங்கி பொதுப்படுகடனைத் தொடர்ந்தும் முகாமைப்படுத்தியது. முன்னைய ஆண்டுகளைப்போன்று இத்தொழிற்பாடு பொதுப்படுகடன் திணைக்களத்தினால்

மேற்கொள்ளப்பட்டது. பொதுப்படுகடன் திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்ட முக்கிய படுகடன் கருவிகளாக அரசபிணைகள்/கடன்கள், திறைசேரி உண்டியல்கள், தொகுதிக்கடன்கள், திறைசேரி வைப்புச் சான்றிதழ்கள் என்பன விளங்கின. இவற்றுடன் திணைக்களத்தினால் மத்திய வங்கிப் பிணைகளின் வழங்கலும் மேற்கொள்ளப்பட்டது. திணைக்களம் அரசின் வெளிநாட்டுப் படுகடனை முகாமைப்படுத்திப் பேணுதலையும் மேற்கொண்டது. மேலும் வெளிநாட்டுப்படுகடன் உள்நாட்டுப்படுகடன் ஆகிய இரண்டிலும் தரவு அடிப்படையினைப் பேணுதல், மேம்படுத்தல் என்பன திணைக்களத்தின் வேலையில் குறிப்பிடத்தக்க பங்கை வகித்தன. பொதுப்படுகடனின் வெவ்வேறு விடயங்கள் தொடர்பான கொள்கைகளை உருவாக்குவதற்கு உதவும் பொருட்டு ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கை வங்கியினால் பணியாற்றப்பட்ட அரச உத்தரவாத பொதுப்பணிக் கையேட்டுக் கடனையும் உள்ளடக்கிய அரசின் மொத்தப் படுகடனின் வெளிநின்ற மொத்தத் தொகை 1993 இறுதியில் ரூ. 4,982,552 இலட்சமாக விளங்கியது. 1992 இறுதியின் படுகடனுடன் ஒப்பிடுகையில் இது ரூ. 782,169 இலட்சம் அதிகமானதாகும். 1993 இறுதியில் வெளிநின்ற வெளிநாட்டுப்படுகடன் பொறுப்பு ரூ. 2,742,166 இலட்சமாக அமைந்து ரூ. 340,724 இலட்சங்கொண்ட அதிகரிப்பைக் காட்டியது. இதில் ரூ. 231,345 இலட்சம் வெளிநாட்டுச் செலாவணிவீதத் தேய்வின் பேரிலானதாகும். அரசின் வெளிநின்ற மொத்தப்படுகடனில் வெளிநாட்டுப்படுகடன் 55 சதவீதத்திற்கு வகைகூறியவேளையில் மீதியான 45 சதவீதமும் உள்நாட்டுப்படுகடனைப் பிரதிபலித்தது. ரூ. 282,046 இலட்சங்கொண்ட அரச ரூபாக் கடன்கள் 1993 இல் மிதக்க விடப்பட்டன. ரூபாக் கடன்களின் மொத்த மீள் கொடுப்பனவும் வட்டிக் கொடுப்பனவுகளும் இவ்வாண்டில் முறையே ரூ. 202,309 இலட்சமாகவும் ரூ. 117,394 இலட்சமாகவும் அமைந்தன. 1993 இறுதியில் வெளிநின்ற ரூபாக் கடன்கள் ரூ. 1,057,071 இலட்சமாக விளங்கியதுடன் இது இரு அரச வங்கிகளினதும் மீளமைப்புத் தொடர்பாக அரசினால் வழங்கப்பட்ட நீண்டகால முறிகளின் ரூ. 240,880 இலட்சத்தையும் உள்ளடக்கியிருந்தது. 1993 இன் ரூபாக்கடன் நிகழ்ச்சித் திட்டத்திற்கான முக்கிய உதவுநராக ஊழியர் சேமநிதியம் விளங்கி 1993 இறுதியில் வெளிநின்ற மொத்த ரூபாக் கடன்களில் 60.9 சதவீத்தினைக் கொண்டிருந்தது. இரண்டாவது பெரும் உதவுநரான தேசிய சேமிப்பு வங்கி வெளிநின்ற ரூபாக்கடனில் 12.5 சதவீத்தினைக் கொண்டிருந்தது.

1992 திசெம்பர் 16 இல் ரூ. 900,000 இலட்சத்திலிருந்து ரூ. 1,250,000 இலட்சத்திற்கு அதிகரிக்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மீதான உச்ச எல்லை 1993 இல் மாற்றமின்றியிருந்தது. திறைசேரி உண்டியல்களுக்கான இரண்டாந்தரச் சந்தையினை விறுவிறுப்பாக்கி அபிவிருத்தி செய்யும் பொருட்டு வங்கி 1992 யூலை 24 இல் அறிமுகப்படுத்திய முதன்மை வணிகர் முறையினைத் தொடர்ந்தும் தொழிற்படுத்தியது. இதனால் சான்றளிக்கப்பட்ட முதன்மை வணிகர்கள் மட்டுமே வாராந்தக் கேள்விப்பத்திரங்களில் விலையைக் குறிப்பிடுவதற்கு அனுமதிக்கப்பட்டதுடன் பொது மக்கள் இவ்வணிகர்களிடமிருந்தே திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்ய வேண்டியிருந்தது. எனினும் தேசிய சேமிப்பு வங்கி, ஒப்புதலளிக்கப்பட்ட சேம நிதியங்கள், ஊழியர் நம்பிக்கை நிதியம், ஏனைய நிதியங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய அரசின் செல்வாக்கிற்குட்பட்ட மூலங்களிலிருந்து ஒவ்வோர் முதிர்ச்சிக் காலத்திற்கும் பொருத்தமான நிறையேற்றப்பட்ட சராசரி வீதங்களில் போட்டியற்ற

விலைக் குறிப்பீடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. பதின்மூன்று வர்த்தக வங்கிகளையும் 4 பணத்தரகர் நிறுவனங்களையும் முகாமைத்துவக் கம்பனியான அலகு நம்பிக்கையையும் உள்ளடக்கிய ஆரம்பத்தில் நியமிக்கப்பட்ட சான்றளிக்கப்பட்ட முதன்மை வணிகர்களின் எண்ணிக்கையில் 1993 இறுதியில் எவ்வித மாற்றமும் இருக்கவில்லை.

24 மாத, 36 மாத, 48 மாத திறைசேரி உண்டியல்களுக்கான கேள்விப் பத்திரங்கள் 1993 இன் இரண்டாம் காற்பகுதியில் இடைநிறுத்தப்பட்டன. அத்தகைய நீண்டகால முதிர்ச்சியுடைய முதலீடுகளுக்குக் கிடைத்த குறைவான ஆதரவே இதற்குக் காரணமாகும். திணைக்களம் 3, 6, 12 மாத முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட திறைசேரி உண்டியல்களைத் தொடர்ந்தும் வழங்கியது. இத்துடன் 3 மாதங்களுக்குக் குறைவான முதிர்ச்சியைக் கொண்ட குறுங்கால உண்டியல்களும் இரண்டாந்தரச் சந்தையில் விற்பனை செய்யப்படுவதற்காக மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டன. நாணய முகாமைத்துவ உத்தியின் ஒரு பகுதியாக திறைசேரி உண்டியல்களின் வழங்கப்பட வேண்டிய தொகை, மத்திய வங்கி ஒதுக்கீட்டின் முதிர்ச்சி அமைப்பு போன்ற விடயங்கள் பற்றிய ஏலங்கள் தொடர்பாக தீர்மானங்கள் நாணயத் தொழிற்பாட்டுப் பிரிவு வாராந்த அடிப்படையில் தொடர்ந்தும் தீர்மானத்தை எடுத்து வந்தது.

1993 இல் திறைசேரி உண்டியல் தொழிற்பாடுகளில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க அபிவிருத்தியானது மத்திய வங்கி வசமிருந்த திறைசேரி உண்டியல்களின் அளவு 1992 இறுதியில் ரூ. 259,975 இலட்சத்திலிருந்து அல்லது மொத்த வெளிநின்ற தொகையில் 29.9 சதவீதத்திலிருந்து 1993 இறுதியில் ரூ. 59,780 இலட்சத்திற்கு அல்லது மொத்த வெளிநின்ற தொகையில் 6.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமையாகும். மத்தியவங்கியல்லாத்துறையின் உடைமைகள் 1992 இறுதியில் ரூ. 610,981 இலட்சத்திலிருந்து அல்லது மொத்த வெளிநின்ற தொகையில் 70.1 சதவீதத்திலிருந்து 1993 இறுதியில் ரூ. 912,177 இலட்சத்திற்கு அல்லது மொத்த வெளிநின்ற தொகையில் 93.8 சதவீதத்திற்கு அதிகரித்தன. இதேவேளை மொத்த வெளிநின்ற திறைசேரி உண்டியல்கள் முந்திய ஆண்டின் இறுதியின் ரூ. 870,957 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1993 இறுதியில் ரூ. 971,957 இலட்சமாக விளங்கின. இவ்வதிகரிப்பு ரூ. 136,000 இலட்சங்கொண்ட திறைசேரி உண்டியல்களின் புதிய வழங்கல்களினாலும் ரூ. 35,000 இலட்சங்கொண்ட திறைசேரி உண்டியல்கள் முதிர்ச்சியடைந்தமையாலும் ஏற்பட்டதாகும். திறைசேரி உண்டியல் தொடர்பாக இவ்வாண்டில் செலுத்தப்பட்ட மொத்த வட்டி ரூ. 129,577 இலட்சமாகும்.

ஆய்விற்குரிய ஆண்டில் 3, 6, 12 மாத திறைசேரி உண்டியல்களுக்கான நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள் முறையே ஆண்டுக்கு 16.94 – 21.91, 17.44 – 21.06, 17.82 – 21.98 சதவீத வீச்சுக்களில் காணப்பட்டன.

1990 இல் தொடங்கிய அரசின் திறைசேரி வைப்புச் சான்றிதழ்களை வங்கி தொடர்ந்தும் வழங்கியது. சான்றிதழ்கள் 6, 12, 24 மாத முதிர்ச்சிக் காலங்களில் வழங்கப்பட்டு முறையே ஆண்டுக்கு 17.15 சதவீத, 18.06 சதவீத, 19.83 சதவீத வட்டியைக் கொண்டிருந்தன. தேசிய சேமிப்பு வங்கியினாலும் மத்திய வங்கியின் நாணயத் திணைக்களத்தினாலும் விற்கப்படும் திறைசேரி வைப்புச் சான்றிதழ்களின் முகப்புப் பெறுமதி முறையே ரூ. 62,922,000 ஆகவும் ரூ. 44,006,000 ஆகவும்

விளங்கியது. இவ்விரு மூலங்களும் தொடர்பான மீளக்கொடுப்பனவுகள் முறையே ரூ. 64,129,000 ஆகவும் ரூ. 31,006,000 ஆகவும் விளங்கின. இம்மீளக் கொடுப்பனவுகள் ரூ. 17,864,719 கொண்ட வட்டிக் கொடுப்பனவுகளை உள்ளடக்கியிருந்தன. 1993 இறுதியில் வெளிநின்ற திறைசேரி வைப்புச் சான்றிதழ்களின் தொகை ரூ. 1,138 இலட்சமாகும்.

திணைக்களம் சந்தையிலுள்ள மேலதிகத் திரவத்தன்மையினை ஈர்க்கும் முகமாக 1993 ஒற்றோபர் 19 இல் மத்திய வங்கிப் பிணைகளை வழங்கத் தொடங்கியது. ரூ. 8,840 இலட்சமும் ரூ. 12,710 இலட்சமும் கொண்ட முறையே 3 மாதங்களுக்கும் 6 மாதங்களுக்குமான மத்திய வங்கிப் பிணைகள் (ஆண்டுக்கு 18 சதவீத நறுக்கு வீதத்தில்) 1993 இல் சான்றளிக்கப்பட்ட முதன்மை வணிகர்களுக்கு வழங்கப்பட்டன. இவ்வழங்கல்களின் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள் 18.56 சதவீதத்திலிருந்து 20.04 சதவீதத்திற்கும் 19.23 சதவீதத்திலிருந்து 21.44 சதவீதத்திற்கும் இடையே முறையே 3 மாத 6 மாத முதிர்ச்சிக் காலங்களுக்கு வேறுபட்டமைந்தன.

அரசின் நடுத்தர நீண்டகால வெளிநாட்டுப்படுகடன் பேரிலான மொத்தப் பெறுகைகள் 1993 இல் ரூ. 178,916 இலட்சமாகும். பயன்படுத்தப்பட்ட மொத்தத் தொகையில் 68.0 சதவீதம் செயற்றிட்டக் கடன்களாக அமைந்தவேளையில் மீதித்தொகை செயற்றிட்டமல்லாக் கடன்கள் தொடர்பானதாக விளங்கியது. 1993 இல் அரசின் வெளிநாட்டுப் படுகடன் மீதான மொத்த வட்டிக் கொடுப்பனவும் ஏனைய கட்டணங்களும் ரூ. 51,825 இலட்சமாக அமைந்தன.

## பிரதேச அலுவலகங்கள் – மாத்தறை, அநுராதபுரம், மாத்தளை

1993 இல் மத்திய வங்கியின் மாத்தறை, அநுராதபுரம், மாத்தளைப் பிரதேச அலுவலகங்கள் மூன்றும் அவற்றுக்கென ஒதுக்கப்பட்ட மரபுரீதியான மத்திய வங்கித் தொழிற்பாடுகளைக் கொண்டு நடாத்துவதற்கு மேலதிகமாக, தமது அபிவிருத்தி நடவடிக்கைகளையும் தொடர்ந்து மேற்கொண்டன. பிரதேச அலுவலகங்களின் முக்கிய நடவடிக்கைகள் நாணயத்தொழிற்பாடுகள், காசோலைத் தீர்ப்பனவு நடவடிக்கைகள், தரவுச் சேகரிப்பு நடவடிக்கைகள், நன்மை பெறுவோர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல், பி கி. அ. வங்கிகளின் நடவடிக்கைகளை பரிசோதனை செய்தல், சம்பந்தப்பட்ட பிரதேசங்களில் உள்ள அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட்டுள்ள அரச திணைக்களங்கள், முகவரகங்கள் மற்றும் அமைப்புக்களுடன் இணைப்பினை ஏற்படுத்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

மாத்தறைப் பிரதேச அலுவலகம் சிறு உடைமையாளர் தேயிலை அபிவிருத்தி (சிஉதேஅ) செயற்றிட்டம், உள்நாட்டு உண்டியல் திட்டம், தென் மாகாண கிராமிய அபிவிருத்தி (தெமாகிஅ) செயற்றிட்டம், புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம் (புஅகிகொக) என்பனவற்றை நடைமுறைப்படுத்தல் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டது. இக்கொடுகடன் திட்டங்கள் பற்றிய ஆய்வரங்குகளை நடாத்துவதற்கு மேலதிகமாக, இக்கொடுகடன் திட்டங்களுடன் தொடர்புடைய பின்தொடர் மேற்பார்வைகளும் தொடர்ந்தன. மாத்தறைப் பிரதேச அலுவலகம், அம்பாந்தோட்டை பிகிஅ வங்கிகளின் மூன்று வங்கிக் கிளைகளின் பரிசோதனையையும் மேற்கொண்டது.

அநுராதபுர பிரதேச அலுவலகம் ஏனைய அரச நிறுவனங்களுடன் இணைந்து பண்ணை அபிவிருத்தி மற்றும் அரிசி பதனிடல் என்பனவற்றை உள்ளடக்கிய பல்வேறு விடயங்கள் பற்றி 2,000 இற்கு மேற்பட்ட எதிர்காலக் கடன் பெறுநருக்கு 51 நன்மை பெறுவோர் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியது. பிரதேச அலுவலகம் மத்திய வங்கியின் ஆதரவுடன் நிகம்பகவில் நடாத்தப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டத்துடன் தொடர்புடைய வேலையினை ஒருங்கிணைத்ததுடன் திருப்பனை, கெக்கிராவ ஆகிய இடங்களிலுள்ள இரு பண்ணை அபிவிருத்திச் செயற்றிட்டங்களிலும் ஈடுபட்டிருந்தது. பிரதேச அலுவலகம் குருநாகல், அநுராதபுரம் பொலனறுவை பிகிஅ வங்கிகளின் ஆறு கிளைகளையும் பரிசோதனை செய்தது.

1993 இல் மாத்தளைப் பிரதேச அலுவலகம் சனசக்தி பெறுவோர், பண்ணை வேளாண்மையாளர்கள், தொழிலற்ற இளைஞர்களும் வேளாண்மையாளரும், வங்கியாளர் மற்றும் பாடசாலைப் பிள்ளைகளுக்கான பல பயற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியது. மேலும் கொடுகடன் திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வை உருவாக்கும் பொருட்டுப் பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள கடன்பெறவிரும்புவோரிடையே அதிக எண்ணிக்கையான “சனகமூவ” கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. பிரதேச அலுலகம் சிறு உடைமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டக் கொடுகடன் திட்டம், நீண்டகாலப் பயிர் அபிவிருத்திக் கொடுகடன் திட்டம் என்பன தொடர்பான அதன் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. இவ்வலுவலகம் கண்டி, மாத்தளை, நுவரெலியா, கேகாலை ஆகிய பிகிஅ வங்கிகளின் எட்டுக்கிளைகளின் பரீட்சிப்புக்களையும் மேற்கொண்டது.

மத்திய வங்கியின் மரபுவழித் தொழிற்பாடுகளை மேற்கொள்கையில் மாத்தறை, அநுராதபுர பிரதேச அலுவலகங்கள் நாணய மாற்று வசதிகளை வழங்குவதனைத் தொடர்ந்தும் மேற்கொண்டன. மேலும் பிரதேச அலுவலகங்கள் பிரதேசரீதியான காசோலைத் தீர்ப்பனவு வசதிகளை வழங்கின. ரூ. 21,120 இலட்சம் பெறுமதி கொண்ட மொத்தம் 161,462 காசோலைகள் மாத்தறையிலுள்ள பிரதேச காசோலைத் தீர்வகத்தினூடாகத் தீர்ப்பனவு செய்யப்பட்டன. ரூ. 15,590 இலட்சம் பெறுமதியான 135,440 காசோலைகள் அநுராதபுர காசோலைத் தீர்வகங்களூடாக தீர்ப்பனவு செய்யப்பட்ட வேளையில் ரூ. 137,750 இலட்சம் பெறுமதி கொண்ட 575,720 காசோலைகள் கண்டியிலும் மாத்தளையிலுமுள்ள மாத்தளைப் பிரதேச அலுவலகத்தின் காசோலைத் தீர்வகத்தினூடாகத் தீர்ப்பனவு செய்யப்பட்டன.

## செயலகம்

செயலகத் திணைக்களம், நிதி, சட்டப்பணிகள், வழங்கல்கள், பயணம் மற்றும் ஏனைய பணிகள் ஆகிய வங்கியின் அனைத்து நிருவாகப் பணிகளையும் தொடர்ந்து வழங்கியது.

சட்டப் பிரிவு, மத்திய வங்கி நடவடிக்கைகள் தொடர்பான நிதி மற்றும் வங்கித் தொழில் மீதான சனாதிபதி ஆணைக்குழுவினது விதந்துரைப்புக்களையும் நிதியியல் துறை சீர்திருத்தக் குழுவினது விதந்துரைப்புக்களையும் பரிசீலனை செய்வதில் கடுமையாக ஈடுபட்டிருந்தது. வர்த்தக வங்கிகளை மேற்பார்வை செய்தல் தொடர்பாக மத்திய வங்கியின் அதிகாரங்களை உறுதிப்படுத்துவதற்கு

வேண்டிய மேலதிக ஏற்பாடுகளைப் புகுத்தும் பொருட்டு 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழிற்சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டுவருவதற்கும், கடனிறுக்க வகையற்ற வர்த்தக வங்கி அல்லது அதன் வியாபாரத்தில் ஒரு பகுதியை இன்னுமொரு வர்த்தக வங்கியிடம் கையளிப்பதற்கு மத்திய வங்கியை இயலச் செய்யும் 1990 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க வங்கித் தொழில் (சிறப்பு ஏற்பாடுகள்) ஒழுங்கு விதிகளிலுள்ள ஏற்பாடுகளை ஒன்றிணைப்பதற்கான திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்கும் சட்ட வரைஞர் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டது.

தாள் இன்றிய அரச பிணைகளை வழங்குவதற்காகவும் அரச பிணைகளின் வியாபாரம் அனுமதிக்கப்பட்டுள்ள முதன்மை வணிகர்களின் சுமூகமான தொழிற்பாட்டிற்கு வசதி செய்து கொடுப்பதற்குமாக நாணய விதிச் சட்டம், திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம், பதிவுசெய்யப்பட்ட பங்குகள் பிணைகள் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் திருத்தங்களுக்கான சட்டங்களைத் தயாரிப்பதிலும் சட்டப்பிரிவு ஈடுபட்டிருந்தது.

நிதி நிறுவனங்களின் கடன் மீட்பினை ஆளுமைப்படுத்தும் சட்டச் செயல் முறையினை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக 1990 இன் 2 ஆம் இலக்க தனிசு அறவிடல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டுவருவதற்கான சட்ட மூலத்தை தயாரிப்பதிலும் சட்டப்பிரிவு கடுமையாக ஈடுபட்டிருந்தது.

## தகவலும், வெளியீடுகளும்

தகவல் சேகரிப்பாளர் மற்றும் பரப்புபவர் என்றவகையில் தகவல் திணைக்களம் மத்திய வங்கிப் பணியில் தொடர்ந்து முதன்மைப் பங்கினை வகித்தது. தகவல் சேகரிப்புச் செயல்முறையின்போது உள்நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் சமூகப்பொருளாதார அபிவிருத்தியினை உள்ளடக்குவதில் பெருமுயற்சியினை மேற்கொண்டதுடன் பொருளாதார அபிவிருத்தியினை ஆய்வு செய்வதில் விருப்பம் கொண்ட மாணவர்கள், ஆசிரியர்கள், வங்கியாளர்கள், ஆய்வாளர்கள் மற்றும் ஏனையோருக்கும் வெளியிடப்பட்டதும் வெளியிடப்படாததுமான விடயங்களை வழங்கியது. தகவல் திணைக்களத்தினூடாக வெளியிடப்பட்ட பின்வரும் வெளியீடுகள் தகவல் பரப்பலில் முதன்மை மூலங்களாக விளங்கின.

1. ஆண்டறிக்கை 1992 (சிங்களம், தமிழ், ஆங்கிலம்)
2. பொருளாதார அளவீடு – 1993 இன் முதலரைப்பகுதி (சிங்களம், தமிழ், ஆங்கிலம்)
3. பொருளாதாரச் செய்தித்திரட்டு ஆங்கிலம் – இருமாதமொருமுறை
4. மாதாந்தச் செய்தித்திரட்டு (சிங்களம், தமிழ் ஆங்கிலம்)
5. சமூகப் பொருளாதாரத் தரவு – மடிப்பு 1993 (சிங்களம், தமிழ், ஆங்கிலம்)
6. சமூகப்பொருளாதாரப் புள்ளி விபரம் 1992 (ஆங்கிலம்)
7. சட்டகன தொகுதி 4, 5, 6, (சிங்களம்)

8. சிறப்பு வெளியீடு எண் 22

9. விலை, கூலி புள்ளி விபரம் 1990 – 91 (ஆங்கிலம்)

10. ஆய்வுக் கட்டுரை – வரட்சியும் வேளாண்மையாளரும் (சிங்களம்)

11. அலுவலர் ஆய்வுகள் தொகுதி 22

12. சிறு தோட்ட உடைமையாளர்கள் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டக் கடன் திட்டம்

13. தென்மாகாண கிராமிய அபிவிருத்தி கடன் திட்டம் – கையேடு

14. அப்ரகா – கிராமிய நிதி மீதான கருத்தரங்கு – கையேடு

முடிவு நிகழ்ச்சி கையேடும் தகவல் கையேடும்

15. சிறு உடைமையாளர்கள் தேயிலைப் பெருந்தோட்ட கடன் திட்டம் தொடர்பான விளம்பர ஒட்டிகள்.

மேலதிகமாக திணைக்களம் தனது சொந்த வெளியீடுகளான சட்டகன, செய்தி அளவீடு, வங்கி புவத் ஆகிய சஞ்சிகைகளைத் தொடர்ந்து வெளியிட்டது.

பொதுமக்களுக்கு தகவல்களைப் பரப்புவதற்கு கட்புல, செவிப்புல சாதனங்கள், பத்திரிகை வெளியீடு, கருத்தரங்குகள் மற்றும் புத்தகக் கண்காட்சிகள் என்பனவற்றையும் திணைக்களம் தொடர்ந்து பயன்படுத்தியது.

புதிய நூல்கள், சஞ்சிகைகள், துண்டு வெளியீடுகள் என்பனவற்றை மேலதிகமாகச் சேர்த்துக்கொண்டதன் மூலம் நூலகம் தனது தகவல் தரத்தினை மேலும் உறுதிப்படுத்தியது. இவ்வாண்டில் நூலகம் 320 நூல்களையும் துண்டு வெளியீடுகளையும் சேர்த்துக்கொண்டதுடன் 236 சஞ்சிகைகளுக்கு உதவு தொகையினைச் செலுத்தியது. வங்கிகள் ஏனைய நூலகங்கள், மற்றும் நிறுவனங்களிடமிருந்து அது 150 நூல்களையும் அன்பளிப்பாகப் பெற்றுக்கொண்டது.

சிறப்பாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாகினி மற்றும் செய்தித்தாள்கள் போன்ற வெகுசனத் தொடர்புச் சாதனங்களுடனான தமது சிறந்த உறவு முறையினை திணைக்களம் தொடர்ந்து பேணி வந்தது. இவ்வாண்டில் மத்திய வங்கியின் நடவடிக்கைகள் மற்றும் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கொள்கை வழிமுறைகள் என்பன தொடர்பாக போதுமான விளம்பரத்தினை மேற்கொள்ளுவதனை இது இயலச் செய்தது.

திணைக்களத்தின் வீடியோ பிரிவு, மத்திய வங்கியின் பணிகளும் நடவடிக்கைகளும், தன்னியக்க தீர்வகம் மற்றும் ஊழியர் சேமநிதியத்தின் நடவடிக்கைகள் ஆகியனவற்றைக்கொண்ட மூன்று செய்திப்படங்களைத் தயாரித்தது. மத்திய வங்கியின் 19 கருத்தரங்குகளையும் முக்கிய நிகழ்ச்சிகளையும் அது உள்ளடக்கியது. கட்புல ஓவியப்பிரிவு 16 அட்டைப்படங்களையும் கையேடுகளையும் விளம்பரச் சுவரொட்டிகளையும் வடிவமைத்தது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கொள்கை வகுப்போருக்குமான செயலமர்வினை திணைக்களம் ஒழுங்குபடுத்தியது. இச்செயலமர்வு பேரண்டப் பொருளாதார மாறிலிகளின் அசைவுகளை விரிவாகக் கலந்துரையாடியது.

முன்னைய ஆண்டுகளைப் போலவே, திணைக்களத்தின் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்ந்தும் மிகக்கூடிய எண்ணிக்கையைக் கொண்ட மாணவர்களையும் ஆசிரியர்களையும் கவர்ந்தன. இது வெளியிடங்களில் மிகவும் பிரபலமடைந்துள்ளது. இவ்வாண்டில் இந்நிகழ்ச்சித் திட்டங்கள் அநுராதபுரம், களுத்துறை, பொலனறுவை, காலி, மாத்தறை, நுவரெலியா மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலிருந்து 10,000இற்கு மேற்பட்ட மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் வருகையினைப் பதிவு செய்துள்ளன.

மத்திய வங்கியின் அச்சிடல் வேலைகளில் 90 சதவீதத்திற்கு மேலானவை மத்திய வங்கியின் அச்சகத்தினால் கையாளப்படுகின்றது. இவ்வாண்டில் அச்சகம் 278 அச்சிடல் வேலைகளைத் திருப்திகரமாக முடித்ததோடு இதன் மூலம் மத்திய வங்கிக்கு கிட்டத்தட்ட ரூ. 20 இலட்சத்தினை சேமிப்பதற்கு இயலுமாக இருந்தது.

## ஆராய்ச்சி நடவடிக்கைகள்

வங்கியின் அலுவலர்கள் தாமாகவும் ஏனைய நிறுவனங்களினால் கேட்டுக் கொள்ளப்பட்டமைக்காகவும் பலதரப்பட்ட ஆராய்ச்சி ஆய்வுகளை மேற்கொண்டனர். அவை கொள்கை சார்ந்த ஆராய்ச்சிகளையும் பெருமளவில் கல்வி சார்ந்த ஆராய்ச்சிகளையும் உள்ளடக்கியிருந்தன. இவற்றுள் எட்டு ஆய்வுகள் மத்திய வங்கியின் அலுவலர் ஆய்வுகள் தொகுதி 22 இல் வெளியிடப்பட்டுள்ளன.

## அளவீடுகளும் தரவுச் சேகரிப்பும்

## வறிய மக்களை சிறப்பாகக் கருத்திற்கொண்டு கடன் தேவைப்பாடுகளின் அளவீடு 1992 / 1993

1992 மேயில் ஆரம்பிக்கப்பட்ட வறிய மக்களை சிறப்பாகக் கருத்திற் கொண்ட கடன் தேவைப்பாடுகளின் அளவீட்டின் வெளிக்கள வேலைகள் 1993 ஒற்றோபரில் முற்றுப்பெற்றன. இந்த அளவீட்டின் முக்கிய குறிக்கோள்கள் முறை சார்ந்த கடன் வழங்கலுக்கான தேசிய கடன் கொள்கையொன்றினை வடிவமைப்பதற்காக பொருளாதார ரீதியில் பின்தங்கிய துறைகளின் கொடுகடன் தேவைப்பாடுகளை உறுதியாய் அறிந்துகொள்வதாகும். நிறுவனக் கடன்கள் பலதரப்பட்ட வருவாய்க் குழுக்களை எவ்வளவுதூரம் எய்தியுள்ளது என்பதையும் இக்கடன்கள் வருவாய் உருவாக்கத்திற்காக எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதையும் அறிந்து கொள்வதும் இவ்வளவீட்டின் ஏனைய முக்கிய குறிக்கோள்களாக விளங்கின.

இக் குறிக்கோள்களைக் கருத்திற்கொண்டு கடன்களின் மூலம், கடன்களின் பாவனை, தொழில் முயற்சி, வருவாய் உருவாக்க நடவடிக்கைகள் மற்றும் கடன் திருப்பிச் செலுத்தல் என்பன தொடர்பான தகவல்கள் வெளிக்கள, வருகை

தருதல்கள் மூலம் மாதிரிக் குடியிருப்பாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்டன. கடன் தேவைப்பாடுகள் சம்பந்தமான ஆழமான பகுப்பாய்வு ஒன்றை வழங்குவதற்காக குடித்தொகைப் பண்புகள், வீடமைப்பு நிலைமைகள் , காணிப்பாவனை, தொழிற்படை, தொழில்வாய்ப்பு மற்றும் மனிதவலுப்பாவனை, குடியிருப்பு வருவாய், சேமிப்புக்கள் மற்றும் கடன்பாடுகள் போன்ற சமூகப்பொருளாதார நிலைமைகள் சம்பந்தப்பட்ட தகவல்கள் குடியிருப்பாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்டன.

இந்த அளவீட்டில், நகர்ப்புறத்தைப் பிரதி நிதித்துவப்படுத்தும் 43 நகரப் பிரேதசங்களிலிருந்தும் கிராமியத்துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 216 கிராமங்களிலிருந்தும் தோட்டத்துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 10 பெருந்தோட்டங்களிலிருந்தும் மாதிரிப்படுத்தப்பட்ட ஏறத்தாழ 330,000 குடியிருப்பாளர்களிடமிருந்து தகவல்கள் சேகரிக்கப்பட்டன. பருவகால மாறிலிகளையும் உள்ளடக்கும் பொருட்டு தரவுச் சேகரிப்பு ஒரு வருடகாலத்திற்கும் மேலாகத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.

இந்த அளவீட்டில் சேகரிக்கப்பட்ட தரவுகளின் செயல்முறை இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

## நாடளாவிய தரவுச் சேகரிப்புத் திட்டம்

1978 இல் தொடக்கி வைக்கப்பட்ட நாடளாவிய தரவுச் சேகரிப்புத் திட்டம் 1993 இலும் தொடரப்பட்டதோடு அதனது தொழிற்பாட்டின் பதினைந்தாவது வருடத்தைப் பூர்த்தி செய்தது. நுகர்வுப்பொருட்களின் சில்லறை விலைகள், பல பண்டங்களின் உற்பத்தியாளர் விலைகள், முதன்மை வேளாண்மை உள்ளீடுகளின் செலவுகள், முறைசாராத்துறையிலுள்ள நெல், தேயிலை, இறப்பர், தெங்குப் பயிர்ச் செய்கையினதும் சிறிய அளவிலான கட்டுமான நடவடிக்கைகளினதும் நாளாந்த கூலிவீதங்கள் என்பனவற்றினதும் தரவுகள் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையங்களில் கிரமமான அடிப்படையில் சேகரிக்கப்பட்டன. இந்தத் திட்டத்தின் கீழான தகவல்கள் தெரிந்தெடுக்கப்பட்ட அரச பள்ளிக்கூட ஆசிரியர்களினால் சேகரிக்கப்படுகின்றன.

## தேசிய கணக்குகள்

தேசிய வருமானக் கணக்குகளை மதிப்பீடு செய்தல் தொடர்பான முக்கிய நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. முதலாந்தர மற்றும் இரண்டாந்தரத் தரவுகளின் சேகரிப்பும் தொகுப்பும் இவற்றில் உள்ளடங்கியிருந்தன. இயலுமான இடங்களில் அரையாண்டு அடிப்படையில் அல்லது காலாண்டு அடிப்படையில் தரவுகள் சேகரிக்கப்பட்டன. தேசிய வருமான மதிப்பீட்டை மேம்படுத்துவதற்கான வங்கியின் முயற்சிகளுக்கு உதவுவதற்காக பலதரப்பட்ட மூலங்களிலிருந்து அனைத்தையும் உள்ளடக்கிய தரவுகள் பெறப்படுகின்றன. மதிப்பீட்டுச் செயல்முறையில் மீளாய்வு ஒன்றை மேற்கொள்வதற்கான பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மிக அண்மிய அடிப்படை ஆண்டினைக்கொண்ட தேசிய வருமானத் தொடருக்கான நடவடிக்கையையும் இது உள்ளடக்கும். தேசிய வருமானக் கணிப்பின் கோட்பாடுகள், கொள்கைகள் மற்றும் செயல்முறை தொடர்பாக மத்திய வங்கியினால் பின்பற்றப்பட்ட விடயங்கள் தொடர்பான புதிய கையேடு ஒன்றின் தயாரிப்பில் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

### இறக்குமதிகளின் கண்காணிப்பு

இறக்குமதி எதிர்வு கூறல் நோக்கத்திற்காக வர்த்தக வங்கிகளிலிருந்தான நாணயக் கடிதங்கள்பற்றி வங்கிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகளினூடாக புள்ளிவிபரத் திணைக்களம் தொடர்ந்து இறக்குமதிகளைக் கண்காணித்தது.

### தொழில் வாய்ப்பு புள்ளிவிபரம்

அரசதுறையின் தொழில்வாய்ப்பு சம்பந்தமான ஆண்டு அளவீடு 1993 இலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. இந்த அளவீட்டின் குறிக்கோளானது அரச திணைக்களங்கள், அமைச்சுக்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், கூட்டுத்தாபனத்துறை என்பனவற்றின் தொழில்வாய்ப்புப் போக்குகளை உறுதியாக அறிந்துகொள்வதாகும். மேலதிகமாக, முறைசார்ந்த தனியார்துறையின் தொழில்வாய்ப்புப் போக்குகளை உறுதியாக அறிந்து கொள்வதற்காக ஊழியர் சேமநிதியம் மற்றும் ஏனைய சேமநிதியங்கள் போன்ற நிருவாக பதிவேடுகளிலிருந்தும் தரவுகள் சேகரிக்கப்படுகின்றன.

## தரவுச் செய்முறைப்படுத்தல்

ஆய்விற்குரிய ஆண்டில் தரவுச் செயல்முறைத் திணைக்களம் பயன்படுத்தும் திணைக்களங்களினால் கேட்டுக்கொள்ளப்பட்டவாறான தேவையான மேம்படுத்தல்களுடன் வங்கியில் ஏற்கனவே உள்ள கணனிப் பிரயோகத்தினைத் தொடர்ந்து பேணிவந்தது. தரவுச் செயல்முறைத் திணைக்களத்தினால் கையாளப்படும் பிரயோகங்களில் ஊழியர் சேமநிதியமும் சிறப்பாக வறிய மக்களைக் கருத்திற் கொண்ட கடன் தேவைப்பாடுகளின் அளவீடும் முக்கியமானவையாகும். மேலும், பயன்படுத்தும் திணைக்களங்களில் தனித்த சூழ்நிலையில் தனியார் கணனி அடிப்படையிலான பிரயோகங்கள் பலவற்றினை விருத்தி செய்வதனை தரவுச் செயல்முறைத் திணைக்களம் மேற்கொண்டு வெற்றிகரமாகச் செய்து முடித்துள்ளது.

தரவுச் செயல்முறைத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் இலங்கை தன்னியக்கத் தீர்வகம் தீர்ப்பனவு செய்த காசோலைகளின் எண்ணிக்கை முன்னைய ஆண்டினைவிட 12 சதவீத வளர்ச்சியைக் கண்டது. 1993 இல் தீர்ப்பனவு செய்யப்பட்ட விடயங்களின் மொத்த எண்ணிக்கை 220 இலட்சமாகும்.

நாட்டினுள் வங்கிகளுக்கிடையேயான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக "சிறி லங்கா வங்கிகளுக்கிடையேயான கொடுப்பனவு முறை" எனப் பெயரிடப்பட்ட புதிய முறையொன்று இவ்வாண்டில் நடைமுறைப் படுத்தப்பட்டது. இது வங்கிகளுக்கிடையேயான நிதியங்களின் மாற்றலில் இணைக்கப்படாத ஒரு நடைமுறையாகும். தொடக்கத்தில் சிறிலங்கா வங்கிகளுக்கிடையேயான கொடுப்பனவு முறையானது அழைப்புப் பணச்சந்தைக் கொடுக்கல் வாங்கல்கள், வெளிநாட்டு நாணய தீர்ப்பனவுகள் மற்றும் மீள் நிதியிடல் வசதிகளின் தீர்ப்பனவுகள் போன்ற வங்கிகளுக்கிடையேயான நேரடிக் கொடுப்பனவுகளை மட்டுமே மேற்கொள்ளும். சிறிலங்கா வங்கிகளுக்கிடையேயான கொடுப்பனவு முறை விரிவாக்கத்துடன் நிறுவனங்கள் காசோலை வரையாமலேயே

தமது ஊழியர்களுக்குச் சம்பளக் கொடுப்பனவை மேற்கொள்வதற்கு இந்த முறையினைப் பயன்படுத்தலாம். நிலையியற் கட்டளைகள், காப்புறுதிக் கொடுப்பனவுகள் போன்றனவற்றை நிறைவேற்றுவதற்கு வங்கிகளும் இந்தமுறையினைப் பயன்படுத்தலாம். பயன்பாட்டுக் கட்டணங்களின் கொடுப்பனவுகளைக் கையாளும் திறமையையும் இந்தமுறை கொண்டுள்ளது. இந்தமுறையின் உள்ளார்ந்த பாதுகாப்புப் பண்புகள் உலகின் ஏனைய நாடுகளில் இத்தகைய கொடுப்பனவுகளுக்காகப் பயன்படுத்தப்படும் முறைகளின் பண்புகளைப் போன்றதாவதோடு வாடிக்கையாளர்களுக்கு நம்பிக்கையான சேவையினையும் உறுதிப்படுத்துகின்றன. உடனடியாகவும் சரியாகவும் பட்டியல்களை நிறைவேற்றலாம். சிறிலங்கா வங்கிகளுக்கிடையேயான கொடுப்பனவு முறையானது குறைந்த பெறுமதியுடைய ஆனால் மிகக்கூடிய தொகுதிகளிலான கொடுக்கல் வாங்கல்களுக்காக உலகம் முழுவதும் பயன்படுத்தப்படும் அதே முறையிலானதாகும்.

## பயிற்சி

கல்விசார்ந்த மற்றும் கல்விசாரா விடயங்களில் அலுவலர்களைப் பயிற்றுவித்தல் 1993இல் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. கல்விசார்ந்த பயிற்சியானது ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகங்களில் பொருளாதாரம் மற்றும் சம்பந்தப்பட்ட விடயங்களில் பட்டப் பின்படிப்புடன் தொடர்புடையதாகக் காணப்பட்டது. முதுமாணி மற்றும் முனைவர் பட்டங்களுக்காக அலுவலர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இவ்வாண்டில் முதுமாணிப்பட்டப்படிப்பிற்காக பதினாறு அலுவலர்களும் முனைவர் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக இரண்டு அலுவலர்களும் வெளிநாடு சென்றனர். ஓராண்டு காலத்திற்காக இலங்கையில் கணனித் தொழில்நுட்பப் பயிற்சி நெறி ஒன்றினைப் பயிலுவதற்காக அலுவலர் ஒருவருக்கு கல்வி விடுப்பு வழங்கப்பட்டது.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமான குறுகியகால பயிற்சி நெறிகள், கருத்தரங்குகள், செயல் அமர்வுகள் என்பனவற்றை உள்ளடக்கிய கல்விசாரா பயிற்சி நெறிகள் வங்கியுடன் தொடர்புடைய குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் சம்பந்தப்பட்டவையாக காணப்பட்டன. 1993 இல் குறுகிய கால பயிற்சிகளுக்காக மொத்தம் 119 அலுவலர்கள் வெளிநாடு சென்றவேளையில் 137 அலுவலர்கள் உள்நாட்டு நிறுவனங்களில் நடாத்தப்பட்ட பயிற்சி நெறிகள், கருத்தரங்குகள் என்பனவற்றில் பங்குபற்றியதுடன் 231 அலுவலர்கள் கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரியில் நடாத்தப்பட்ட பயிற்சி நெறிகளில் பங்குபற்றினர்.

சில வகையான ஊழியர்களின் பதவி உயர்விற்கான பரீட்சைகளையும் உயர் பதவி அலுவலர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சைகளையும் திணைக்களம் தொடர்ந்து நடாத்தியது. சில திருத்தங்கள் முடிவுறாதிருப்பதன் காரணமாக உயர்பதவிக்கான வினைத்திறன்காண் பரீட்சை 1993 நவெம்பர் / திசெம்பரில் நடத்தப்படவில்லை. திருத்தங்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் பரீட்சை மிகவிரைவில் நடாத்தப்படவுள்ளது.

## முகாமைத்துவக் கணக்காய்வு

1993 இல் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம் அதனது வேலை நிகழ்ச்சித் திட்டத்திற்கு இணங்க, மாத்தறைப் பிரதேச அலுவலகத்தின் நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட விரிவான கணக்காய்வு ஒன்று உட்பட வங்கியின் பலதரப்பட்ட திணைக்களங்களில் கணக்காய்வுகளை மேற்கொண்டது. இக்கணக்காய்வுகளின்போது

வங்கியின் விதிகள், ஒழுங்குகள் என்பனவற்றில் குறித்துரைக்கப்பட்டுள்ள செயல்முறைக்கு இசைவாக நடந்துகொள்வதில் காணப்படும் குறைபாடுகளை எடுத்துக் காட்டுவதில் கவனம் செலுத்தப்பட்டது.

கணக்காய்வுப் பணிகளுக்கு மேலதிகமாக திணைக்களத்தின் முகாமைத்துவப் பணிகள் பிரிவு வங்கியின் முகாமைத்துவம் தொடர்பான விடயங்களில் பல முக்கிய ஆய்வுகளையும் அளவீடுகளையும் மேற்கொண்டது.

இவ்வாய்வுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தன.

1. தகவல் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட கருத்தரங்கு நிகழ்ச்சித் திட்டங்களின் செலவுப் பயன்பாட்டுப் பகுப்பாய்வு.
2. நாணயத் திணைக்களத்தின் அலுவலர் தேவைப்பாடுகள்.
3. உயர்பதவி – அல்லா வகுப்பு தரம் 1 இன் தொழில் நிலைப்பிரிவு சம்பந்தமான மீளாய்வு.
4. நாணய அரும்பொருட் காட்சிச்சாலை தொழிற்பாட்டுச் செலவு மதிப்பீடு.
5. மத்திய வங்கியின் ஓட்டுநர்களுக்கு மாற்றுப் பணிக்காலம் மற்றும் பிழைப்பூதிய மேலதிக நேரக் கொடுப்பனவுகள்.
6. இலங்கை வங்கியாளர் நிறுவனத்தின் சில நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான கணக்காய்வு.
7. தரவுச் செயல் முறைத் திணைக்களத்தின் அலுவலர் தேவைப்பாடுகள்.
8. தகவல் திணைக்களத்தின் அமைப்பு முறையின் மீளாய்வு.
9. பதவி நிலை வகுப்பு தரம் 1 இன் ஆட்சேர்ப்பிற்கான தேர்வுமுறை தொடர்பான மீளாய்வு.
10. மத்திய வங்கியில் அமைய மற்றும் ஒப்பந்த ஊழியர்களுக்கு நிரந்தர நிலைமையினை வழங்குதல்.
11. தலைமையகக் கட்டடத்தில் அமைந்துள்ள பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியின் விற்பனை நிலைய கணக்காய்வு.

## பணிமனை

மத்திய வங்கிப் பணிமனையின் மரபுவழிப் பேணல் நடவடிக்கை மற்றும் அதனை ஒழுங்காக வைத்திருத்தல் என்பனவற்றிற்கு மேலதிகமாக, 1993 இல் திணைக்களம் பின்வரும் நிருமாண செயற்றிட்டங்களைக் கையாண்டது.

### 1. நுவரெலியா

1993 இல் நிருமாண வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருந்த 15 அறைகளைக் கொண்ட விடுமுறைக் கால இல்லம் 1994 ஏப்பிறலில் பயன்படுத்தக் கூடுமானதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## 2. இராசகிரிய

வேலைத்தலத்திற்கு அருகில் கட்டப்படும் புதிய இரண்டு மாடிக்கட்டடத்தின் இதுவரை பிற்போடப்பட்டிருந்த நிருமாண வேலைகள் 1993 ஒற்றோபரில் ஆரம்பிக்கப்பட்டன. 1994 இறுதியில் நிருமாண வேலைகள் முற்றுப்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## 3. கதிர்காமம்

1993 இறுதியில் 3 படுக்கையறைகளைக் கொண்ட சுற்றுலா பணிமனையின் நிருமாண வேலைகள் முற்றுப்பெற்றிருந்தன. இதே பணிமனையில் நிறுவப்படவுள்ள யாத்திரிகர் விடுதியும் மொனராகலை மாவட்ட பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியின் கிளை அலுவலகமும் 1994 இன் முதலாம் காலாண்டில் முற்றுப்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. யாத்திரிகர் விடுதி ஒவ்வொரு அலகுக்கும் இரண்டு இரட்டை அறைகளைக் கொண்ட 3 அலகுகளைக் கொண்டுள்ள வேளையில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிக்கிளை அலுவலகம் 1,900 சதுரஅடி நிலப்பரப்பைக் கொண்டிருக்கும்.

# நலன்புரி

வங்கியினால் அதனது ஊழியர்களுக்கு பின்வரும் நலன்புரிச் சலுகைகள் தொடர்ந்து வழங்கப்பட்டன.

1. வீடமைப்புக் கடன் திட்டம்
2. அலுவலர் நன்மைகள் திட்டம்
3. ஊர்திகள் கடன் திட்டம்
4. வைத்திய நன்மைகள் திட்டம்
5. ஊழியர் சேமநிதியக் கடன் திட்டம்
6. மத்திய வங்கி உணவகம்
7. மத்திய வங்கி வைத்திய நிலையம்

1993 இல் வீடமைப்புக் கடன்கள் உட்பட நலன்புரி வசதிகள் பெருமளவு விரிவாக்கப்பட்டன.

மத்திய வங்கியின் உணவகம், ஊழியர்களுக்கு செலவு விலையில் தொடர்ந்து காலை உணவையும் மதிய உணவையும் வழங்கிவருகின்றது. வங்கியின் அனைத்து திணைக்களங்களினதும் அனைத்து அலுவலர்களுக்கும் காலையிலும் மாலையிலும் தேநீர் வழங்கப்படுகின்றது. உணவகம் அலுவல்சார் நிகழ்ச்சியில் உணவு பரிமாறல் பணிகளையும் வழங்கியுள்ளது.

அனைத்து வேலை நாட்களிலும் அலுவலக நேரத்தில் வங்கியின் வைத்திய நிலையம் வைத்தியர் ஒருவரைக்கொண்டுள்ளது. மருந்துச்சாலையில் அத்தியாவசிய மருந்துகள் கையிருப்பில் உள்ளன. வங்கி ஊழியர்களுக்கு வழங்கப்படும் பணிகளின் எல்லையை விரிவுபடுத்துவதற்காக 1993 இல் வைத்திய நிலையத்துக்கு சில நவீன நோய்க்கண்டுபிடிப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

## பாதுகாப்புப் பணிகள்

பணிமனைப் பணிப்பாளரின் கீழ் இயங்கி வந்த பாதுகாப்புப் பணிகள் பிரிவு திணைக்களமொன்றாகத் தரமுயர்த்தப்பட்டு 1992.05.13 இல் பாதுகாப்புப்பணிகள் திணைக்களம் எனப் பெயரிடப்பட்டது.

1993 இல் திணைக்களத்தின் வேலை நிகழ்ச்சித் திட்டத்திற்கமைய, வாகன நிறுத்துமிடங்கள் உட்பட மத்திய வங்கிக் கட்டடம் இராசகிரிய கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி, மாத்தறை, அநுராதபுரம், மாத்தளை, பிரதேச அலுவலகங்கள், கண்டியிலுள்ள காணி மற்றும் வங்கியின் பிரதான கட்டடத்துக்கு வெளியேயான சில திணைக்களங்கள் என்பனவற்றிற்கு பாதுகாப்பு வழங்கியது. ஆளுநரின் இல்லத்திற்கும் நிதி அமைச்சின் வங்கித் தொழில் பொருளாதார விடயங்கள் ஆலோசகரின் இல்லத்திற்கும் அது பாதுகாப்பு வழங்கியது. மேலதிகமாக வங்கியிலிருந்து காசு, தங்கம் என்பனவற்றை கொண்டு செல்வதற்கான பாதுகாப்பை வழங்குவதற்கும் பயணம்செய்யும்போது வங்கியின் மூத்த அலுவலர்கள், உலக வங்கி மற்றும் பன்னாட்டு நாணய நிதி அலுவலர்கள் போன்றோருக்கும் பாதுகாப்பு வழங்குவதற்கும் திணைக்களம் பொறுப்பேற்றது. திணைக்களத்தின் பாதுகாப்பு ஆளணியினரின் திறமையினையும் அறிவையும் அதிகரிப்பதற்காகப் பல பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

## ஆளணி

ஆளுநர் திரு. எச். பீ. திசநாயக்க 1993இல் பின்வரும் மாநாடுகளிலும் கூட்டங்களிலும் கலந்துகொண்டார்.

1. வாசிங்டன் டீசியில் நடைபெற்ற பன்னாட்டு நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் மூத்த அலுவலர்களின் கூட்டம்.

2. தென்கொரியாவின் சீயோலில் நடைபெற்ற தென்கிழக்காசிய மத்திய வங்கி ஆளுநர்களது 28 ஆவது மாநாடு.

3. தாய்லாந்தின் பாங்கொக்கிலுள்ள அப்ரகா செயலகத்திற்கு அப்ரகாவின் தலைவர் என்ற முறையில் சென்று அதன் செயலாளர் நாயகத்துடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்.

4. மணிலாவிலுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் மற்றும் மூத்த அலுவலர்களுடனான கலந்துரையாடல்.

5. பாங்கொக்கிலுள்ள அப்ரகாவின் 29 ஆவது நிறைவேற்றுக் குழுக் கூட்டம்.

6. வங்காளதேசத்தின் டாக்காவில் நடைபெற்ற ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் 21 ஆவது சபைக் கூட்டம்.

7. வாசிங்டன் டீசியில் நடைபெற்ற பன்னாட்டு நாணய நிதியம்/உலக வங்கியின் ஆளுநர்கள் சபையின் ஆண்டுக் கூட்டங்கள்.

8. கராச்சியில் நடைபெற்ற தென்கிழக்காசிய மத்திய வங்கி ஆளுநர்களின் 20 ஆவது குழுக் கூட்டம்.

ஆளுநர் இலங்கையில் இல்லாத சமயம் மூத்த துணை ஆளுநர் திரு. ஏ. எஸ். ஜயவர்த்தன வங்கியின் முதன்மை நிறைவேற்று அலுவலராகவும், நாணயச் சபையின் தலைவராகவும் தொழிற்பட்ட வேளையில் மேலேயுள்ள (1) கூட்டம் தொடர்பாக ஆளுநர் இலங்கையிலில்லாத சமயம் துணை ஆளுநர் முனைவர் எஸ். ரீ. ஜீ. பர்னாந்து மூத்த துணை ஆளுநராகவும் நாணயச் சபையின் தலைவராகவும் செயற்பட்டார்.

**நியமனங்கள்**

1. திரு. ஏ. எஸ். ஜயவர்த்தன 1993 ஏப்பிறல் 1 ஆம் நாளிலிருந்து மூத்த துணை ஆளுநராக மத்திய வங்கிக்கு மீண்டார்.

2. வங்கித் தொழில் அபிவிருத்திப் பணிப்பாளர் திரு. ரி. எஸ். என். பர்னாந்து 1993 சனவரி 26 ஆம் நாளிலிருந்து பொதுப்படுகடன் கண்காணிப்பாளராகவும் பொதுப்படுகடன் பதிவாளராகவும் நியமிக்கப்பட்டார்.

3. நாணயக் கண்காணிப்பாளர் திரு. டபிள்யூ. ஏ. விஜயவர்த்தன 1993 பெப்புருவரி 10 ஆம் நாளிலிருந்து கிராமியக் கொடுகடன் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

4. மேலதிக முதன்மைக் கணக்காளர் திரு. ஆர். ஜி. ஜயரத்ன 1993 பெப்புருவரி 10 ஆம் நாளிலிருந்து நாணயக் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

5. கிராமியக் கொடுகடன் பணிப்பாளர் செல்வி சி. அபயநாயக்க 1993 பெப்புருவரி 10 ஆம் நாளிலிருந்து வங்கித் தொழில் அபிவிருத்திப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

6. வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வை மேலதிகப் பணிப்பாளர் திரு. ஜே. ஈ. டீ. கருணரத்ன 1993 பெப்புருவரி 10 ஆம் நாளிலிருந்து மேலதிக முதன்மைக் கணக்காளராக நியமிக்கப்பட்டார்.

7. துணைச் செயலாளர் திருமதி இசட். லொக்குகே 1993 பெப்புருவரி 15 ஆம் நாளிலிருந்து ஊழியர் சேமநிதியப் பதில் மேலதிகக் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

8. நலன்புரித் துணைப் பணிப்பாளர் திரு. பி. எம். லக்டாவெல 1993 பெப்புருவரி 15 ஆம் நாளிலிருந்து நிறுவன பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

9. நலன்புரிப் பணிப்பாளர் திரு. ரீ. எச். டீ. பீரிஸ் 1993 மே 20 ஆம் நாளிலிருந்து பணிமனைத் திணைக்களப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

10. பணிமனைப் பணிப்பாளர் திரு. எஸ். ரூபசிங்க 1993 மே 20 ஆம் நாள் தொடக்கம் நலன்புரிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

11. முனைவர் ஏ. ஜே. எம். சுகைர் திணைக்களத் தலைவர் பதவிக்கு சமமாக சிறப்பு அலுவலர் (மூலதனச் சந்தை அபிவிருத்தி) எனப்பதவி குறிக்கப்பட்டு 1993 செத்தெம்பர் 7 ஆம் நாளிலிருந்து பொதுப்படுகடன் திணைக்களத்துடன் இணைக்கப்பட்டுள்ளார்.

12. கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரிப் பணிப்பாளர் முனைவர் எம். யூ. ஏ. தென்னக்கோன் 1993 ஒற்றோபர் 1 ஆம் நாளிலிருந்து நிறைவேற்றுப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

13. பொருளாதார ஆராய்ச்சிப் பணிப்பாளர் முனைவர் டபிள்யூ. எட்டியாராச்சி 1993 ஒற்றோபர் 1 ஆம் நாளிலிருந்து நிறைவேற்றுப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

14. பயிற்சிப் பணிப்பாளர் திரு. எஸ். பட்டிவிதான 1993 ஒற்றோபர் 14 ஆம் நாளிலிருந்து கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

15. சிறப்பு அலுவலர் முனைவர் ஏ. ஜே. எம். சுகைர் 1993 ஒற்றோபர் 14 ஆம் நாளிலிருந்து பயிற்சிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

## விடுவிப்பிலுள்ள அலுவலர்கள் (1993 திசெம்பர் 31 இல் உள்ளவாறு)

பின்வரும் வங்கி அலுவலர்கள் இலங்கையிலுள்ள அமைச்சுக்கள், அரச திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள் என்பனவற்றிற்கும் பன்னாட்டு அமைப்புக்களுடன் செயற்படுவதற்காகவும் விடுவிக்கப்பட்டனர்.

முனைவர் எல். ஈ. என். பர்னாந்து வங்காள தேசம், பூட்டான், இந்தியா, இலங்கை என்பனவற்றிற்கான மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராகக் கடமையாற்றுவதற்காக பன்னாட்டு நாணய நிதியத்திற்கு.

திரு. வை. எம். டபிள்யூ. பீ. வீரசேகர தென் கிழக்காசிய மத்திய வங்கியின் ஆராய்ச்சிப் பயிற்சி நிலையத்திற்கு ஆராய்ச்சிப் பொருளியலாளராக.

முனைவர் ஏ. ஜி. கருணாசேன இலங்கையிலுள்ள உலகவங்கி வதிவுக் குழுவிற்கு

திரு. ஆர் ஏ. ஜயதிஸ்ஸ பன்னாட்டு நாணய நிதியத்திற்கு

முனைவர் (திருமதி) ஆர். ஜெயமகா நிதியமைச்சிற்கு

திருவாளர்கள் சி. லியனகே, டபிள்யூ. ஏ. டீ. ஈ. வீரசிங்க, என். எம். ஜயரத்ன. எல். ஏ. மகேந்திரன், கே. எம். அபயக்கோன், ரீ. டபிள்யூ. ஆரியரட்ண ஆகியோர் நிதியமைச்சிற்கு

திரு. எஸ். எம். ஏ. சிறிவர்தன செயற்றிட்ட மாவட்ட இணைப்பதிகாரியாக கடமையாற்றுவதற்காக புத்தளம் மாவட்டத்திலுள்ள சிறு வேளாண்மையாளர் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டத்திற்கு.

திரு. டீ. பீ. ஜயசூரிய பிரதம மந்திரியின் அலுவலகத்திற்கு

**ஒய்வுபெறல் / பதவிவிலகல்**

கிராமியக் கொடுகடன் மேலதிகப் பணிப்பாளர் திரு. டீ. எல். ஜயமான 1993 சனவரி 30 ஆம் நாள் தொடக்கம் மத்தியவங்கிப்பணியிலிருந்து ஓய்வுபெற்றார். ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மதியுரையாளர் முனைவர் என். ஈ. எச். சந்தரத்ன 1993 ஒற்றோபர் 16 ஆம் நாள் தொடக்கம் மத்திய வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.